www.tamilarangam.net

# மனிதம்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பழக்கம்

அன்புள்ள
உலக மனிதர்களுக்கு
வந்தனம்
சூரியன் இல்லாமலே
எமது மண்
பழகிவிட்டது
எமது உணர்வுகள்
சாவுக்குப் பழகி
விட்டன......
கொலைக்கும்
குண்டுக்கும் பயமில்லாமல்
எமதுடல்கள்
பழகிவிட்டன
வெடிச்சத்தம்
இப்போது எமக்கெல்லாம்
சீனவெடியைவிட
லேசாகவே கேட்கிறது
ருசிக்கும்
பொரியல், வறுவல்
இன்றி எமது நாவு
பழக்கப்பட்டு
இப்போது
கறிவேப்பிலை
மணக்கும்
சைவ உணவு
கேட்பதில்லை
பட்டினியும்
சாவும் .......
வாழ்வோடு ஒன்றென
நாம் எண்ணிக்
கொண்டு விட்டோம்
சுதந்திரம் இன்றியே
எமது வாழ்வை
கப்பங் கொடுத்தே
வாழப்பழகிக்
கொண்டோம்
வன்முறையும்
அடக்குமுறையும்
எமக்கு வாழ்க்கையோடு
ஒன்றாகப் பிணைந்து
விட்ட
இரவு பகல் போல
நாம் எண்ணிக்
கொள்கிறோம்
காக்கிச் சட்டைகளை
முந்தித்தான் கண்டவுடன்
இரத்தம் நின்று விடும்

இப்போது
காக்கிக் கலரைப்
பார்த்துப் பார்த்தே
எமது கண்கள்
பழகி விட்டன
சுடலைகள்
இப்போது பூட்டப்பட்டு
விட்டன
சுடலைக் குருவிகள்
கத்துவதே இல்லை
இன்று நேற்று
பிரேதங்களை
பாதையின் குழிகள்தான்
சுவீகரித்துக்
கொள்கின்றன
சவங்கள்
எரிப்பதைத்
தடுத்து விட்டார்கள்
மண்ணோடு தான்
சங்கமாக வேண்டுமாம்
அப்போது தான்
மண் பற்று
வருமாம்
பிள்ளைகளை
சாவுக்கும்
பச்சைப் பனைமட்டைக்கும்
காவு கொடுத்துப்பழகி
விட்டது
எங்கள்
பெத்த வயிறுகள்
அவைகள் இப்போ .......
எரிவதை விட்டும்
பழகிவிட்டன
கூட்டு மொத்தமாக
அராயகத்திற்கும்
அட்டூழியத்திற்கும்
" எல்-போட் " இன்றியே
நாம் பழகிவிட்டோம்
பிடிவாதத்திற்கும்
மனித வதைக்கும்
பழகி விட்டோம்
இப்படிக்கு
பிடிவாதமாக
ஈழத்தில் வாழும்
தமிழ் உடல்கள்

இளைய அப்துல்லா
( இலங்கை )

www.tamilarangam.net

# மனிதம்



எமது மண்ணில் .....
மக்களின் வாழ்வை நிர்ணயிக்கும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளை திரும்பிப்பார்க்கையில் >>>

* புலிகள்-இலங்கை இராணுவ தொடரும் மோதல்கள். ஒரே யுத்தத்தில் 500 க்கும் மேற்பட்ட யுவதிகளையும் இளைஞர்களையும் காவுகொடுத்த ஆனையிறவுச் சமர்.

* இனப்பிரச்சினையை 'தீர்க்க' தொண்டமான் முன்வைத்த யோசனைகளும், சிங்கள பேரினவாத சக்திகளிடம் எழும்பிய கூச்சல்களும்.

* மக்கள்மயமாக்கல் எனும் பெயரில் பெருந்தோட்டத்துறை தனியார்வசம் ஒப்படைக்கப்படும் அநியாயமும் அதுபற்றிய இருட்டடிப்புகளும்.

இந் நிகழ்வுகள் சென்ற ஆண்டின் பிரதான வரலாற்றுக் கடைவுகள் ஆகும்.

ஆம்! மலையக மக்களின் சமூக வாழ்வியல் பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்குகின்ற அரசின் 'அதிரடி' நடவடிக்கை மலையக மக்களை மாத்திரமல்ல முழு இலங்கை மக்களையுமே பாதிப்புக்குள்ளாக்கப் போகிறது.

ஆரம்பத்திலிருந்து தனியார் துறையாக இருந்த பெருந்தோட்டத்துறையானது 1972-75 காலப்பகுதியில் நிலச் சீர்திருத்தச் சட்டங்களினால் அரசுடமையாக்கப்பட்டது. இதனால் மலையகமக்கள் ஒருவித அடிமை வாழ்விலிருந்து மீட்கப்பட்டனர். இன்று, அதே

வாசகர்களே !
மனிதத்தை
கம்பியூட்டர் மூலம்
கொணர
எடுத்த முதல் முயற்சி
குறைந்த அனுபவம்
இதனை
தாமதப்படுத்திவிட்டது.

இம்முறை
தை-மாசி
பங்.-சித்.
1992
இணைந்த இதழாக
வெளியிட்டுள்ளோம்.

மீண்டும்
மனிதம்
இருமாதத்திற்கு
ஒருமுறை
தொடரும்.

www.tamilarangam.net

பெருந்தோட்டங்கள் அரசுக்கு நட்டத்தை உண்டுபண்ணுகின்றன என்று கூறி மீண்டும் தனியார் துறையிடம் கையளிப்பதற்கான முயற்சிகள் அனைத்தும் சென்ற நவம்பர் மாதம் 21ம் திகதி நிறைவு செய்யப்பட்டுவிட்டன.

அரசுடைமையாக இருந்தபோதே மலையக மக்கள்– குடும்பமாக வேலைசெய்தும்கூட–தமது ஜீவனைப் பிடிப்பதற்கான ஊதியத்தை மட்டுமே பெற்றுக்கொண்டனர். தனியார் துறையிடம் போனபின் குடும்பத்தில் அனைவர்க்கும் வேலை கிடைக்குமா?, முழுநேர வேலை செய்யமுடியுமா? போன்ற பிரச்சினைகள் முட்டிமோதக் காத்திருக்கின்றன. இது மலையக மக்களின் பொருளியல் பிரச்சனைகளை மாத்திரமல்ல சமூகப்பிரச்சனைகளையும் தோற்றுவிக்கும். வேலையற்றோர் தற்போது அரசுக்கு சொந்தமாக இருக்கும் அதே வசிப்பிடங்களில் வாழ்வதற்கு தனியார் துறை அங்கீகரிக்குமா? என்ற கேள்வி முன்எழுகின்றது.

ஏற்கனவே அரசு மருத்துவக் கல்லூரிகளை தனியாரிடம் கையளிக்க அரசு முனைந்ததும் வைத்தியர்களினதும் மாணவர்களினதும் எதிர்ப்பினால் அது தற்காலிகமாக கைவிடப்பட்டதும் மனம் கொள்ளத்தக்கது. இன்னும் அரச கூட்டுத்தாபனங்கள் திணைக்களங்கள் (போக்குவரத்து உட்பட) அனைத்தையும் தனியாரிடம் கையளிப்பதற்கான முயற்சி தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ஆயினும் வரப்போகும் எதிர்ப்பை மனதில் கொண்டு அரசு இதை பின்போட்டுக் கொண்டே செல்கிறது.

அதேவேளை 4 இலட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்களை உள்ளடக்கிய மலையக மக்களின் வாழ்க்கையில் அரசு எவ்வளவு துணிச்சலாக கைவைக்கின்றது. தொண்டமானை ஆயுட்காலத் தலைவராகக் கொண்ட தோ.தொ.காங்கிரசும் இவ்விடயங்களில் அரசுக்கு ஆதரவாக செயற்படுவதிலும், இச் செய்திகளை மக்களிற்கு எட்டாமல் வைத்திருப்பதிலுமே கவனம் செலுத்துகிறது.

புலிகளுக்கும் மலையக மக்களின் ஒரே தலைவன் தொண்டமானிற்குமிடையில் ஓர் ஒற்றுமை உண்டு. ‘தந்திரோபாயங்களை’ கையாள்வதில் இந்த ஒற்றுமை. புலிகளின் மக்களுக்கெதிரான செயற்பாடுகள் மக்களினால் ஜீரணிக்க முடியாமல், புலிகள்மீது மக்களிற்கு வெறுப்பு ஏற்படும் சந்தர்பங்களில் மக்களின் கவனத்தை திசைதிருப்ப புலிகள் ஏதாவது அதிரடித் தாக்குதல்களில் ஈடுபடுவர். இது புலிகளின் வெளுத்துப்போன தந்திரோபாயம்

வாசகர்களே
விமர்சனங்களையும்
ஆக்கங்களையும்
வரவேற்கிறோம்.

Nur für Freundkreis

MANITHAM
POSTFACH 12
3000 BERN
SWITZERLAND



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொண்டமானோ நவம்பர் மாதம் அரசு கொடுத்த அதிரடித்தாக் குதலில் திணறிப்போகும் மலையக மக்களின் கவனத்தை திசை திருப்பவும், தன்மீதான 'நற்பெயரை' பாதுகாத்து கொள்ளவும் முன்கூட்டியே 'தமிழ் மக்களின் பிரச்சனைக்கான தீர்வு' என்ற நாடகத்தை அரங்கேற்றி தேசம் முழுவதினதும் கவனத்தை ஈர்த்துக் கொண்டார். சொந்த மக்களின் வாழ்வு பறிபோய்கொண்டிருக்கையில் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்கள் மீதான அவரது இத் திடீர் கரிசனை குறித்து அவரை அறிந்தவர்கள் ஆச்சரியப் படுலதற்கில்லை. பிரஜாவுரிமை போராட்டத்தின்போது தன்னெழுச்சியான மலையக மக்களின் போராட்டங்கள் எழுந்துவிடாமல் பார்த்துக்கொண்டவர். தங்களது காணிகள் வீடுகள் சிங்களக் காடையர்களால் சூறையாடப்பட்டபோது தற்காப்புப் போராட்டங்களில் குதித்த மலையக இளைஞர்களிடம் 'பயங்கரவாதம்' என பூச்சாண்டி காட்டி அமைதிப் பிரார்த்தனை செய்யும்படி கோரியவர். தனக்கெதிரான மாற்றுத்தலைமை மலையகத்தில் ஊருவாகிவிடாமல் பார்த்துக்கொள்ள சதி நடவடிக்கை மூலமும் அரசின் துணையுடனும் முயன்று கொண்டிருப்பவர். மலையக மக்கள் முன்னணியின் தலைவர்கள் கைது செய்யப்பட்டமை இதன் பின்னணியில் பார்க்ககூடியதே.

மலையக மக்களின் வாழ்க்கை பறிபோகும் இவ் அநீதிக்கு எதிரான போராட்டங்கள் தொண்டமானின் கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதங்களையும் மீறி வெடிக்கும் என அஞ்சியோ என்னவோ புலிகளுடன் தொடர்பு இருப்பதாக காரணம் காட்டி மலையக இளைஞர்கள் கைது செய்யப்படுகின்றனர். ஆயினும் தன்னைமீறி போகாமல் மலையகத்தை கையில் வைத்திருக்க முனையும் தொண்டாவின் சூழ்ச்சிகளையும் கடந்து மக்களின் போராட்டங்கள் வெடித்துக் கிழம்புமா? அல்லது மீண்டும் தொண்டமானின் 'அமைதிவேள்வியில்' மலையகமக்கள் பலியாவார்களா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.


* சந்தா விபரம் *
தனிப்பிரதி 3 SFr.
ஒரு வருடம் 22 SFr.
ஐரோப்பிய நாடுகள்
25 SFr.
தபால் செலவு உட்பட.

வங்கிக்கணக்கு இல.
Spar Konto
0094-157146-60-1

வங்கி முகவரி
"Bücher Verkauf"
Schweizerische
Kreditanstalt
Switzerland




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என்று மடியும் எங்கள்........

சனிக்கிழமை என்றுலே Migros இல் நல்லூர்த் தேர்த் திருவிழாவுக்கு நின்றமாதிரிச் சனம் நெரிச லாகவே இருக்கும். நேரமும் 3 1/2மணியாகிவிட்ட து. 4 மணிக்குக் கடை பூட்டி விடுவார்கள். அதற்கு ள் சாமான்களை வாங்கி விட வேண்டும் என்று அவ சர அவசரமாக வண்டிலை இழுத்துச் சாமான் எடுத் தேன்

மரக்கறி எடுப்பதற்காக மரக்கறி இருக்கும் இடத்திற்குச் சென்றேன் சென்றபோது எமது பெண் ஒருத்தி என்னைப் பார்த்துச் சிரித்தாள். என்றுல் யார் என்று அடையாளம் காண முடியவில்லை. எனக் கோ அவளை ஏற்கனவே அறிமுகம் ஆனவள் போல் இருந்தது. அவள் என்னை அண்மித்த போது நிறை ய ஆச்சரியப்பட்டேன். அவள் எனது பள்ளிச்சினேகி தி கீதா என்பதைக் கண்டு. நிறைய மாறிப் போய் இருந்தாள். வீங்கிப் பெருத்து ஒரு செட்டி வீட்டுப் பெண்போல் தோற்றமளித்தாள். நானே அவளிடம் கதை கேட்டேன்.

<< ஏய் கீதா எங்கே இருக்கிருய் ? >>
<< நான் Burgdorf வில் இருக்கிறேன் >>
<< நீ எங்கே இருக்கிருயடி ? >>
<< நான் இங்குதான் Bern இல் இருக்கிறேன். >>
<< இங்கு என்ன செய்து கொண்டு இருக்கிருய் >>
<< மொழி படிக்கிருயா ? வேலைக்குப் போறனி யோ ? >>
பதில் அளிக்காது சிரித்தாள்.
<< ஏன் சிரிக்கிருய் ?>>
<< வேலைக்குப் போறனியோ என்று கேட்டாய் அதற்குத்தான் சிரித்தனுன். >>
<< என்னத்திற்காக ?
என்னுடைய கணவருக்கு என்னை வேலைக்கு விட விருப்பமில்லை. >>
<< நீ வேலை செய்தால் உனக்கு நல்லதுதானே >>
<< வீட்டு வேலை குழந்தையோடையே நேரம் போ குது. இதுக்கு மிஞ்சி நேரம் எங்கே?
ஏன் நான் வேலை செய்ய வேணும் ?என்னுடைய கணவர் என்னை ராணி மாதிரித்தானே வைத் திருக்கிறர். >>

கதையைத் திசை திருப்பி என்னைச் சுகமாய் இரு க்கிறியே எனக் கேட்டாள். நேரமும் 3.50 ஆகிவிட் டது. கடையும் பூட்டப் போகுது. எனது ரெலிபோன் நம்பரைத் தரும்படியும் என்னையும் எனது கணவரை யும் தங்கள் வீட்டுக்கு வரும்படியும் தனது ரெலிபோ ன் நம்பரையும் விலாசத்தையும் தந்து என்னிடம் இ ருந்து விடைபெற்ருள். நானும் ஐந்து நிமிடத்துக்கு ள் றெயின் எடுக்க வேணும் என ஓடிச்சென்றேன்.

றெயினுக்குள் இருக்கின்றேன் ஆனுல் என் சிந்த னை முழுவதும் கீதாவின் பக்கம் திசை திரும்பி யது. அவள் என்னேடு படிக்கும் போது கதைத்த கதைக்கும் இப்போ கதைக்கும் கதைக்கும் வித்தி யாசமாக இருந்தது. இப்பிடியெல்லாம் கதைத்த கீ தாவா இப்படிப் பதில் சொல்லிப் போட்டுப் போருள். அவள் படிக்கும் போது சொன்ன வார்த்தைகள் ஒவ் வொன்றும் என்னைச் சிந்திக்கச் செய்தது.

நான் சீதனம் கொடுத்துக் கலியாணம் செய்யமாட் டேன். வீட்டு வேலை, குழந்தை பராமரிப்பு இருவரு ம் சமஒத்துழைப்புடன் செய்ய வேணும் என எங்களுக் கெல்லாம் புத்திமதி சொல்லி விட்டு இப்போ தான் என்னத்திற்காக வேலை செய்ய வேணும் என்று என் னிடம் கேட்கிருள்.

இவள் மட்டுமல்ல இப்படி எம் பெண்கள் பலரி டம் ஆழப்பதிந்திருக்கும் சிந்தனைகள்.எங்களை எம து கணவர்மார் ராணி மாதிரித்தானே வைத்திருக் கிறுர்கள். நாங்கள் ஏன் வேலைக்குப் போக வேண்டு ம் என்று சொல்லித் தங்களுக்குள் திருப்திப்பட்டுக் கொள்கின்றனர்.

வேலைக்குப் போவதால் பொருளாதார வருவா ய் கிடைக்கும் என்று ஒருபுறமும், மறுபுறம் பெண்க ள் வேலைக்குப் போருல் விடுதலை கிடைத்து விடு மென்றும் வேலைக்குப் போகும் பெண்களைப் பற்றி இரண்டு விதமான கருத்துக்கள் மேலெழுந்து நிற்கி ன்றன.

உண்மையில் பெண்கள் வேலைக்குப் போவதா ல் பொருளாதாரத்தில் சுயகாலில் நிற்க வாய்ப்பு உ ண்டு தான். அதேவேளை வேலைக்குப் போகும் பெ ண்களுக்கு சுதந்திரம் கிடைக்கும் என நினைப்போ மாருல் வேலைக்குப் போகும் இலங்கை, இந்திய உ ழைப்பாளிப் பெண்கள் விடுதலை பெற்றுவிட்டார்கள் என்று கருதலாமா ?

எனது சினேகிதி கீதா போன்று எத்தனை யோ எமது பெண்கள் கணவர்மார் தமது தே வைகளைப் பூர்த்தி செய்கிறுர்கள் தானே தாம் எத ற்காக வேலை செய்ய வேண்டும் என்று சுயதிருப்தி அடைந்து வேலைக்குப் போவதால் கிடைக்கக்கூடிய நன்மைகள் என்ன என்பதைப் பார்க்க தவறிவிடுகி ருர்கள்.

அதே வேளை பல்லாயிரக்கணக்கான மைலு க்கப்பால் இடம் பெயர்ந்து இருக்கும் எமது ஆண் சமூகத்தில் கூட வேலைக்குப் போகும் பெண்கள் பற்றிக் காலம் காலமாய் அடிமனதில் ஊறிய கரு த்தே இன்னமும் நிலவுகின்றது.

பெண்கள் வேலைக்குச் செல்வது ஆண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களுக்குக் கெளரவக்குறைவு. பின்பு ஆண்களுக்கும் அடங்கமாட்டார்கள் என்பதோடு சமூகக் கட்டுப்பாட்

டை உடைத்து எறிவார்கள் என்ற அச்சம் எல்லாவற்றிற்கும் மேலாக இருக்கிறது.தகப்பன்,புருசன் பிள்ளை என்ற கூட்டிற்குள் முழுமையாக அடைபட்டு இருக்கும் எமது பெண்கள் வேலைக்குச் செல்லும் போது இந்தக் கூட்டிலிருந்து ஓரளவு விடுபட்டு வெளி உலகத்தை தமது சொந்த விழிகளால் பார்க்க தொடங்குகிறார்கள். மனிதர்களுக்கு இடையிலான சிக்கல்கள், கலாச்சார முரண்பாடுகள் என்று இன்னும் பல சமூக நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கிறார்கள்.

வேலைக்குப் போற பெண்கள் உழைப்பாளிப் பெண்ணுகவும் குடும்பப் பெண்ணுகவும் அனுபவிக்கின்ற வேதனையை இரட்டைச் சுமையை நாம் பார்க்கத் தவறக் கூடாது.

குடும்பப்பெண் என்னும் போது வீட்டுவேலை முழுவதும் பெண்ணே செய்ய வேண்டிய நிர்ப்பந்தமே இன்று வரை நிலவுகின்றது. வெளிநாடுகளில் வாழும் எமது பெண்கள் இந்த நிர்ப்பந்தத்தில் இருந்து ஓரளவு விடுபட்டு இருக்கிறார்கள் தான்.

ஆயினும் இன்றைய உலகின் வளர்ச்சியோடு ஒப்பிடும் போது நாம் வெள்நாடுகளில் வாழ்ந்தாலும் குறுகிய வேலிகளுக்குள் எமது சிந்தனைகளை மழுங்கடித்துக் கொண்டு இருக்கிறோம். இவர்களில் ஒருத்தி தான் கீதா. எமது பெண்கள் சிந்திக்கவும் கற்கவும் நிறையவே இருக்கின்றது.

என் சிந்தனையை இடைநிறுத்தியது நான் இறங்க வேண்டிய குட்டி பாணவ் (புகையிரதநிலையம் ) சாமான் பாக் இரண்டையும் இரு கையில் காவியபடி பனி படிந்த றோட்டில் நிதானமாய்க் கால் பதித்தேன்.

. மகாலட்சுமி .

## சபாஷ்!!

முன்னைய சோவியத்யூனியலிருந்து பிரிந்த சுதந்திரக் குடியரசுகளை சீன அரசு அங்கீகரிப்பதுடன் அவர்களை சோசலிசப்பாதையில் அழைத்துச்செல்ல உத்தியோக பூர்வ தொடர்புகளை மேற்கொள்ளப் போவதாக சீனப்பிரதமர் லிபெங் ( Lipeng ) சீன அரசு பத்திரிகையில் தெரிவித்துள்ளார்.

# நிமிர்ந்து நிற்கும் முகங்கள்

அப்புவிற்கு
கஞ்சி கொண்டு வரும்
சிறுமிகளும்,
குண்டுமணி பொறுக்க வரும்
குழந்தைகளும்
தலைக் கறுப்பு தெரிவதே
அத்தி பூத்தாற் போல்

தறைகள் தரிசுகளாய்
கோரையும் நெருஞ்சியும்
விளைநிலமாய்
ஏன்–
தென்னையும் சோடை பாய்ந்து
குருத்து கருகுகையிலும்
தண்ணி ஊத்தாது
கோடிப்புறத்தில்
காய்த்து நிற்கும்
கறிமுருங்கைகளும்
பனைகளும்
தைப்பொங்கலுக்கும்,
சித்திரை வருடத்திற்கும்
பிள்ளையார் பிடிக்கமட்டும் காத்திராமல்
எப்போதும் செழித்து நிற்கும்
அறுகம் புல்லும்
நிறுத்திய போக்குவரத்து
காவுக்கெடு அற்று தொடர்கையில்
காலதாமதமாய்
வீட்டிலே
பிரசவித்த
தம்பிகளும் தங்கைகளும்
திண்ணையில்
ஓடி விளையாடுகையில்
இவற்றுக்கும் அப்பால்
இயற்கை அதன் பணியை
இட்டே செல்கிறது

எந்த அழிவினையும் தாங்கி
நிமிர்ந்து நிற்கும் முகங்களும்
எரிந்து போகாத அறுகம் புல்லும்
பூத்துக் குலுங்கும் முருங்கையும்
வாழ்வு
அதன்படியே தொடர்கையில்........

– வசந்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




வெளிநாட்டவர்களும், அகதிகளாக தஞ்சம் புகுந்தவர்களும் மேற்கு நாடுகளில், அச்சம்,பீதியின் மத்தியிலேயே வாழ்க்கை நடாத்தவேண்டிய நிர்ப்பந்தமாகிவிட்டது.கடந்த வருடத்திலும், இவ்வருட ஆரம்பத்திலும், சுவீற்சர்லாந்து, ஜேர்மனி,Skandinavia நாடுகளில் இடம்பெற்ற தீவைப்பு,துப்பாக்கிச்சூடுகள் தாக்குதல்கள் சான்றாகும்.

இன்று இப்புதிய நாஜிகள் அல்லது வலது தீவிரவாதிகள் ஓர் புதிய கோரிக்கையை முன்வைத்து ஒன்றிணைகின்றனர்."ஐரோப்பா வெள்ளை இனத்தவருக்கே! " என்பதே இவர்களின் கோரிக்கையாகும்.

இப் புதிய நாஜிகள் தனியே சண்டித்தனக்காரர்களை மட்டும் இணைத்துக்கொள்ளவில்லை. வெளிநாட்டவரை விரட்டவேண்டுமென எண்ணும் புத்திஜீவிகளையும் இணைத்துள்ளார்கள். இவர்களின் இப்புதிய முயற்சியை இச்சமூகத்தில் பெரும்பான்மையை வென்றெடுப்பதற்காக கட்சிகள், தேவாலயங்கள், பல் கலைக்கழகங்கள் ஏனைய சமூக அமைப்புக்களுக்குள் ஊடுருவுகின்றன. ஏற்கனவே வெளிநாட்டவர்மீதான எதிர்ப்பை நேரடியாக தெரிவித்தது போல் அல்லாமல் புதிய யுக்திகளை கையாள முன்வந்துள்ளனர்.

யூதர்களை நாஜிகள் நரவேட்டையாடும் போது"ஐந்து இலட்சம் வேலையற்றோர் மத்தியில் நாலு இலட்சம் யூதர்கள் உள்ளனர்" என்ற கோசத்தை முன்வைத்திருந்தனர். அதே போன்று இன்று Ausria வில் 14 இலட்சம் வேலையற்றோர் மத்தியில் 18 இலட்சம் வெளிநாட்டு வேலையாட்கள் உள்ளனர் என்பதனை வலதுதீவிரவாதிகள் கடுமையாக பிரச்சாரப்படுத்தி வருகின்றனர்.

மேலும் இவ்வலதுதீவிரவாதிகள் சமூகத்தில் ஊடுருவதற்காக கட்சிகளின் பெயர்களையும் வித்தியாசமாக அமைத்து வருகின்றனர். இவ்வகையில் Nouvel Droite, die Neue Recht,New Right Nuova Destra, என தத்தமது மொழிகளில் 'புதிய வலதுகள்' என பெயரிட்டுள்ளனர்.

இதே போன்று சுவிற்சர்லாந்தில் நடந்த தேர்தலில் Auto Partei (கார் கட்சி) எனும் வலதுதீவிரவாதிகளின் கட்சி கணிசமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றது. தேசிய நடவடிக்கைக்கட்சி (N.A) தனது பெயரையும் சுவிற்சர்லாந்து ஜனநாயகவாதிகள் என மாற்றிக்கொண்டது. கார் கட்சியின் வெற்றியைத்தொடர்ந்து அக்கட்சியானது மேலும் தனது பெயரை மாற்றமுனைந்து தோல்வி கண்டது.

பொருளாதார நெருக்கடிகளும், வேலையில்லாத்திண்டாட்டமும் இவ்வலதுசாரிக்கட்சிகள் வெற்றிபெறுவதற்கு அடிப்படையாக உள்ளது. ஐரோப்பிய நாடுகளில் நடைமுறையிலிருக்கும் சந்தைப்பொருளாதார அமைப்பும் தொழிலகங்களிலும் அரச நிறுவனங்களிலும் காணப்படும் அதிகாரப்போக்கும் மக்களை அன்னியப்படுத்துகிறது. இவையும் மக்களை மேலும் வலது தீவிரவாதிகளின் பக்கம் செல்லுவதற்குவழிவகுக்கின்றன என ஜேர்மனிய அரசியல் விமர்சகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகள் தமது பொருளாதார வளர்ச்சிக்கு வெளிநாட்டுத் தொழிலாளர்களைப் பயன்படுத்தியே மேல்நிலைக்கு வந்தார்கள். இதன்போது வெளிநாட்டுத் தொழிலாளர் தமது குறைந்த ஊதியத்தையும் குறைந்த ஓய்வு நேரத்தையும் கொடுத்து கசக்கி பிழியப்பட்டனர் என்பதனை இந் நாட்டு மக்கள் மறந்து விட்டனர்.

ஐரோப்பிய பொருளாதார சமூகம் மூன்றாம் உலக நாட்டு மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் பல தடுப்பு சட்டங்களை அமுல் படுத்த உள்ளது. இவ்வகையில் முக்கியமாக தொழில்வாய்ப்பு வழங்கும் போது ஐரோப்பியர்களுக்கே முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. அத்தோடு மூன்றாம் உலக நாட்டிலிருந்து வரும் ஒருவருக்கு தகுந்தகாரணமின்றி ஐரோப்பிய நாடு ஒன்றிற்கு அனுமதி வழங்கப்படவும் மாட்டாது. இந்நடவடிக்கைகள் ஐரோப்பியசமூகத்தின் பிறப்போடு வெளிநாட்டவரின் எதிர்காலத்தைகேள்விக்குறியுடன் நகர்த்தப்போகும் சமிக்ஞைகள் ஆகும்.

* இவற்றையெல்லாம் நாம் எத்தனைபேர் புரிந்து வைத்திருக்கிறோம் ?
* இந்த ஒடுக்குமுறைகள் எம்மை நேரடியாகவே தாக்கும்வரை பார்த்திருப்பதா ?
* இவற்றை எப்படி எதிர்கொள்ளப்போகிறோம் ?
* குறைந்தபட்சம்இவ்ஒடுக்குமுறைகளுக்கெதிரான (எதிர்ப்பு ஊர்வலம்) நடவடிக்கைகளில் எந்த அளவிற்குபங்குகொள்கிறோம் ?
* சமூகத்தில் அக்கறைகொண்டுள்ளவர்களும், ஜனநாயகத்திற்காக குரல்கொடுப்பவர்களும் விடுதலைக்காய் உண்டியல் குலுக்குவோரும்கூட எந்தளவில் இந்நடவடிக்கைகளில் பங்கு கொள்கிறோம்

ஐரோப்பாவிலுள்ள வெளிநாட்டவர்(அகதிகள் உட்பட) இக்கேள்விகளுக்கு விடைகாண முற்படாமல் வந்த அலுவலை பார்ப்பம் என்று சிந்தித்தோடு காலம் தள்ளுவோமானால் நவீன அடிமைகளாக மேற்குலக நாடுகளில் உலாவும் நிலையையும் தவிர்க்கமுடியாமல் போய்விடும்.

• ம.நரேந்திரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாருமற்ற இரவு

*சிறுகதை:*

நேரம் என்ன என்பது விளங்கவில்லை. வீடுகளின் விளக்குகள் அணைந்து கிடந்ததது. தூங்கி விழித்தவன் முகம் போல சோடியம் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தது. மெல்ல மெல்ல நடந்தாலும் அதன் அதிர்வுகள் மனசை என்னவோ செய்தது. சரக் சரக்கென்று இன்னொரு உருவம் கூட நடந்து வருவதைப் போல என்னை என் காலடிச் சத்தம் பயம் காட்டியது. சும்மாதான் "ஒண்ணுமில்ல ஒண்ணுமில்ல" என்று சமாதானப்படுத்த துணைக்கு ஆளேதும் இல்லை. ஏதாவது ஒரு கல்மீது கொஞ்சம் அமர்ந்து மனசை **ஆசுவாசம்** செய்யலாம் என்று நினைத்தேன். வீதியோரம் சுத்தம் இல்லா இடமாய் தெரிந்தது. இருளில் எதுதான் தெளிவாய் இருக்கிறது. சுத்தம் பற்றி யோசிக்க இப்போது எனக்குத்தான் என்ன அருகதை..! எனக்கு நானே வேடிக்கையாவதுதான் சமீபத்திய என் அனுபவமா? எதுவும் புரிபடவில்லை. வீதியின் ஓரம் இருந்த திட்டின் மேல் உட்கார்ந்தேன்.

எங்கே போவேன் எனக்கு யாரை தெரியும்? வீடற்றவர்கள் நாங்கள். வெறும் வீடு மட்டுமா இல்லை எதுவும் இல்லை.

**ஆமாம் எதுதான் இருக்கிறது. எதுவும் இல்லை.**

கடைசியாய் உயிரும் அது மென்று தின்னும் யோசனை**களும்** தவிர வேறு எதுவும் இல்லை.

நான் தமிழ் நாட்டுக்கு வராமலே இருந்திருக்கலாமோ இருக்கலாம். இன்னேரம் என் எல்லா சுவடுகளும் அழிக்கப்பட்டு மறைந்திருக்கலாம் அதுதான் நியாயமோ? சாவதுதான் வாழ்வின் நியாயம் என்றால் இந்த வாழ்வின் நோக்கம் என்ன? அதுவும் இதுவும்தான். எல்லாம் கலந்ததுதானே பின்னே என் ஜீவிதம் மட்டும் யாருக்கு வெல்லக்கட்டி நான்? அமமாகசு! இருக்கலாம். யாரையேனும் தாலி கட்டியிருந்தால் சில நாட்களுக்கேனும் வெல்லக்கட்டியாக இருந்திருக்கலாம். இனி யாருக்கு நான் வெல்லக்கட்டி கொஞ்சக் காலம் அன்னோடு விவாதித்தவர்களுக்கு நான் வெல்லக்கட்டி. பின்னர் வேப்பிலைக் கொத்து அய்யோ இவ்வளவுதானா?

குறுக்குத் தெருவிலிருந்து ஒரு வேன் திரும்பி என் மீது ஒளியையை வீசியெறிந்து ஓடியது. அது ஏதோ சினிமாக் கம்பனியின் வேன். உள்ளே நாலைந்து பேர் பாட்டுப் பாடியவாறே அமர்ந்திருந்தனர். பாட்டுப் பாடுவது அதுவும் இரவு வேளையில் பாட்டுப் பாடுவது எவ்வளவு சந்தோசமான காரியம் எவ்வளவோ இழப்புக்கள் எத்தனையோ கனவுகளின் பிணங்கள் எல்லாமே எனக்கு கிடைத்ததண்டனையா? சந்திராவின் குரலை இனி நான் எங்கே கேட்பேன். வெறும் குரலா அது உயிரின் ஜீவநாதம் என்பதை எப்படி வார்த்தைகளால் சொல்ல இயலும் அந்தக் குரலோடு போட்டியிடவே நான் புல்லாங்குழல் வாசிக்கப் பிரியப்பட்டேனே!

தூரத்தில் அண்ணா சிலையைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்த வெளிச்ச வெள்ளத்தில் ஒரு வெள்ளை வேன் வந்து நின்றது அதன் சப்தம் ஒரு பன்றி போல, காதை அடைத்தது. எமன் வந்துவிட்டான் பாசக் கயிறு விசினால் சரி. எல்லாம் அவ்வளவுதான். வேனின் ட்ரைவர் வண்டியிலிருந்து கீழிறங்கி அனிச்சையாய் சுற்றும் பார்த்துக் கொண்டு சுவரோரம் ஒன்னுக்கிருந்தான்.

www.tamilarangam.net

கண்ணை மூடிக் கொண்டிருந்தேன். உள்ளே என்னென்னவோ நிறக் கோடுகள் ஓடிக் கொண்டிருந்தன. என்ன கலர்கள் அதிகம் அதிகமும் சிவப்பு அதிகாரம்? இரத்தம் என்னை பிடித்திருப்பது என்ன மரண பயமா? உயிரின் மீதான ஆசைதான் என்னை உலுக்குகிறதா? எனில் நான் ஒரு பயந்தாங் கொள்ளியா? ச்சே நான் எதறகு இங்கே வந்தேன். பிழைப்புத் தேடி வந்தவன் அதை மட்டும் செய்யாமல் ஏன் இத்தனை ஆட்டம் ஆடி சிக்கலில் சிக்கிக் கொண்டேன் என் தவறுகள் எங்கே இருக்கிறது. நான் அவர்கள் சொன்னது போல நிசமாகவே தவறுதான் செய்கிறேனோ?

காலையில் செய்தி சொல்லும் போதே உண்மை என்னவென்று புரிந்து கொண்டாயிற்று. இனி இலங்கை அகதிகளுக்கும் போராளிகளுக்கும் பேதம் பார்ப்பது அரசு அகராதியில் இல்லை. ஈழத்தமிழர் பேசினால் கொலைகாரன், திருடன், நிமிசத்தில் வெடிகுண்டு செய்பவன், பெண்களை வசியம் செய்பவன், மொத்தமாய் தமிழ்ச் சினிமாவின் எல்லாக் கெட்ட குணங்களும் கொண்ட வில்லன்.

கடைசியிலும் கடைசியாக வேலிக் கடவை மூடிக் கொண்டு உள்ளே பார்த்தேன். அம்மா கட்டிலில் சாய்ந்த படி அழுகிறாள். அதுதான் செய்ய முடியும் அழப் பிறந்த யுகத்தின் அன்னையல்லவா? அழுவதுதான் இப்போதைய தர்மம். அண்ணன் புலிகளோடு சேர்ந்து காணமல் போன பின் அம்மா தன் சிரிப்பையும் சேர்த்து காணாமல் போக்கிக் கொண்டாள்.

"போவட்டுமா"

ம்..ம் முகம் திருப்பி முனகினாள்.

".... ..... .. " கொஞ்ச நேரம் என்ன பேசுவது என்றே புரியவில்லை. முற்றத்தைக் கடந்து வேலிப் படலையை மூடி வைத்துவிட்டு நடந்தான்



சென்னையில் பேசாமல் இருந்திருக்கலாம். இருந்திருக்க முடியுமா என்னால். அப்படி இருந்துதான் என்னத்தை சாதிக்கப் போகிறோம். பேசிப் பேசி மட்டும் என்ன கண்டு கொண்டோம் கண்டுகொண்டோம் எதுவும் இல்லை என்பதை என்பதுதான் உண்மையா?

இங்கே உட்கார்ந்து பேப்பர் படித்து ஆகாஸ்வாணி கேட்டு ஈழ நிலை பற்றி கருத்தரங்கில் பேசுவதுதான் எவ்வளவு உசிதமான வேலை!

அங்கே இருப்பவனின் மென்னியைப் பிடித்துத் துப்பும் பிரச்சனை பற்றி இவர்களறிவார்களா என்ன? எல்லாம் மோசம். சரி எதுதான் நல்லது?

- இல்லை நீங்கள் எதுசரி தவறு என்பதை கண்டு கொள்வதில் சிரத்தை இல்லாமல் இருக்கிறீர்கள் இருக்கட்டும் அதனால் என்ன?

- பொறுப்பின்றி பேசுபவர்களால் புரட்சிகர யுத்தம் சீரழிக்கப்படுகிறது. அடப்போங்கையா என்னமோ புதுசா கண்டு கொண்டீர்கள் . ஈழத்தின் பொறுப்பற்ற அராஜகம் பற்றி பேசுபவர்கள் தமிழ் நாட்டில் நடந்து கொள்ளும் முறை தெரியாதோ!

www.tamilarangam.net

- அதுசரி கணேசன். ஈழமோ தமிழ்நாடோ எங்கே என்றாலும் பொறுப்பாக நடந்து கொள்ளவேனும் என்பதே முறை.
எனக்கு சிரிப்பாய் வருகிறது தோழர்.
புரட்சி யுத்தத்தை ஏதோ பாடம் நடத்தி பாஸ் செய்தவர்கள் கூடி செய்வது போல இருக்கிறது உங்கள் நடவடிக்கை.
- நீங்கள் என்னதான் சொல்ல வருகின்றீர்கள்?
எதுவும் சொல்லவில்லை. தமிழ்நாட்டில் இருப்பவர்கள் புத்திசொல்லி நடக்குமளவுக்கு ஈழத்தில் யாருமில்லை.
- தமிழ்நாட்டுத் தமிழர்கள் முட்டாள்களா!
அதுபற்றி சரியாகத் தெரியவில்லை. தேவையெனில் ஆராயலாம். இப்போதைய ஈழத்தின் போக்கு சரி என்கிறீர்களா?
அதுவல்ல பிரச்சனை. சரி தப்பு என்கிற வரையறைகள் எப்போதே சின்னா பின்னமாகிவிட்டது. இங்கே உக்கார்ந்து கொண்டு பேனாவில் சண்டை செய்பவர்கள் ஈழத்தின் நிலைமையை கொஞ்சமும் உணராமல் கோட்பாடுகளை உயர்த்துகிற வேலையைத்தான் செய்கிறீர்கள்.
- கோட்பாடுகள் எதுவும் தேவையில்லையா?
எதுவும் அதனதன் அவசியத்தை பற்றியதுதான். கோட்பாடு வேண்டாம் என்று சொல்பவன் பைத்தியக்காரன். அதைப்பிடித்துத் தொங்குபவன் முட்டாள்.
சபாஸ்! தமிழ்நாட்டான் முட்டாள் என்கிறீர்கள். நீங்கள் எந்த இயக்கத்தை ஆதரிக்கிறீர்கள்?
தமிழ்நாட்டில் எதுசரி எதுதப்பு என்கிற முடிவுக்கு உடன் எந்த இளைஞனும் வர முடியவில்லையோ அதைவிட நூறு மடங்கு சிக்கல் ஈழத்தில் உள்ளது என்பதை உணருங்கள்.
- நீங்கள் குழம்பியது அல்லாமல் மற்றவர்களையும் சேர்த்துக் குழப்புகிறீர்கள்.
இருக்கலாம் தோழர். குழப்பான வாழ்க்கை அதைத்தான் கற்றுக் கொடுக்கும்.

- முதலில் நாங்கள் வெளியிட்ட பிரசுரங்களை படித்தீர்களா?
இல்லை
ஏன் நேரமில்லையா!
இல்லை பிடிக்கலை.
அதைப்படியுங்கள். மறுபடி சந்திக்கும் போது அதுபற்றி பேசுவோம்.
திரும்பத் திரும்ப அதைச் செய்துதான் ஆக வேண்டுமா நான்? ஆமாம் செய்துதான் ஆக வேண்டும். ஒரு சமூகம் சிதலமாவதை எவன் பார்த்திருக்க முடியும். கைகட்டி அமர்வதும் அழகா? எனில் எதன் பின் ஓடுவது. எது கானல்? எது நீர்? அங்கே துப்பாக்கி இருக்கிறது. இங்கே பேனாவும் பேப்பரும் இருக்கிறது. யுத்தம் யுத்தம்தானே?

தமிழ் அகம் ஆங்கிலத்தில் நிரம்பி வழியும் போது ஈழம்பற்றி புதுசாய் அக்கறைபட ஏதுமில்லை. 83 ன் துவக்கத்தில் கதாநாயகத்தனம் மேலோங்கி நின்றது. இப்போது வில்லத்தனம் பூசப்பட்டாயிற்று. என்ன நடக்கிறது எல்லாப்பக்கமும்? சினிமா இங்கே வாழ்க்கையாகி விட்டதா? ஒருவித இயலாமையா என்ன? இயலாமை எனக்குள்ளும் இருக்கிறதா? இருக்கும் நானும் சென்னை காற்றை சுவாசித்துக் கொண்டுதான் யோசிக்கிறேன்.

சிகரெட் இருந்தால் பிடிக்கலாம். ஏமாறுதல் வரும்போது இன்றொன்றை செலுத்தி பற்றுப் போகும்வேலைதான், சிகரெட். எல்லாக் கெட்ட பழக்கங்களும் எனக்கு தொற்றிக் கொண்டாயிற்று. ஒரு முறை விசாரனையில் இருக்கும் போது தமிழ்நாட்டுக்காரன் ஒருவனிடமிருந்து - பிட்பாக்கட் கைதி - கஞ்சாவும் அறிமுகம். ஏதோ ஒரு சொப்பனம் வேண்டி இருக்கிறது. நரகலில் கால்பாவி நிற்கும் போது நந்தவனம் பற்றி சொப்பனம்.

www.tamilarangam.net

நினைக் நினைக்க சிரிப்புத்தான். என்ன சிரிக்க இருக்கிறது? எல்லாம் சிரிப்பாய் சிரித்த பின்; என் சொந்த தவறு என்று என்ன இருக்கிறது? சும்மா நான் சோம்பிக் கிடப்பதால் என் சிந்தனைகள் தடுமாறுகிறதா என்ன? பாதுகாப்பு வளையத்துள் தான் என் வாழ்வை தீர்மானிக்க, வைத்திருக்க விரும்புகிறேனா? அய்யோ! எனக்குள் என்னதான் ஆனது?

பயம் பயம்பயம் பயம் பயம் பயம் பயம்

பைத்தியக்காரா! சாகப்பிறந்தவனே, ஏன் பயந்து சாகிறாய் நீ என்ன சாகவே சாகாத பட்சியா? வரம் வாங்கி வந்தவனா? சும்மா ஏன் அலட்டுகிறாய். சாவது உறுதி. அது எங்கே எவ்விடம் நின்று கொண்டு இருக்கிறது என்பதை யாரறிவர்.

திடீர் மின்னலாய் மூளைக்குள் யோசனை **கொதித்து** அவிந்தது. அம்மாவுக்கு கடிதம் எழுதி விட்டு போலிசில் சரணாகலாமா? சரண். என்ன கேவலமான வார்த்தை. சரண் புகுந்து வாழும் வாழ்வு வேணுமா எனக்கு? என் முன்னாள் தலைவர் பெருமான்களுக்கு இந்திய அரசு ராஜ மரியாதையுடன் பாதுகாப்புதரும். அது போல எனக்கும் உண்டா! தொண்டன் எப்போதும் எல்லாப் பிரதேசத்திலும் கொடி பிடிக்கவும் அடிபடவும் கொல்லப்படவும்தானே ஆனவன்!

பேண்ட் பாக்கட்டில் ஒரு பீடி உடைந்து கிடந்தது. அதன் பொடிகளை சேகரித்து எடுத்து பல்லவன் ரிக்கட் இரண்டை சுற்றி பீடி போல செய்து பற்ற வைத்துக் கொண்டேன்.

காற்று மட்டும் சுகமாய் இருந்தது. இப்போதைய ஆறுதல், இதுமட்டுமே. எவன் சுவாசித்த காற்று இது. எல்லா முகங்களையும் மரங்களையும் தொட்டு அலைந்து திரிந்து படர்ந்து என்னைச் சேர்கிறது. என்னிலிருந்து விடுபட்டு வேறு எவனையோ அடையத்தான் போகுகிறது. ஒவ்வொன்றும் அதனதன் **வேலையாய் இருக்கிறது வேறுஎன்னதான் செய்யமுடியும்** செய்வதே போதுமானது. என் வேலை என்ன? அதுவும் இப்போது சரணடைவதா? இல்லை பின் ஓடி ஒளிவதா எங்கே எங்கே போவேன் நான்? எனதறிவில் தத்துவ விசாரத்தின் மேல் லௌகீகம் எச்சமிட்டுப் போகிறது.

காலைல இருந்து உங்கள பார்க்கத்தான் வந்தேன் தோழர்!

– அப்படியா!

செய்தி கேட்டீர்களா!

– இல்லையே என்ன விசேசம்.

மறுபடியும் தமிழ் நாட்டில தேடுதல் வேட்டை ஆரம்பம் ஆயிருச்சுனு நெனைக்கேன், என்னோட வேல செஞ்ச சேந்தன், ராதாரவி ரண்டு பேரும் கைதாகி இருக்காங்க

– அடடே அப்படியா!

ஆமா அதுக்காகத்தான் உங்கள பாக்கலாமிட்டு பத்திரிகை ஆபீஸ் போனேன் ஒரு லெட்டர் எழுதி வெச்சுட்டு திரும்பி இங்கே வந்தேன்.

– இந்த மாதிரி நேரத்துல இங்க எதுக்கு வந்தீங்க?

குரலின் சாட்டை அதிர்ந்தது?

இல்ல வேற இடம் பார்க்கும் முன்னால கொஞ்ச நாட்கள் இங்க தங்கலாமிட்டு...!

– அது இல்ல நாங் கேட்டது நீங்க, இலங்கை ஆளுகளைபோலீஸ் தேடிட்டு இருக்கும் போது நீங்க இங்க வந்து நின்னா, இங்க இருக்கிறவங்களுக்கு பிரச்சனை ஆகாதா!

............... !!!

– நீங்க சும்மா சும்மா பிரச்சனைகள பெரிசு பண்றீங்க திருப்பிக் கேட்டா அமைதியா இருக்கிறீங்க செரி இனிமே

www.tamilarangam.net

நீங்க வர வேணாம்.
நான் ரூமுக்கு போக முடியாது தோழர்!
– பரவால்ல கைது செய்தா செய்யட்டுமே, எத்தனையோ பேர் கைதாகலையா! நீங்க கண்டிப்பா இங்க வரவேண்டாம்!

இவ்வளவுதானா நீங்களும் நீயுமா புருட்டஸ்! எத்தனை விதமாய் காட்சியாகி என்னுள் நிறைகிறீர்கள்! உங்கள் விவாதங்களில் அன்பும் அறமும் தத்தளிப்பதை எப்போது உணரப் போகிறீர்கள் நீங்கள் எல்லோரும்.

"தமிழுக்கு அமுதென்று பேர் இன்ப தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" சுசீலா பாதுகாப்பாய் நின்று கொண்டு எப்போதோ பாடிய பாட்டு மாடியிலிருந்து இறங்கி காதுகளை தொட்டது.
திரும்பவும் மனசுக்குள் சந்திரா வந்தாள். ஒரு சிரிப்பு அலையின் அசைவு போல தீர்க்கமான விழிகள். ஏன் சந்திரா திரும்ப திரும்ப எனக்குள் வருகிறாள். செத்துப் போன பின் அவர்களைப் பற்றியே ஏன் அதிகமும் சிந்திக்க தோனுகிறது. எனக்குள் என்னதான் நடக்கிறது. என்னை நானே புரிந்து கொண்டிருக்கிறேனா!
காலையில் எழும்போது மணி ஏழுக்கும் மேலாகி விட்டது. பக்கத்து வீட்டு லலிதா சாக் பீஸ் கோலம் போட்டு விட்டு – நாலு இழுப்பு இழுத்து விட்டு- நகர்கிறாள்.
நான் விழித்திருப்பதை கவனிக்கவில்லை. இன்னும் தூங்குவதை அக்கறையாக கவனித்துக் கொண்டு நாலு நாள் கழித்தாவது அவளம்மா இல்லாத நேரத்தில் கேட்பாள்.
"என்னாச்சு உடம்புக்கு சரியில்லையோ! ஏழு மணி வரைக்குமா தூங்குவாங்க" என்ன சொல்வேன் நான், எல்லாமே கேள்விக் குறி ஆன பின் நான் சொல்ல என்ன இருக்கிறது. அதிகமும் சினிமாப் பார்த்து, நாவல் படித்து கனவுகானும் இடையினப் பிரதிநிதி அவளிடம் இதைவிட வேறு என்னதான் பேச இருக்கு! திரும்பும் இடமெல்லாம் ஒரு கொக்கிதான் தொங்கிக் கொண்டிருக்கிறது.
ரூமுக்கு வந்த புதிதில் இவள் சேந்தனுக்குப் பிடித்தமான தேவதை; தேவதைதான், வேறென்ன. ஈர்ப்பு விசை மனசுக்குள் அழகான வார்த்தைகளை போட்டுக் கொலை செய்கிறது. பக்கத்து அறையில் மூன்று இளைஞர்கள் இருக்கும் இருப்புக்கு ஏற்ப இவளும் கொஞ்ச நாள் அழகு காட்டிப் பார்த்தாள். எத்தனை நாள் தாங்கும்? இதென்ன தமிழ் சினிமாவா? ஈயம் போன பித்தளைப் பாத்திரம் தான். வேறு என்ன இருக்கு கவர்ச்சியாய்! அவள் தன் எச்சரிக்கைகளுக்காக இப்போது பெருமிதப்பட்டுக் கொள்ளலாம். ஏதும் தப்புத் தண்டா நடக்காமல் இருந்ததற்காக:
இப்போ அண்டை வீட்டாருடன் எங்களது திருட்டு முழிபற்றியும் "ரகசிய நடவடிக்கைகள்" பற்றியும் தனது யூகங்களை ஒன்று திரட்டி கதையளக்கலாம். போலீஸ் வந்ததிலிருந்து எங்களது எல்லாப் பொருட்களையும் தூக்கிக் போனது வரை அவர்கள் பேசிக் களிக்கலாம்.
நினைக்க நினைக்க இந்த வாழ்வு சகிக்க முடியவில்லை விட்டு விடவும் முடியவில்லை. என் இருப்பு பற்றிய கேள்வி என்னை கொலை செய்கிறது. என்னை நான் புரிந்து கொண்டேனோ இல்லையா என்பதல்ல இப்போதைய பிரச்சனை எங்கே போய் தங்க என்னை பராமரிக்க அதுதான் முக்கியம். பஞ்சமனின் இழிவு போல ஈழத்தானும் ஆகிவிட்டான். இங்கே விவாதித்து முடிந்து விட்டது. இனி விவாதிக்க ஏதுமில்லை. என்னை அவர்களும் அவர்களை நானும் முடிந்தளவு தெரிந்து கொண்ட பின் இனி ஏதுமில்லை. கடற்கரை காதலர்கள் போல தத்துவ உபாசனையும் நிறைவு கொண்டாயிற்று!

www.tamilarangam.net

ஏன் இப்படி தமிழ் சூழல் சீரழிந்தது? சராசரியான தோழமை. கருத்து வேறுபாடுகளிடையே இருக்க மாட்டாதோ! ஒரு மித்த சிந்தனையில் சித்தாந்தத்தில் இருந்தவர்கள் கருத்து வேறுபாடு முகிழ்ந்த பின் எப்படி பங்காளிகளைவிடக் கேவலமானவர்களானார்கள். சொல்லக் கூசும் வார்த்தைகள் எப்படி புழங்க முடிகிறது. தத்துவப் போர் என்பது இதுதானா?

என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. சரிதான் அதெல்லாம் இருக்கட்டும். இப்போ என்ன செய்வது எதுவும் எனக்கு விளங்கா நிலையில் தமிழ் சூழல் பற்றிக் யோசிக்க எனக்கு என்ன அருகதை?

அம்மா சந்திரா அண்ணன் என்று எல்லோரும் அவரவர் மார்க்கத்தில் தெளிந்து நின்ற போது நான் மட்டும் ஏன் இப்படி ஆனேன். உண்மையைக் காணும் வேட்கையா? உண்மை எங்கே இருக்கிறது! "அது நகர்வதில்லை நகர்கிறது அது அருகே இருக்கிறது. மற்றும் தூரத்தில் இருக்கிறது" என்று உப நிடத்துக்கள் சொல்லிய மாதிரி சொல்லிவிட்டு அமரலாமா?

அண்ணன் இப்படி மனசுக்குள் ரணகளப்பட வேண்டாம் என்றுதான் துப்பாக்கிகளுடன் குடும்பம் நடத்துகிறானா? ரணம் ரணம்தான் பின்னே, எங்கே இல்லை அது! பிறப்பும் அழிவுந்தான் வாழ்வு ரத்தம் சிந்துவது உள்ளேயா வெளியேயா என்பதுதான் பிரச்சனை! என்னால் முடிவுகள் எதிலும் திருப்தி காண முடியவில்லை என்பது மட்டுமல்ல எந்த முடிவிலும் ஒட்டவும் முடியவில்லை என்ன செய்யட்டும்.

புலம்பல்காரனே பேடியே ஏன் புலம்பிச் சாகிறாய் நீ ஒரு பித்துக்குளி உன்னால் யாருக்குத்தான் என்ன நன்மை ஏதுமில்லை. நீ ஒரு சுத்த அழுகுணி. வேறென்ற சாவுக்குப் பயப்படும் கோழை.

கால் இரண்டும் மரத்துப் போனது எழுந்து நிற்கும் போது தள்ளாடியது. விர்ரென்று ஏறிய உஷ்ணம் மூளையிலிருந்து பாதம்வரை இறங்கி கிறுகிறுத்தது. வீட்டுக்குள்ளிலிருந்து சின்னத் தொண்டையில் ஒருநாய் குரைத்துக்கொண்டு அருகே ஓடி வந்தது வேகவேகமான நடைக்கு பசித்த வயிறு ஒத்துழைக்க மறுத்தது. கிறுகிறுப்பின் சுதி ஏறிக் கொண்டே போனது. மறுபடியும் கொஞ்சம் ஓட முயன்று கீழே விழுந்தேன். பக்கத்து வீட்டு மொட்டை மாடியிலிருந்து யாரோ பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

**கோவிந்தராஜ்**

---

91 இல் உலகம் முழுவதும் சிறியதும், பெரியது மாக 46 யுத்தங்கள் நிகழ்ந்துள்ளதென ஜேர்மனிய பல்கலைக்கழகமொன்றின் புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது. இதில் முதலாமிடத்தை வளைகுடா யுத்தமும், இரண்டாமிடத்தை 6 மாதங்களுக்கு மேலாக நீடித்த யூகோசெலாவியா யுத்தமும் எடுத்துக் கொள்கிறது.

---

யுத்த செய்திகளை நேரடியாக வெளிக் கொணரும் பொருட்டு, தாக்குதல் சம்பவங்களை நேரடியாக பார்த்து எழுத சென்றவர்களும், அமைதியற்ற சூழலில் செய்தி சேகரிக்க சென்றவர்களுமாக 83 பத்திரிகையாளர்கள் கடந்த 12 மாதங்களில் உயிரிழந்துள்ளனர்.

6 மாதங்களாக யூகோசெலாவியாவில் நடந்த யுத்தத்தில் மட்டும் 21 பத்திரிகையாளர்கள் பலியாகியுள்ளனர். புருசலிலுள்ள சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் மேற்படி தகவலை வெளியிட்டுள்ளது. இதுதவிர சொந்த மண்ணிலேயே நிகழும் அரசியல் கொடூரங்களில் (உ+ம். பர்மா, இலங்கை) அதிக எண்ணிக்கையில் பத்திரிகையாளர் இரையாகிப் போவதாகவும் அறிவித்துள்ளது.

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புலிகள்:
# முதலாளியத் தேசியவாதிகளோ அன்றி ஏகாதிபத்தியம், தரகுமுதலாளியம் ஆகியவற்றின் பிரதிநிதிகளோ அல்ல !

விடுதலைப்புலிகள் தேசிய சக்திகளா? இல்லையா? என்பது பற்றி இப்போது புரட்சிகரமான சக்திகள் மத்தியில் ஒரு காரசாரமான விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஏன் இந்த விவாதம் நடைபெறுகின்றது? இந்த விவாதத்தின் மூலம் நாம் அடைய இருக்கும் பயன் என்ன? என்று விளங்கவில்லை. எளிமையாகப் புரிந்துகொள்ளக்கூடிய உண்மைகளைக் கடினமான சொற்பதங்களைப் பாவிப்பதன் மூலம் தாமும் குழம்பி, மற்றவர்களையும் குழப்பி எந்த ஒரு முடிவுக்கும் வராமல் தொடர்ச்சியாக விவாதங்கள் நடைபெறுகின்றன. இந்த விவாதத்தில் மும்முரமாக ஈடுபட்டிருப்பவர்கள் சமர், தூண்டிலில் எழுதும் பிரஜைகள், NLFT, PLFT ஆகியவற்றின் ஆதரவாளர்கள், சமரன் பத்திரிகையை வெளியிடும் நக்ஸலைட்குழு, இன்னும் சில உதிரிகள் எனலாம்.

இக் கட்டுரையானது சமர் இல் வந்த கட்டுரையையும், அதற்குப் பதிலாக 48ஆவது தூண்டிலில் வந்த பிரஜைகளின் கட்டுரையையும் கவனத்தில் எடுத்து எழுதப்படுகின்றது. இதன் முற்பகுதி தூண்டில் தனது 48ஆவது பத்திரிகையில் கூறிய கருத்துகள் பற்றியும், இறுதிப் பகுதி புலிகள் பற்றி தெளிவாகத் தெரியும் உண்மைகளையும் (முன் வைக்கும்.

எந்த ஒரு பிரச்சினையைப் பற்றியும் முடிவு எடுக்க முனையும் நாம் முதலாவதாக குறிப்பிட்ட பிரச்சினையை இயங்கியல் அடிப்படையில் ஆராய வேண்டும். மாறாக ஏற்கெனவே இருக்கும் முடிவுகளுக்கு அல்லது விதிகளுக்குப் பொருந்திவருவதாகக் குறிப்பிட்ட பிரச்சினையைக் காட்டமுனையக்கூடாது

தற்போதைய காலகட்டங்களில் மார்க்ஸ் தொடக்கம் மாஓ வரையிலான மார்க்ஸிய அறிஞர்களது மேற்கோள்களை உதாரணம் காட்டி கட்டுரைகள் வெளிவருவது மிகவும் குறைவு. ஆனால் அவர்கள் சொன்ன கருத்துகளை அல்லது முடிவுகளை மனதில் வைத்து ஒவ்வொரு பிரச்சினையையும் அவர்களது முடிவுகளுக்கு ஏற்றவாறு எப்படியாவது காட்டிவிட்டால் சரி, அதுவே சரியான அணுகுமுறை என்ற போக்கே இன்று கட்டுரையாளர்கள் கடைப்பிடிக்கும் போக்காகும். இந்த விவாதத்தில் ஈடுபட்டிருக்கும் நபர்கள் பிரச்சினைகளிலிருந்து தொடங்கவில்லை. ஏற்கெனவே 'ஒளிவட்டம் உடைய நபர்கள்' சொன்ன முடிவுகளிலிருந்து தொடங்குகிறார்கள். ஒவ்வொரு பிரச்சினையையும் பகுத்தாயும் அணுகுமுறை இதுவல்ல.

புலிகள் தேசிய சக்திகளா? இல்லையா? என்ற விவாதத்தில் ஈடுபட்டிருக்கும் நபர்கள் இந்த விவாதத்தை நடாத்திக்கொண்டே இன்னும் ஒரு விவாதத்திற்கு தயாராகின்றார்கள்.

www.tamilarangam.net

அந்த விவாதமானது புலிகளுடன் ஐக்கிய முன்னணியா? இல்லையா? என்பதேயாகும், சில சந்தர்ப்பங்களில் இரண்டு விவாதங்களும் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ, ஒன்றாகவும் நடைபெறுகின்றது. 'தேசிய சக்திகள்', 'ஐக்கிய முன்னணித் தந்திரம்' பற்றிய மாஓவின் கருத்துகளை மனதில் வைத்துக் கொண்டு அவை பற்றி ஏற்கெனவே ஒரு முடிவை எடுத்துவிட்டு புலிகளைப் பற்றி யாராவது மதிப்பிட முனைந்தால் அது தவறு. அது சலிப்பூட்டும் விவாதங்களை மட்டுமே உருவாக்கும்.

நாம் புலிகளைப் பற்றி மதிப்பிட வேண்டியது அவசியமானதே. எமது தேசத்தின் நிலைமையிலிருந்தும், புலிகளின் கடந்தகால, நிகழ்கால நடவடிக்கைகளிலிருந்தும் ஆராய்ந்து சரியான ஒரு முடிவை நாம் முன்வைக்க வேண்டும். அந்த முடிவை நாம் முன்வைக்கும் போது நாம் விஞ்ஞானரீதியான அணுகு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது இயல்பானதே. அவ்வாறு அடையப்பெறும் முடிவானது மார்க்ஸிய மூலவர்கள் சொன்ன முடிவுகளுடன் அல்லது கருத்துகளுடன் பொருந்தி வருகிறதா? இல்லையா? என்பதல்ல பிரச்சினை. அடையப்பெறும் முடிவு பிரச்சினையைத் தீர்க்க உதவுகிறதா? இல்லையா? என்பதே பிரச்சினை. எமது முடிவு பிரச்சினையைத் தீர்க்க உதவி, மார்க்ஸிய மூலவர்களது முடிவிலிருந்து மாறுபட்டாலோ அன்றி மார்க்ஸிய மூலவர்களது பொதுவான முடிவுகள், கோட்பாடுகள் எமது பிரச்சினையைத் தீர்க்க உதவாவிட்டாலோ அவர்களது முடிவுகள், கோட்பாடுகளில்தான் பிழையிருக்கின்றது. அத்துடன் அவர்களது முடிவைத் திணித்த அல்லது திணிக்க முனையும் எங்களிலும் பிழையிருக்கிறது.

புலிகள் தரகு முதலாளித்துவச் சக்திகளின் நலன்களுக்காகப் போராடுவதால் அவர்கள் தேசிய சக்திகள் இல்லை என்பது 'சமர்' பத்திரிகையினதும், ஒரு சாராரினதும் வாதமாகும். இது பிரச்சினைகள் சகலவற்றையும் 'வர்க்கக் கட்டமைப்பு', 'வர்க்கப் பார்வை' என்று சொல்லப்படுபவற்றுக்குள் உள்ளடக்கிவிட்டால் பிரச்சினை தீர்ந்து விடும் என்று எண்ணுகின்ற தவறான போக்கின் விளைவாகும். ஒரு குறிப்பிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து புலிகள் போராடுகின்றார்கள். அந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில் பார்த்தால் புலிகள் முதலாளித்துவ தேசியவாதிகள் என்ற வாதத்தை பிரளைகள் போன்றோர் முன்வைக்கின்றார்கள். இதுபற்றி நாம் கவனிப்போம்.

"புலிகள் போராடும் கோரிக்கைகளின் தேசியத்தன்மை காரணமாக முழுத் தேசிய வர்க்கங்களுமே புலிகளுக்குப் பின்னால் நிற்கின்றன" (கலம் 48;பக்கம்:22) என்ற கருத்தை பிரளைகள் கூறுகின்றார்கள். 'பின்னால் நிற்கின்ற' என்ற சொல் ஒரு போராட்டத்தின் முன்னணிப்படையையும், அதன் பின்னால் அணிவகுத்துள்ள மக்களையும் அர்த்தப்படுத்துகின்றது. அந்த அர்த்தத்தில் பார்த்தால் புலிகளுக்குப் பின்னால் மக்கள் நிற்கவில்லை. மாறாக இழுபடுகிறார்கள். அல்லது வேறுவழியில்லாமல் ஆதரிக்கின்றார்கள் என்ற சொல்லையே நாம் பிரயோகிக்கலாம். அதற்கு

## யாருக்கு சொல்லி அழ..........

வளைகுடா யுத்தத்தில் அமெரிக்காவின் இராணுவச் செலவீனத்தின் பங்குதாரர்களான சேர்மனி, யப்பான், தென்கொரியா, சவூதிஅரேபியா போன்ற நாடுகள் தமது பங்கின் முழுத்தொகையையும் இன்னும் செலுத்தவில்லை என அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகம் வேதனைப்படுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதற் பந்தியில் ஜப்பானுக்கு எதிரான சீன மக்களின் தேசிய யுத்தத்தில் சீனக் கொம்யூனிஸ்ட்டுக் கட்சி மக்கட்தொகையின் சகல பிரிவினதும் பிரதிநிதியாக இருந்தது உதாரணமாகக் காட்டப்படுகின்றது. அந்தத் தொனியையும் பார்த்தால் புலிகள் இப்போது சகல பிரிவினதும் பிரதிநிதிகள் என்பதுபோல் பிரஜைகள் குறிப்பிடுகின்றனரோ என்று எண்ணத் தோன்றுகிறது. அதற்குத் தெளிவாகவும், உறுதியாகவும் கூறமுடியும் புலிகள் எந்த மக்கள் பிரிவினதும் பிரதிநிதிகள் அல்ல. மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லப்படும் இடத்தில் குறைந்தபட்சம் முதலாளித்துவ ஜனநாயகமாவது இருக்கவேண்டும்.

"அனைத்து வர்க்கங்களினதும் நலன்கள் புலிகளின் தேசியக் கோரிக்கைகளுடன் பிணைந்துள்ளதால்..." என்று பிரஜைகள் அதே கட்டுரையில் குறிப்பிட்டுள்ளனர். இது பிழையான ஒரு கருத்தாகும். இந்தப் போராட்டத்தை நாம் சரியாக ஆராய்வோமாயின், அனைத்து வர்க்கங்களினதும் நலன்களில் சில, புலிகளின் நலன்களை அடையும் வழிமுறைகளுடன் பிணைந்துள்ளன எனக் குறிப்பிடுவதே சரி என நாம் உணர்வோம்.

மேலும், புலிகள் விடும் துண்டுப் பிரசுரங்கள், அவர்களது பத்திரிகைகள் வெளியிடும் கருத்துகள், அவர்களது அறிக்கைகள், அவர்கள் அரசியல் தலைவர்களுக்கு எழுதும் கடிதங்கள், பிரபாகரனின் சுதுமலைப் பேச்சு இவற்றில் இருந்துகொண்டு புலிகளை மதிப்பிடக் கூடாது. ஏனெனில் அங்கே பாலசிங்கம் போன்றவர்களோ அன்றி வெறும் அரசியல் கதைப்பவர்களோ மட்டும் இல்லை. சயனைட்டை கழுத்தில் கட்டிய இராணுவ ஊழியர்களை அந்த அமைப்பு கொண்டுள்ளது. அந்த அமைப்பை புரிந்துகொள்ள வேண்டுமாயின் ராஜீவ் காந்தி, அமிர்தலிங்கம் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டே அவர்களை அந்த அமைப்பு துடைத்தொழித்தது என்பதை நாம் கவனத்தில் எடுக்கவேண்டும். ஆக, அவர்களைப் பற்றிய செய்திகளில் இருந்து முடிவுக்கு வராமல் அவர் களது நடவடிக்கையிலிருந்தே நாம் முடிவுக்கு வரவேண்டும். செய்திகள் அவர்களது நடவடிக்கைகளை உணருவதற்கு, ஊர்ஜிதம் செய்வதற்கே உதவும். அவ்வளவுதான்! `சமர்` உம், `பிரஜைகள்`உம் அவர்களது செய்திகள், அறிக்கைகள் ஆகியவற்றை விவாதிப்பதன் மூலம் புலிகள் தேசிய சக்திகளா? இல்லையா? என்ற முடிவுக்கு வர முனைகிறார்கள். இது பிரயோசனமற்றது.

"புலிகளோ இந்தியத் தலையீடு தமது தனித்துவத்தை அங்கீகரித்தே சாத்தியப்படவேண்டும் என்றது. இதற்குமேல் ஒரு மூன்றாம் உலகநாட்டின் முதலாளியத் தேசியவாதத்தின் போர்க்குணம் வேறெப்படி இருக்கமுடியும்" (கலம்:48, பக்கம்:24) என்று பிரஜைகள் கேட்கிறார்கள். புலிகள் தமது தனித்துவத்தை அங்கீகரிக்கச் சொல்லுவது மூன்றாம் உலகநாட்டின் முதலாளித்துவத் தேசியத்தின் போர்க்குணம் அல்ல. அது புலிகள் என்ற அமைப்பின் போர்க்குணம். ஒரு அமைப்பின் போர்க்குணத்தையும், ஒரு தேசியத்தின் போர்க்குணத்தையும் போட்டுக் குழப்பிக்கொள்ளக் கூடாது.

புலிகள் தமது எந்த இலக்குகளை அடைவது எனினும் இராணுவ வன்முறையையே நம்பியிருக்கும் ஓர் அமைப்பாகும். அந்த அமைப்பை ஓர் அரசியல் ரீதியான அமைப்பாகக் காட்ட முனைவது சரியா? அப்படியாயின் அதன் அரசியல் இலக்கு என்ன? அவர்களது நடைமுறையிலிருந்து அவர்கள் எந்த ஒரு அரசியல் இலக்கையும் நோக்கி நகர்வதாகக் காட்டமுடியாது. இங்கே அரசியல் இலக்கு என்று குறிப்பிடப்படுவது;

www.tamilarangam.net

குறிப்பிட்ட ஒரு சமூகப் பிரிவின் நலன்களுக்காக அந்தக் குறிப்பிட்ட சமூகப் பிரிவின் நலன்களை அடையும் திசையில் போராட்டத்தை, வழிமுறைகளை முன்னெடுத்துச் செல்வதே அரசியல் இலக்கு என்ற சொல் மூலம் குறிப்பிடப் படுகிறது. மத்தியதர வர்க்க அரசியல் அல்லது முதலாளித்துவ தேசியத்தன்மை ஆகியவற்றுக்கு உரிய ஊசலாடும் மனோபாவம் உள்ள அமைப்பே புலிகள் என்று காட்டி புலிகளை ஓர் அரசியல் அமைப்பாக நிறுவமுனைவதுடன் உடன் படமுடியாது. அதாவது மக்கள் தொகையின் ஒருபிரிவினது நலன்களை மையப் படுத்தி அவர்கள் தமது வேலைமுறையை முன்னெடுத்துச் செல்லாததால் அவர்கள் ஓர் அரசியல் அமைப்பு அல்ல.

மாறாக, அவர்களுக்கு ஓர் இலக்கு இருக்கிறது. அதில் அவர்கள் திட்டவட்டமான வரையறைகளையும், தெளிவுகளையும் கொண்டிருப்பதாகக் காணமுடியாவிட்டாலும், ஒரு குறிப்பிட்ட நலன்களை அடையும் திசையில் நகர்வதைக் காணமுடியும். அவர்களது சிறந்த இராணுவ நடவடிக்கைகள் மூலம் அந்தத் திசையில் கணிசமானளவு முன்னேறியிருக்கிறார்கள். அந்த `இலக்கு' என்னவென்றால் அந்த அமைப்பின் சொந்த நலன்களை அடையும் இலக்கேயாகும். இன்றுவரை அவர்களது நடவடிக்கையிலிருந்து இரண்டு விடயங்கள் திட்டவட்டமாகத் தெரிகின்றன. ஒன்று, தமிழ் மக்களை அடக்கியாளும் உரிமை அவர்களுக்கு மட்டுமே உண்டு. அதை அவர்கள் யாருக்கும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள். இரண்டாவது, அவர்களது இராணுவக் கட்டமைப்பு தொடர்ச்சியாகப் பேணப்படவேண்டும். உண்மையில் இவை இரண்டில் இரண்டாவது 'இலக்கே' அல்ல. அது இலக்கை அடைவதற்கான வழிமுறையின் ஸ்தாபனக் கட்டமைப்பே. இலக்கை அடைவதற்கான ஸ்தாபனக் கட்டமைப்பே இலக்காகிவிட்ட ஒரு ஸ்தாபனம், அந்த ஸ்தாபனக் கட்டமைப்பை காப்பதே இலக்காகிவிட்ட ஒரு ஸ்தாபனம் பல குழப்பமான நடவடிக்கையில் ஈடுபடுவதும் தவிர்க்க முடியாதது. அது முன்னுக்குப்பின் முரணான, தான் கூறியவற்றிற்கு முரணான நடவடிக்கையில் ஈடுபடுவது தவிர்க்க முடியாதது. அவற்றை ஏதோ மத்தியதர வர்க்கத்தின் அல்லது முதலாளியத் தேசியத்தின் ஊசலாட்டமான பகுதியாகக் கொள்ளக் கூடாது. மேலே குறிப்பிட்ட இரண்டு விடயங்களிலும் புலிகள் உறுதியாக உள்ளார்கள். அவற்றை அடைவதற்கு அல்லது இருக்கும் நிலைமைகளை காப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கைகளிலும் இறங்கப் புலிகள் தயங்கமாட்டார்கள். மிகவும் பலம்வாய்ந்த ஒரு இராணுவக்குழுவை அவர்கள் கொண்டிருப்பதால் இன்றுவரை அவர்களை இந்தியாவோ அன்றி இலங்கை இராணுவமோ தோற்கடிக்க முடியாதுள்ளது.

புலிகள் எந்த ஏகாதிபத்தியத்தினதோ அன்றி தரகு முதலாளிகளினதோ பிரதிநிதிகள் அல்ல. இதன் அர்த்தம் ஏகாதிபத்திய, தரகு முதலாளித்துவ எதிர்ப்புப் போராளிகள் புலிகள் என்பதும் அல்ல. புலிகள் ஏகாதிபத்தியத்திடம் இருந்து உதவிகள் பெறுவார்கள். அவர்களின் நலன்களுக்கு எதிராகப் போகாமல் கண்டும் காணாதிருப்பார்கள். அவர்களது போராட்டத்தின் இறுதி விளைவு ஏகாதிபத்தியத்திடம் நாட்டை அடகுவைப்பதாகக் கூட இருக்கமுடியும். ஆனால் அவர்கள் ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகள் அல்ல. எந்த ஒரு ஏகாதிபத்தியமும் புலிகளுடன் முரண்பட்டால் அதாவது புலிகளின் நலன்களுக்கு எதிராக செயற்பட்டால் அந்த ஏகாதிபத்தியத்திற்கு எதிராக இராணுவ நடவடிக்கையில் இறங்க புலிகள் தயங்க மாட்டார்கள். அது அமெரிக்காவாக இருந்தாலும் புலிகளைப் பொறுத்

www.tamilarangam.net

தமட்டில் சிறிய விடயம். இதனைப் புரிந்துகொள்வதற்கு சர்வதேச அளவில் சதாம், நொறியேகா போன்றவர்கள் அமெரிக்காவின் அடிவருடிகளாக இருந்தபோதும், தமது சொந்த நலன்களுடன் அமெரிக்கா முரண்பட்டபோது யுத்தம் புரியத் தயாரானதையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் ஆளும் கும்பல்களின் நலன்களுக்கு எதிராக யார் போனாலும் இந்த வகையான இராணுவக் கும்பல்கள் அல்லது குழுக்கள் இராணுவ ரீதியாக பிரச்சினையை முகங்கொடுக்கத் தயங்குவதில்லை. சதாம்குசைன், நொறியேகா ஆகியோருக்கு இருந்த வாய்ப்புகளை விட புலிகளுக்கு ஒரு நீண்டகால யுத்தத்திற்குச் சாதகமான அம்சங்கள் அதிகமாகவேயுள்ளன. ஏனெனில் அவர்கள் நகர்ப்புறக் கெரில்லா வடிவத்தில் பல படிப்பினைகளைப் பெற்ற, சயனைட் டைக் கழுத்தில் கட்டிய ஊழியர்கள்.

தமிழ் மக்களுக்கோ அன்றி எந்த ஒரு புரட்சிகர, ஜனனாயக சக்திகளுக்கோ புலிகள் ஜனனாயகத்தை வழங்காததால் புலிகள் மக்களினதும், புரட்சிகர, ஜனனாயக சக்திகளினதும் எதிரிகள். அவர்களது நலன்களை அடையும் வழிமுறைகள் தமிழ் மக்களது தேசிய நலன்களுடன் சம்பந்தப்பட்டிருந்தபோதும் அவர்கள் மக்களினதும், புரட்சிகர சக்திகளினதும் எதிரிகளே.

புலிகளுடன் இணைந்து தமிழ் மக்களின் தேசிய நலன்களை பெறமுனைவது என்பதோ அல்லது புலிகளுடன் ஐக்கிய முன்னணி அமைத்துப் போராட முனைவது என்பதோ எதுவாக இருப்பினும் அது சுய அழிவுப் பாதையே.

மேலே புலிகள் பற்றிச் சொன்ன கருத்துகளுக்கு ஆதாரமாக மார்க்ஸிய மூலவர்களது மேற்கோள்கள் தேவையில்லை. இவை தெளிவாகத் தெரியும் வெளிப்படை உண்மைகள். இந்த வெளிப்படையாகவும், தெளிவாகவும் தெரியும் உண்மைகள் ஒரு போராட்டத்தை முன்னெடுப்பதில் புலிகளைப் புரிந்து கொள்வதற்குப் போதுமானவை. எளிமையான விடயங்களை கடுமையான சொற்களுக்கூடாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பது மார்க்ஸியமாகாது. மாறாக எளிமையாகத் தெரியும் விடயங்களில் காணப்படும் சிக்கலான அம்சங்களை ஆராய முனைவதே மார்க்ஸிய அணுகுமுறை.

• கங்காலன்

---

எல்சல்வடோரில் (Elsalvador) 12 வருடகாலமாக 80,000 உயிர்களை பலியெடுத்துவந்த உள்நாட்டு யுத்தமானது சனவரி நடுப்பகுதியில் நடந்த ஐ.நா நிறுவனத்தின் சமாதான உடன்படிக்கையுடன் முடிவுக்கு வருகிறது. இந்த யுத்தமானது,5 இலட்சம் அகதிகளை அமெரிக்காவிற்கு அனுப்பியதுடன் 2 மில்லியாா்டன் பொருளாதார இழப்பையும் ஏற்படுத்தியது. சல்வடோனிச அரசிற்கும், F.L.N கொரில்லாக்களுக்குமிடையிலான இந்த ஒப்பந்தம் நீண்டகால பிரச்சனை எதற்கும் முடிவுதரவில்லை.

<< 1000 பலமான ஐ.நா சமாதான துருப்புகள் பெப்.1 இற்குள் இருதரப்பையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர நிலை நிறுத்தப்படுவர். >>

<< முக்கியமாக ஒக். 31 இற்குள் கொரில்லாக்கள் யாவரும் நிராயுதபாணியாக்கபடுவர், 2 வருடகாலத்திற்குள் அரசபடைகளின் எண்ணிக்கை (63,175) அரைவாசியாக்கப்படுவர். >>

<< அத்துடன் அமெரிக்காவிலுள்ள எல்சல்வடோர் பிரசைகளுக்கும் பொதுமன்னிப்பு கொடுத்து, யூன். 30 இற்குள் திரும்புமாறு அறிவித்துள்ளது. அமெரிக்காவின் நோக்கமும் அவர்களை திருப்பியனுப்புவதுதான் >> ஆயினும் எல்சல்வடோர் பெற்றோர்கள் தமது குழந்தைகள் நாடு திரும்புவதை விரும்பவில்லை. "இங்கு வந்து என்ன செய்வது" என்கிறார்கள்.

–எங்களுடைய முக்கிய ஏற்றுமதி கோப்பியல்ல மாறாக மனித உழைப்பு– என்கிறார் எல்சல்வடோர் பிரசை ஒருவர்.

எல்சவடோர் அகதிகள் வருடத்திற்கு 500 mil-1000 mil $ வரை எல்சவடோருக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தகது.

www.tamilarangam.net

# இரத்த தானம்

இன்று திங்கட்கிழமை
கதவில் தொங்கிய
கலண்டரின் சேதி
வாசல் வரை வந்து
தபால் பெட்டியை
தடவினேன்
வான் கடிதம்
செத்த வீட்டு சேதியோ ?
இடி, நீர்துளிகள், பீதி
எல்லாமே என்னுள்
உதயமாயிற்று
வழமையான வரிகளை
விலக்கி
வாசிப்பை தொடர்கிறேன்
எமது இடத்தில்
பிரச்சனை இல்லை
குளிர்மையாய் வீசிய காற்றை
உள்ளிழுத்து
பெருமூச்சொன்றை
தயார் செய்தேன்
பாதியில் நின்று
சோக இசையொன்று
என்னுள் எழுந்தது
நாட்டிலிருந்து
நாட்டிற்கு நல்லதை
செய்ய முனைவோரை
எண்ணினேன்
அவர்களுக்கு ஆபத்து
என்பதை
உணர்ந்தேன்
சாவுக்கு சவால்விட்டு
சமாதிக்கு பேர்பலகை
கொடுத்திருக்கும்
மனிதர்கள், அவர்கள்
உங்கள் மேல்
பொறுமை எனக்கு
பாதகமற்ற
பொறுமை தான் இது
இரத்தத்தில் A,B,O குறூப்
என்பார்களே
உங்கள் இரத்தம்
வேறு
குறூப்போ
உங்கள் இரத்தத்தில்
உறுதியும் துணிவும்
நீங்கள்
இரத்ததானம் செய்வதானல்
எனக்கும் ஓர் துளி
அனுப்பி தரவும்
உங்கள்
உறுதியும் துணிவும்
எனக்கும்
ஊறட்டும்

• யதார்த்தினி

www.tamilarangam.net



# "நான் போகும் பாதை" திரைப்படமும் எமது சினிமா ரசனையும் - ஒரு பார்வை

<< கமலேசு உனக்கு இந்தப் ( நான் போகும் பா தை ) படம் பிடித்திருக்கிறதா?>>

<< எனக்கும் பிடிக்கேல்லை. இந்தப் படத்தை என்னாலை ரசிக்கவே முடியேல்ல>>

<< ஏன் அப்படிச் சொல்லுறாய். >>

<< எனக்குத் தெரியேல்லை. ஆனால் என்னாலை ரசிக்க முடியேல்லை. >>

<< கதை பிடிக்கேல்லையோ ?

<< கதை மட்டும் காரணமில்லை. கதை என்டு பார்த்தால் கதாநாயகன் திடீரென்று அமெரிக்காவுக்கு ஓடுறதும் எனக்குப் பிடிக்கேல்லைத்தான் >>

<<சின்னத்தம்பி படத்தை ஏன் திருப்பி திருப்பிப் பார்த்தாய் >>

<< பட அமைப்பு, பாட்டு எல்லாம் எனக்கு நல்லா பிடிச்சிருக்கு, அதனால பார்த்தன் >>

இதற்கு மேல் விரிவான பதிலை கமலேசிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. எம்மவர்களின் பொதுவான சினிமா ரசனை எத்தகையது என்பதை வெளிப்படுத்தும் ஒரு நல்ல பிரகிருதி இவன், இவனுக்குப் பிடித்தமான இன்றைய தலைமுறை நட்சத்திரங்கள் ரசனி, கமல், விசயகாந்த் இவர்களின் படங்கள் இவனுக்கு நன்றாகப் பிடிக்கும். எம்.ஜி.ஆர்-சிவாஜி இவர்களின் படங்கள்கூட இவனுக்கு வெறுப்புக்குரியன அல்ல. சுருங்கச்சொன்னால் இவனது சினிமா ரசனையின் மூலமே இங்குதான் தொடங்குகிறது. பாலச்சந்தர், பாக்கியராஜா, பாரதிராஜா, மணிரத்தினம் ஆகியோரது படங்களில் சில நீங்கலாக அனேகமாக அவனுக்குப் பிடிக்கும்.

ஆனால் பாலுமகேந்திராவின் வீடு, சந்தியாரகம் போன்ற படங்களைப் பார்ப்பதற்கு இவனால் இருப்புக்கொள்ளக்கூட முடியவில்லை. ஜெயகாந்தனின் "யாருக்காக அழுதான்" "உன்னைப் போல் ஒருவன்" "புதியதோர் வீணை" இவைகளும் இவனுக்குப் பிடிக்காதவை என்பதை ஊகிக்க முடியும்.

"ஒரு இந்தியக்கனவு" (கோமல் விசுவநாதன்) "தண்ணீர் தண்ணீர்" (கோமல் விசுவநாதன்-கே.பாலச்சந்தர்), "வேதம் புதிது" (பாரதிராஜா) போனற கலைத்துவம் பேணும் ஓரளவு சமுகப் பிரக்ஞை பூர்வமான ஜனரஞ்சகப் படங்கள் கூட இன்னும் ஒரு குறுகிய வட்டத்தின் ரசனைக்குட்பட்டுத்தான் இருக்கிறது (வேதம் புதிது படத்தின் வியாபார ரீதியான தோல்வியை ஈடுசெய்வதற்காக பாரதிராஜா ரஜனியை வைத்து "கொடிபறக்குது' வியாபாரப்படத்தை எடுத்தமை பலருக்கு நினைவிருக்கும்).

> வீடு படம்; ஒரு வீடுகட்டுவதற்காக நடுத்தர வர்க்கக் குடும்பம் ஒன்று படும் துயரத்தை எளிமையான யதார்த்தவாதத்துடன் பின்னிப் பிணைத்திருக்கிறது.
>
> சந்தியா ராகம்; ஒரு வயதானவரின் அந்திமக்கால மனோநிலையை துல்லியமாக விளங்க வைக்கும் தமிழ் திரை நவீனம்

இத்தகைய தரமான திரையோவியங்கள்; சினிமாவுடன் அதிகம் பரிட்சையமற்ற கிராமப்புறமக்களின் உணர்வைத் தீண்டுகின்றன என்பதற்கு, 1977 ம் ஆண்டு இந்தியாவில் கர்நாடகமாநிலத்தில் உள்ள "கெக்காடு" என்னும் சிறுகிராமத்தில் நடத்தப்பட்ட பரசோதனை தகுந்த சானருகும். ஆனுல் பொதுவாக எம்மவர்களால் இத்தகைய சினிமாக்களை ஏன் ரசிக்க முடியாமல் இருக்கிறது என்பதை சற்று விரிவாக நோக்குவோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் சினிமாவை மூன்று முக்கிய பிரிவுகளில் அடக்கிப்பார்க்கலாம்.

1) M.G.R. வகைப்படங்கள்;
இதன் சூத்திரம் ஏழைகளின் தோழனுகப் பிறப்பெடுக்கும் கதாநாயகன்-பணக்கார (சமீந்தார்)உயர்சாதி- வில்லனின் மக ளைக் காதலிப்பது.
இதனுல் ஏற்படும் சண்டைக்காட்சிகள், டூயட்டுப்பாடல்கள், இறுதியில் திருமண ம்-சமரசம்

2) துன்பவியலை அடிநாதமாகக் கொண்ட "சென்றிமென்ற்" படங்கள். சிவாஜி, ஜெ மினி, பாலச்சந்தரின் படங்கள்.

3) பக்திப்படங்கள் (புராணம்,இதிகாசம், சரித்திரம்)

தமிழ் சினிமா எப்படி இம் மூவகைக்குள் அடங்குகிறதோ, தமிழ் மக்களின் சினிமா ரசனையும் நுகர் பொருள் கலாச்சாரத்துடன் (Consumer culture) பரீட்சையப்பட்டு இம் மூவகைக்குள் அடக்கப்பட்டுவிடுகிறது. இவற்றில் பக்திப்படங்களின் ஆதிக்கம் ஓரளவு தளர்ந்துபோக மீதி இரண்டு வகைகளிலும் இன்றும் மேலோங்கி நிற்பது M.G.R வகைப்படங்களாகவே உள்ளது.

ஒப்பீட்டு உதாரணமாக "சின்னத்தம்பி"-"குணு" படங்களை மேலோட்டமாகத் துலாவுவோம். அண்மைக் காலப் படங்களில் "சின்னத்தம்பி" படம் தமிழ் ரசிகரின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றிருக்கிறது. ஏனெனில் மேற்குறிப்பிட்ட சினிமா (M.G.R-சென்றிமென்ற்) ரசனைக்கு இது தீனிபோடுவதுடன் கூடவே இன்றைய தலைமுறையின் ரசனைக்குரிய

அதிகமான பாடல்கள். அதேவேளை "குணு" படம் அப்பாத்திரத்திற்குரிய குணும்சங்களை வெளிப்படுத்தும் வகையில் கமலகாசன் யதார்த்தபூர்வமாக நடித்திருக்கிருர். ஆனுல் தமிழ் ரசிகர்களின் வழக்கமான ரசனைக்கு(M.G.R-சென்றிமென்ற்) புறம்புபட்டு நிற்பதனுல் அப்படத்திற்கு தமிழ் மக்களின் வரவேற்பும் குறைவாகவே உள்ளது. (விபச்சாரச் சூழலில் பிறப்பவனது உண்மை உணர்வுகள் இப்படத்தில் அலட்சியப்படுத்தப்பட்டுள்ளன எனபது வேறு விடயம்)

பாரதிராஜா, பாக்கியராஜா போன்ற 'புதிய வார்ப்பு' களின் (70 ன் பிற்பகுதி) வருகையுடன் தமிழ்ச் சினிமாவில் மறுமலர்ச்சி எதிர்பார்க்கப்பட்டது. தமிழ் சினிமா உலகம் நட்சத்திர ஆதிக்கத்தில் இருந்து தளர்ந்மையும், கிராமப்புறங்களை உள்ளடக்கிய வெளிப்புறப் படப்பிடிப்புகளும், புதுமுக அறிமுகங்களும் அதிகரித்தன என்பது ஏதோ உண்மைதான். ஆனுல் மறுமலர்ச்சியோ, புரட்சி ஏதும் நிகழ்ந்துவிடவில்லை. அத்துடன் இவர்களது இன்றைய படங்களும் மேலும் மேலும் M.G.R வகைப் படங்ககளாகவே காணப்படுகின்றன. நல்ல உதாரணம் பாரதிராஜாவின் 'புதுநெல்லு புதுநாத்து' புதிய மொந்தையில் பழைய கள்ளு.

<<கலை மற்றும் கலைச்சார வரலாற்றில் நாம் எப்போதும் பார்ப்பது என்னவெனில் ரசனை மற்றும் வளர்ச்சி இரண்டும் இயங்கியல் ரீதியில் ஒன்றுக்கொனறு காரணமாக விளங்குகிறது. மக்களின் ரசனையை கலை வளர்க்கிறது வளர்ந்துவிட்ட மக்களின் ரசனையோ கலையின் வளர்ச்சியைக் கோருகிறது>>

என்பது கங்கேரிய சினிமாவிமர்சகர் "பெல பெலாசு"(BELA BALAZS) என்பவரின் கூற்றுகும்.

ஆனுல் நுகர்பொருள் கலாச்சாரத்துடன் ஒன்றிப்போன தமிழ்மக்களின் சினிமா ரசனையானது மூளைச் சலவைக்குட்பட்டு மழுங்கிப்போயுள்ளது. ஏற்கனவே குறிப்பிட்டது போன்று M.G.R-சென்றிமென்ற் வகைப்பட்ட போலிச் சினிமாக்களுடன் பழக்கப்பட்டுப்போன இவர்களது மனுேநிலை இதற்கு வெளியில் உள்ள உண்மை யதார்த்த சினிமாவை ரசிக்க மறுக்கிறது.

எமது மக்களின் சினிமாரசனை இப்படி இருக்கும்போது 'நான் போகும் பாதை' படத்தைப் பற்றி 'இந்தியா ருடே' யில் குறிப்பிடப்பட்ட "விநியோகத்தவரைப்பற்றி அக்கறையின்றி எடுக்கப்பட்ட படம்" என்ற வாக்கியம் நினைவுக்கு வருகிறது. ஆம் எத்தனை பேர் இப்படத்தைப் பார்த்திருப்பர் எவ்வளவு வசூலாகியிருக்கும், அதிலும் எத்தனை பேர் விரும்பி, ரசித்துப் பார்த்திருப்பர். அப்படிப் பார்த்திருந்தாலும், எத்தனை பேருக்கு அதன் உட்பொருள் புரிந்திருக்கும். ஒரு வீடியோ கடையில்

சென்று நான் போகும் பாதை படம் இருக்கிறதா என்று கேட்ட போது "ஆ அந்தக் கவிதைப்படமா" என்று கூறித்தான் அக் கடைக்காரர் அவ் வீடியோ கசெட்டைக் கொடுத்திருந்தார். வித்தியாசமாக எடுக்கப்பட்ட ஒரு கவிதைப் படம் என்பதுதான் அப்படத்தைப் பற்றிய அவரது பார்வை.

கதாநாயகன் ஒரு வித்தியாசமானவன், உயர்ந்த சிந்தனைப் போக்குடைவன், ஒரு பொதுவுடமைவாதி,சாத்திரம்,கடவுள் எதிலும் நம்பிக்கையற்றவன். இவை எதுவும் நாட்டிற்கு பொதுவுடமையைத் தந்துவிடாது என்பவன். 450 கோடி உலக மக்களை தனது உறவாகக் கொள்கிருன்.மனித நேயத்தை உயர்வாக மதிக்கிருன். இறுதிவரை இவ் இலட்சியங்களில் உறுதியாகவே இருக்கிருன். இன்னும் கதாநாயகன் இந்தியாவின் வறுமையை தொனிக்க மிக மெல்லியவனுக-சொக்கு ஒடுங்கியவனுகத் தோன்றி தோற்றத்திலும்(Personality) வழக்கமான சினிமா நாயகர்களிலிருந்து வேறுபடுகிருன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கதாநாயகனை கலலூரித்தோழி செல்வி நேசிக்கிருள்.

உயர்ந்த இலட்சியங்களைக் கொண்ட கதாநாயகனே, இச் சமூக சூழலில் வாழமுடியாத நிலையில் அண்டாட்டிக் கண்டத்தில் எண்ணெயைக் கண்டுபிடிப்பதற்கான ஆய்வில் ஈடுபடும் விஞ்ஞானிக்கு உதவுவதற் காக அமெரிக்கா செல்கிருன்.

அமெரிக்காறப்பட்டிருக்கும் அவனிடம் செல்வி ஒரு முத்தத்திற்காக இரஙகுகிருள். ஆனல் அவனே தான் வாஙகிய பழைய பொதுவுடமை தத்துவப்புத்தகத்தை தான் கொடுக்கும் முத்தத்திற்குச் சமனுன பரிசாகக் கையளித்து "நீயும் படி, இன்னும் மற்றவர்க்கும் கொடு, அனேகமாக ஒரு வருடத்தில் நான் திரும்பி வந்துவிடுவேன்." என்று கூறி விடைபெறுகிருன்.

சுருங்கக்கூறின் இது ஒரு கலைப்படைப்பு அல்ல ஒரு தத்துவப்படைப்பு. உயர்ந்த இலட்சியங்களைக் கூட மக்களின் வாழ்வியலுடனும், வாழ்வியல் பிரச்சனைகளுக்கூடாகவும் சொல்லப்படும் போதே அது மக்களின் உள்ளத்தைத் தொட முடியும். அப்போது தான் சினிமாவும் அதற்குரிய யதார்த்தத்தையும், கலைத்துவத்தையும் பிரதிபலிக்கவும், பேணவும் வாய்ப்பாக இருக்கும்.

கதாநாயகன் ஞானத்தின் நண்பன் ஒருவன் முனகூட்டியே அமெரிக்கா செல்வதும், பின் கதாநாயகன் அமெரிக்கா புறப்படுவதும் ஆகிய அனைத்தும் வேணுமென்று இணைக்கப்பட்ட காட்சிகளாவே தோன்றுகிறது. மேலும் இக்காட்சிகள் எமக்கு ஒரு உண்மையை ஊகிக்க வைக்கிறது.

அதாவது, "அமைப்பு வடிவம் பெற வேண்டிய அல்லது நக்சலைட் போன்ற அமைப்புக்களுடன் தன்னை இணைத்துக்கொள்ள வேண்டிய கதாநாயகன் இந்திய சினிமா தணிக்கைக் குழுவின் நிர்ப்பந்தத்தினுலேயே அமெரிக்காவுக்கு அனுப்பப்படுகிருன்" என்பது

ஆனல் இயக்குநர்-கதாநாயகன் வெற்றிவேந்தன் இதே காரியத்தை தனித்து நின்று எதனையும் சாதித்துவிட முடியாத நிலையில் ஞானம்-கதாநாயகன்-அமைம்பு வடிவம் பெறவேண்டியதன்-அல்லது அமைப்புக்களுடன் இணைந்துகொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை வேறு படிமங்களைக் கையாள்வதன் மூலமாகவேனும் ரசிகர்களுக்கு உணர்த்தத்தவறிவிட்டார்.

ஆரமபத்தில் தோன்றும் அரை நிர்வாணக் கவர்ச்சி நாட்டியமும்,
கதாநாயகி செல்வி (தமிழ் சினிமாவின் பாரம் பரியத்திற்கேற்ப) வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவளாக இருப்பதும்,

சினிமாவுக்குப் பாட்டெழுதிச் சீரழிந்த 'வைரமுத்துக்'களைப் பார்கத் தவறி அதேவரிசையில் கதாநாயகன் ஞானமும் சினிமாவுக்கு பாட்டெழுதச் 'Chance' கேட்டு தயாயிப்பாளர்களிடம் அலைவதும்,
விமர்சனத்திற்கும்-விசனத்திற்கும் உரியநிகழ்வுகளாகும்

"Oliver stone" போன்ற சிறந்த இயக்குனர்கள் கூட ஆரம்பத்தில் Hollywood சினிமாக்களை இயக்கியபோதும் தமது சொந்த மன உணர்வுகளை வெளிப்படுத்தும் Plattoon போன்ற படங்களை உலகுக்குத் தரத்தவறியதில்லை. ஆனல் சமூகப் பொறுப்பு மிக்க ரசிகர்களின் பார்வையில் பாலச்சந்தர், இராஜேந்தர், பாரதி-பாக்கியராஜாக்களின் சீரழிவுச் சினிமாக்களின் நடுவே "நான் போகும் பாதை" திரைப்படம் வரவேற்கப்படவேண்டிய ஒரு திரைப்படம். இயக்குனர் வெற்றிவேந்தனினதும், துணை நின்ற திரைப்படக்கலலூரி மாணவாகளினதும் இம் முயற்சி மேலும் முன்னெடுக்கப்படவேண்டும்.


வி.லோகதாஸ்

## ஏக்கம் என்று தான் தீருமோ !

ஆளும் வெறி கொண்டு
அரக்கனாக மாறி
ஆலுக்கு வேர் தாங்கும்
விழுதெல்லாம் இன்று
வெடிகுண்டுக்கு இரையாகி
கற்தூணாகின்ற காட்சி இங்கு
விழுதாகி வேர் ஊன்றி
கிளை தாங்கும் என்று
ஆராரோ பாடி பாலூட்டிய
தாய் இன்று
வற்ருத கண்ணீருக்கு வழிவிட்டு
வாடி வதங்கும் நெஞ்சங்கள்

சாரங்கன்
( இலங்கை )

www.tamilarangam.net



# சோவியத் யூனியன் என்றொரு.....

இனி வரப்போகும் ஆண்டுகளில் புதிய உலகப்படம் ஒன்று வரையப் போகிறோம். ஒன்றாய் இருந்த நாடுகள் பல சிறு துண்டுகளாய்ச் சிதறுவதும், எல்லைகளுக்காய் யுத்தங்கள் மூளுவதும், சமாதானத்தின் பெயரில் ஐ.நா. துருப்புகள் நிலை நிறுத்தப்படுவதும் எதிர்கால நிகழ்வுகளாய்த் தொடரலாம். இந்த முகவுரைக்கு முன்னுதாரணமாய் இருப்பவை: உடைந்து சிதறும் யூகோஸ்லாவியாவும், சிதைக்கப்பட்ட சோவியத் யூனியன் கூட்டமைப்பும்.

இன்று சோசலிஸ சோவியத் யூனியன் என்றொருநாடு இல்லை. 70 ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் சேர்ந்து வாழ்வதால்தான் முன்னேற்றம், பலம் உண்டு என்று கருதிய தேசிய இனங்கள் இன்று வெறுப்போடும், விரக்தியோடும் பிரிந்து போவதால்தான் விடுதலை, சுதந்திரம், விமோசனம் கிடைக்கும் என்று கருதும் அளவிற்கு வரலாற்று அனுபவங்கள். இந்தவகையில் தனது 70 ஆண்டுகால படிப்பினைகளை இன்றைய உலகிற்குத் தந்திருக்கிறது சோசலிஸ சோவியத் யூனியன்.

வரலாற்றுப் புத்தகத்தைத் திருப்பிப் பார்ப்போம்.

இந்த நூற்றாண்டில் நிகழ்ந்த மக்கள் புரட்சிகளுக்கும், எழுச்சிகளுக்கெல்லாம் நம்பிக்கை ஒளிகொடுத்த ஸ்தலம், சோசலிஸப் புரட்சியின் தாய் நிலம்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தில் 2 இலட்சத்திற்கும் அதிகமான தன் மக்களை பலிகொடுத்து உலக மக்களை பாஸிஸ அபாயத்திலிருந்து காப்பாற்றிய உலக நண்பன்.

மறுபுறம் அமெரிக்காவுடனான மேலாதிக்கப் போட்டியில் தனது பொருளாதாரத்தின் பெரும் பகுதியை இராணுவத்திற்குக் கொட்டியும், ஆக்கிரமிப்புகளை நடாத்தியும், உலகத்தை அணுவாயுத அச்சுறுத்தலுக்குள் தள்ளிய சோவியத் யூனியன் என்ற நாடு இப்போ இல்லை. அது செத்துப்போய்விட்டது அல்லது சாகடிக்கப்பட்டுவிட்டது.

மையப்படுத்தப்பட்ட பொருளாதார அமைப்பு, தீவிர ஜனனாயக மறுப்பு, ரசிய மேலாதிக்கம், மோசமாக உயர்ந்து வந்த பொருளாதார நெருக்கடிகள் போன்ற காரணிகள் சோவியத் யூனியன் கூட்டமைப்பை பல பத்து ஆண்டுகளுக்கு முன்பே ஆட்டங் காணச் செய்யத் தொடக்கிவிட்டது. இருந்தும் மறுசீர

www.tamilarangam.net

மைப்பு, பகிரங்கப்படுத்தல் போன்ற மிஹைறயில் கொர்ப்பச்சேவின் சீர்திருத்தக் கொள்கைகள்தான் தேசிய இன எழுச்சிகளுக்கும், சோவியத் யூனியனின் இறப்புக்கும் உந்துசக்திகளாய் இருந்தன.

ஆகஸ்ட் மாதம் நிகழ்ந்த ஆட்சிக் கவிழ்ப்பு தோல்வியானதைத் தொடர்ந்து சோவியத் யூனியனிலிருந்த 15 குடியரசுகளில் 3 பால்டிக் குடியரசுகள் பிரிந்து போயின. சோசலிஸப் பாதையை முற்றாக அடைத்து முழுக்க முழுக்க முதலாளித்துவச் சீர்திருத்தங்களைக் கோரிய ரசிய அதிபர் பொறிஸ் ஜெல்ஸின் கோர்ப்பச்சேவின் அதிகாரங்களைத் தட்டிப் பறித்ததும் ஒரு பொம்மை ஜனாதிபதியாய் கோர்ப்பச்சேவை மலினப்படுத்தியதும் பிற்பட்ட நிகழ்வுகள்.

பால்டிக் குடியரசுகள் பிரிந்து போனபின் எஞ்சிய 12 குடியரசுகளும் தம்மையும் 12 சுதந்திர நாடுகளாய் பிரகடனப்படுத்திக்கொண்டன. எப்படியாயினும் மீண்டும் ஒரு புதிய யூனியன் அமைப்போம் என்ற கோர்ப்பச்சேவின் முன்முயற்சிகள் எல்லாவற்றையும் தோல்வி ஆக்குவதிலும், கோர்ப்பச்சேவைப் பதவியிலிருந்து விரட்டுவதிலும் உறுதியாயிருந்த ரசிய அதிபர் இறுதியில் வெற்றி பெற்றார்.

ஸ்லாவிய வர்ண இனத்தைச் சேர்ந்த ரசிய, உக்கிரேனிய, பைலோ ரசியத் தலைவர்கள் பைலோ ரசியத் தலைநகரில் டிசம்பர் 8ஆம் திகதி ஏற்படுத்திய சுதந்திர நாடுகளின் பொதுநல அமைப்புத்தான் சோவியத் யூனியனின் ஆயுள் முடிவதை உறுதிப்படுத்தியது. இந்த அமைப்பில் உள்நாட்டு யுத்தத்தில் மூழ்கியிருந்த ஜியார்ஜியா குடியரசைத் தவிர ஏனைய 8 குடியரசுகளும் பின்பு இணைந்துகொண்டதும் சோவியத் யூனியன் என்ற பெயர்கொண்ட அமைப்பை இல்லாதொழிக்கவும், கோர்ப்பச்சேவ் பதவி விலகவும் நாள் குறிக்கப்பட்டது.

பனி உறை வெப்பநிலை 23இலும் தாழ்வாய் இருந்த டிசம்பர் மாதத்து குளிர்காலம், நத்தார் பண்டிகைத் திருநாள், மொஸ்கோ நகரம் இருட்பொழுதுக்குள் இழுத்து மூடிய நேரம், இரவு 7 மணிக்கு சோவியத் யூனியனின் கடைசி ஜனாதிபதி என்ற பெயரோடு மிஹைறயில் கோர்ப்பச்சேவ் பதவி விலகிக் கொண்டார். அக்டோபர் புரட்சியை வெற்றிகண்டு முதலாளித்துவ சமுதாயத்திற்கே சிம்ம சொப்பனமாய் வான் நோக்கி அசைந்துகொண்டிருந்த சுட்டியலும், அரிவாளும் தாங்கிய செங்கொடி இறக்கப்பட்டு ஜார் காலத்து நீலம், சிவப்பு, வெள்ளை சேர்ந்த ரசியக் கொடி கிறெம்ளின் மேல் ஏறி நின்றது.

சோவியத் யூனியன் சிதைப்புப் பற்றி 47 வயதான ரசியர் சொல்வது: இளைய சமுதாயத்தின் மடத்தனமான சிகிச்சைதான் இது.

வைத்திய தாதி ஒருவர்: எனக்கு மட்டுமல்ல, உலகிற்குக் கூட நிறையப் பாதுகாப்பு உண்டு என்று சந்தோசிக்கிறார்.

ஆனால் 37 வயதான ஆசிரியை சொல்வது எம்மை ஒருகணம் சிந்திக்க வைக்கிறது:

" எனது ஒரு கண் நட்புக்காகக் கலங்குகிறது. மறு கண் நம்பிக்கைக்காக சமாதானம் செய்கிறது " என்கிறார். இதுதான் உண்மைநிலை. கிட்டத்தட்ட 70 வருடங்களாக ஒருகொடியின் கீழிருந்துவந்த குடியரசுகள் பிரிந்து போவது வேதனைக்குரியதுதான். ஆயினும் பிரிந்து போவதுதான் எம்மீது அவர்களுக்கு நம்பிக்கை கொடுக்குமெனில் அதை வரவேற்றாகவேண்டும்.

www.tamilarangam.net

என்று அவர் தொடர்ந்து சொல்கிறார். இந்த நல்ல பண்பு அந்த மண்ணில் இன்னமும் நிலவுகிறது.

300 ஆண்டுகளுக்கு மேலாய் ரசியாவுடன் இணைக்கப்பட்டிருந்த உக்கிரைன் பலம் பொருந்திய வளமான நாடு. இங்கே டிசம்பர் மாதத்தில் நிகழ்ந்த சர்வஜன வாக்கெடுப்பில் 80 வீதமான மக்கள் சோவியத் யூனியனிலிருந்து பிரிந்து போவதை ஆதரித்தனர். உக்ரைனிய மக்களின் சுதந்திரத் தீர்மானம்தான் மரணப்படுக்கையிலிருந்த சோவியத் யூனியனுக்கு வார்க்கப்பட்ட கடைசிப் பால் துளி.

அன்று உக்கிரைன் சோவியத் யூனியனின் உணவுக் களஞ்சியம். இன்று அணுவாயுத பலம் நிறைந்த சுதந்திர நாடு உக்கிரைனின் முக்கியத்துவம் பற்றி லெனின் குறிப்பிடும்போது " உக்கிரைனை நாம் இழப்போமானால் சோவியத் யூனியனே இல்லை. ஏனெனில் சோவியத் யூனியனின் தலை என்பதே உக்கிரைன்தான் " என்றார்.

லெனின் சொன்னது இன்று நிகழ்ந்தது. 11 சுதந்திரக் குடியரசுகளுக்கான பொதுநல அமைப்பில் முக்கிய பாத்திரம் வகிக்கும் உக்கிரைன்

சோவியத் இராணுவத்தைத் தொடர்ந்து இனியும் வைத்திருக்க விரும்பவில்லை. ரசிய மேலாதிக்கமும், சோவியத் இராணுவமும்தான் தமது மக்களின் முன்றில் ஒரு பங்கினரைக் கொன்று குவித்ததாக குற்றம் சாட்டுகின்றனர்.

உக்கிரைன் தொடக்கம் மத்திய ஆசியாவில் அணுவாயுதம் குவிந்திருக்கும் பெரும் நிலப்பரப்பையும் கொண்ட கஜகிஸ்தான் குடியரசுவரை சோவியத் இராணுவம் தேவையில்லை என்று சுதந்திரக் குடியரசுகளுக்கென இராணுவத்தையும் கட்டத் தொடங்கிவிட்டன.

சோவியத் இராணுமானது பெரும்பான்மை இனத்தை அதிகம் பிரதிநிதித்துவப்படுத்துவதும், மற்றத் தேசிய இனங்களின் மனவெழுச்சிகளைப் புரியாமல் தாக்குதல் செய்வதும் தொடர்ச்சியான நிகழ்வுகள். 91 ஜனவரியில் பால்டிக் குடியரசுகள் மீது சோவியத் இராணுவம் பாய்ந்ததும்... யூகோஸ்லாவியா இராணுவம் குரோஷியாவைக் குதறியடித்ததும் இதற்கு அண்மைக் கால நல்ல உதாரணங்கள்.

இராணுவம் கலைக்கப்படவேண்டும் என்ற பிரச்சினையில் ரஷ்ய அதிபர் பொறில் ஜெல்ஸினைப் பொறுத்தவரை இரண்டு சிக்கலில் மூழ்கியிருக்கிறார்.

ஒன்று: இந்தப் பலமான சோவியத் இராணுவமும், கலைக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியும் சேர்ந்து மீண்டும் ஒரு ஆட்சிக் கவிழ்ப்பை நடத்தலாம் என்பது.

பல சிறுபான்மைத் தேசிய இனங்களையும், இனக் குழுமங்களையும் 16 சுயாட்சி குடியரசுகளாய் இணைத்து தன்னுள் வைத்திருக்கும் ரஷ்ய குடியரசானது சோவியத் இராணுவத்தை கலைக்கும்போது மேலும் பல 10 சுதந் திரக் குடியரசுகள் உருவாகுவதற்கு வழி சமைத்துவிடும் என்று அஞ்சுகிறது இதுவே ஜெல்ஸின் பக்கமாயுள்ள இரண்டாவது சிக்கலான பிரச்சினையாகும்.

ரஷ்யக் குடியரசில் சுயாட்சி அதிகாரம் கொண்டிருந்த 13 இலட்சம் மக்கள் வாழும் Checheno - Ingushetia என்ற பிரதேசம் பிரிந்துபோக விரும்பியதும், ரஷ்ய அதிபர் பொறிஸ் ஜெல்ஸின் இராணுவத்தைக் கொண்டு அடக்க முயற்சித்ததும், ரஷ்யப் பாராளுமன்றம் அதைக் கண்டித்து அரசியல் தீர்வைக் காணும்படி முடிவெடுத்ததும் ரஷ்ய அதிபரின் அச்சத்துக்கு ஆதாரமான சம்பவமாகும்.

www.tamilarangam.net



அதேநேரம் ரசிய அதிபர் பொறில் ஜெல்ஸின் மிகப்பெரிய ஜனநாயகவாதி என்று வரையப்பட்ட படம் இன்று கலையத் தொடங்கிவிட்டது. அவரது பேச்சிலும், செயலிலும் ஏகாதிபத்திய, சர்வாதிகார உணர்வு வெளிப்படத் தொடங்கிவிட்டதாகப் பத்திரிகைகளே எழுதுகின்றன.

" இப்படியான ஒரு தலைவர் எமக்குத் தேவையில்லை. எவ்வளவு விரைவில் இவரைத் தூக்கியெறிய முடியுமோ முதலில் அதைச் செய்வோம் " என்று ஆவேசிக்கிறார் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் ஒருவர்.

சோவியத் யூனியனின் சிதைப்பைத் தொடர்ந்து விரைவாக உட்புகுத்தப்பட்ட சந்தைப் பொருளாதாரத் திட்டமும், கட்டுப்பாடற்ற விலை நிர்ணயமும் ரஷ்யாவில் பொருட்களின் விலையை 5-10 மடங்காக உயர்த்திவிட்டது. எங்கும் கறுப்புச்சந்தை பெருகிவிட்டது. 1 கிலோ பாணுக்கும், 1 லீற்றர் பாலுக்கும் மணிக்கணக்கில் வரிசையில் காத்துக் கிடக்க வேண்டியிருக்கிறது

சோவியத் யூனியன் சிதைப்பு, விலைவாசி உயர்வு, இராணுவத்தை கலைக்கும் திட்டம் என்பவற்றை கண்டித்தும், 'தொழிலாளர் ரசியாவுக்காக' அழைப்பு விடுத்தும் ஜனவரி 12ஆம் திகதியும், பெப்ரவரி 9ஆம் திகதியும் மொஸ்கோவிலும், ஏனைய பகுதிகளிலும் ஆயிரக்கணக்கானோர் ஊர்வலமாய்த் திரண்டனர்.

"மீண்டும் சோவியத் யூனியன் வேண்டும்"
"இராணுவம் கலைக்கப்படக் கூடாது"
"ஜெல்ஸின் பதவி விலக வேண்டும்"
"சோவியத்துக்களின் மக்கள் சபை வேண்டும்"
"கைதுசெய்யப்பட்ட தலைவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்"
"முதலாளித்துவம் ஒழிக! சோசலிஸம் வாழ்க"

- என்ற முழக்கங்களுடன் ஊர்வலங்கள் நடந்தன. ரஷ்யாவின் புதிய கம்யூனிஸ்ட் கட்சியும், தொழிலாளர் இயக்கமும் மேற்படி ஊர்வலத்திற்கு அழைப்பு விடுத்தன.

மத்திய ஆசியாவிலுள்ள உபெஸ்கிஸ்தானிலும் பாண் தட்டுப்பாட்டை எதிர்த்தும், குடியரசு அதிபர் கறிமொவ் பதவி விலகவேண்டும் என்றும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர். பல்கலைக்கழகம் முன்பாக ஆரம்பித்த ஊர்வலத்தின் மீது இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்து 10 மாணவர்களைப் பலியெடுத்தும் 500 மாணவர்களுக்கு மேற்பட்டோரைக் கைது செய்தும் சென்றதாக செய்திகள்

இன்று ஐ.நா உட்பட சர்வதேச அமைப்புகளிலும், தூதரகங்களிலும் சோவியத் யூனியன் வகித்த பாத்திரத்தை ரசியா எடுத்துக்கொண்டது. உலக மேலாதிக்கப்போட்டியில் சோவியத் யூனியன் வகித்த இடத்தை சுதந்திரக் குடியரசுகளுக்கான பொதுநல அமைப்பு எடுக்க வேண்டுமென்பது ரஷ்ய அதிபரின் விருப்பமாக இருக்கலாம். ஆனால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏனைய குடியரசுகள் எல்லாம் மீண்டும் ரஷ்ய இனம் மேலாதிக்கம் செலுத்தக்கூடிய எந்த ஒரு அமைப்பிலும் இருக்கத் தயாரில்லை என்றும், சுதந்திரக் குடியரசுகளாக இருக்கவுமே விரும்புகின்றன.

பறிபோன தன் இஸ்லாமியச் சகோதரர்களை தழுவும் முயற்சியில் ஈரானும், தேசியவாத அடிப்படையில் துருக்கியும் கஜகிஸ்தான், உபகிஸ்தான், நூர்க்மென்தான், ரடிகிஸ்தான், அஸைர்பைஸான் ஆகிய 5 இஸ்லாமிய சுதந்திரக்

ரசிய குடியரசு அதிபர் போறிசு ஜெல்சினுக்கும் அவரது அரசுக்கும் எதிராக மீண்டும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் Moscow வில் நிகழ்ந்துள்ளது.

பெப்பிரவரி 23 ம் திகதி சோவியத் இராணுவம் கட்டப்பட்ட 74 ம் ஆண்டு நிறைவு தினத்தன்று மேற்படி ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது. சோவியத் தலைவர்களான லெனின், Stalin உருவப்படங்களை தாங்கிய வண்ணம்

<< ஜெல்சின் பதவி விலக வேண்டும் >>

<< ஜெல்சின் அரசு ஒழிய வேண்டும் >>

என்ற முழக்கங்களுடன் 5 ஆயிரத்துக்கும் அதிகமானோர் மாயோகொல்சக்கி சதுக்கத்தில் ஊர்வலமாய் திரண்டனர். ஊர்வலத்தினர் கிரெம்ளின் நோக்கி நகரத்தொடங்கிய போது பொலிசார் குண்டாந்தடி தாக்குதல்களை மேற்கொண்டதில் பல நூற்றுக்கணக்கானோர் படுகாயமுற்றனர். கைது செய்யப்பட்டவர்களின் தொகை தெரியவில்லையென பத்திரிகையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சோவியத்யூனியனின் சிதைப்பின் பின்பு ரசியாவில் உருவாக்கப்பட்ட புதிய கம்யூனிசக்கட்சியும் வலதுதீவிரவாதிகளும் இந்த ஊர்வலத்தை நடாத்தியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நாடுகளுக்கிடையிலான சுங்க வரிவிலக்கு, பொது நாணயப் புழக்கம், பொதுமின்சக்தித் திட்டங்கள், இயற்கைப் பாதுகாப்பு, இராணுவத்திற்கான பொது நிதி ஒதுக்கீடு போன்ற முக்கிய திட்டங்களுக்கு தீர்வு காணும் நோக்கில் பெப்ரவரி நடுப்பகுதியில் கூட்டப்பட்ட மகாநாட்டில் உருப்படியாய் எதுவித தீர்வும் காணப்படாமல் மீண்டும் மார்ச் மாதம் கூடுவதாய் அறிவிக்கப்பட்டுள்ளது.

உடைந்து சிதறிப்போன சோவியத் யூனியனில் ஒருபுறம் இந்த ஆட்சியாளர்களை எதிர்த்துப் போராட்டங்கள் வலுப்பெறுகின்றன. மறுபுறம் இந்தச் சுதந்திரக் குடியரசுகளை எப்படியும் விழுங்கி விட பொருளாதார உதவிகள், பொருளாதார இணைப்பு என்ற பெயரில் அமெரிக்கா, ஐரோப்பிய சமூகம், முதல் ஈரான், துருக்கி, பாகிஸ்தான் போன்ற முஸ்லீம் நாடுகளும் அலையத் தொடங்கிவிட்டன.

குடியரசுகளோடு ஒரு பொருளாதாரக் கூட்டமைப்பை ஏற்படுத்த முயற்சி செய்கின்றன.

பெப்ரவரி நடுப்பகுதியில் ஈரானில் கூடிய பொருளாதாரக் கூட்டமைப்பு மகாநாட்டில் அஸைர்பைஸான், உபகிஸ்தான், ரடிகிஸ்தான் ஆகிய 3 சுதந்திரக் குடியரசுகளும் முழு உறுப்பினர்களாக இணைந்து கொண்டன.

சிதைந்துபோன சோவியத் யூனியனில் இன்று வளர்ந்துவரும் மதவெறி, இனவெறி சக்திகளால் 'சுதந்திரக் குடியரசுகளுக்கான பொது நல அமைப்பை' ஒரு பலமான கூட்டமைப்பாக பேணமுடியாது என்பதையே நிகழ்காலச்சம்பவங்கள் தெரியப்படுத்துகின்றன.

*சி.அமுதன்.*

அட்டைப்படக்கவிதைகள்
· கலைச் செல்வன்.

www.tamilarangam.net

# நிகழ்வுகள்

ஜெகன்

நிகழ்வுகளின் கோரத்தால்
நெகிழ்வுடனே
காலம் கழிக்கும்
இவர்களின் ஏக்கம்
மகிழ்வை எண்ணி
கொண்டிருக்கிறது

அனலான செய்திகளே
அறிவிக்கும் வேளையிலும்
நந்தவனக் காற்ருய்
நம்பியிருந்த நீங்களும்
இப்போ இல்லையாம்

களை எடுப்புக்களை தான்
கண்டோம் இப்போ
நாற்றுக்களே தேடி
நறுக்கப் படுவதால்
சுதந்திரத் தோட்டம்
சுருங்கிக் கொண்டேயிருக்கிறது

அந்தப் பல்கலைக்கழக
மரத்தின் கீழே நாம்
கூடியிருந்து விவாதங்கள்
நடத்திய நாட்கள் இன்றும்
பசுமையான நினைவுகள்
ஆனல் இப்போ
மரம் மட்டும் தானும்
உங்களைக் காணவே இல்லையாம்
நடத்தல்களும் என்னவோ ?
நாம் அறியோம்

நெடுந்தூரம் வந்தும்
நெஞ்சை சுடும் சேதிகளே
நெஞ்சை நிரப்பிக்
கொண்டிருக்கிறது
இந்நிலையில் நான்
எவருக்காய் எழுதிடுவேன்
எப்படி எழுதிடுவேன்



# ஞானக்கூத்தருடன்....

வாசலில் நின்று நானே வரவேற்றேன். வழமையாக தீவிரமாக சிந்தித்துக்கொண்டோ அல்லது சிலேடையாக பழமொழியையோ, பாடலையோ உதிர்த்துக் கொண்டு வருவார் ஞானக்கூத்தர். இம்முறையும் ஒரு பாடலை முணுமுணுத்துக்கொண்டு வந்தாலும் முகத்தில் ஒருவித உற்சாகக்களை பொங்கி வழிந்தது. இம்முறை அவர் முணுமுணுத்த பாட்டை வைத்து அவரது உற்சாகத்திற்கான காரணத்தை கண்டுபிடித்து விட்டேன். இருந்தாலும் அவர் மூலமே அறிய விரும்பினேன்.

<< என்ன இண்டைக்கு ஒரே சந்தோசக் கூத்தாடுறீர் >>

எனது கேள்வியை காதில் வாங்கியும் வாங்காதவராக வந்தமர்ந்தவர் பாடலை சற்று உரக்கவே பாடினார்

<< இன்னும் எமது மண்ணில் பச்சை இரத்தம் பாய்கிறது உண்மை இழந்தவர் நாம் உள்ளத்தில் ஓர் வெறுப்பு.....>>
சரிதான், அண்மையில் போர்ணில் நடந்த எம்மவரின் கலைநிகழ்ச்சியில் நாடகத்தின் இறுதிக்காட்சியில் இடம்பெற்ற பாடல் இது. பாட்டு ஞானக்கூத்தரை சரியாத்தான் பாதிச்சிருக்கு. இருந்தாலும் பாட்டு முழுமையாக என்னை கவராதபடியால் கூத்தரை சீண்டினேன்.

<< பாட்டில் அப்படி என்ன இருக்கிறது. ஒரே சோகம் கலந்த ஒப்பாரியாகத்தானே கிடக்கு >>

<< முதல்ல பாட்டை வடிவாகக் கேட்டுவிட்டு பின்பு விமர்சி. நீ சொல்லுவது போல சோகம் நிறைந்த பாடல்தான், ஆனா ஒப்பாரியல்ல இன்றைய எங்கட நிலமையும் அதுதானே. இந்த வரிகளைக் கேள்
"காலங்கள் மாறுகின்ற வேளையில் தீர்ப்பிருக்கு
மனிதர்கள் வாழ்கின்ற வாழ்வுக்கு உயிரிருக்கு"
சோகத்திலும் இழையோடும் நம்பிக்கையைக் கொடுக்கும் உறுதியான இந்த வரிகள் உன் காதில் விழவில்லையோ >>

<< நீர் விளக்கிச் சொல்லும்போதுதான் இவ்வளவு விசயம் இருக்கெண்டு தெரியுது. சரி பாடலை முழுமையாக அவதானிக்காதது என்ர தவறுதான். அது கிடக்கட்டும் விசயத்திற்கு வாரும். நீர் ஆனந்தக் கூத்தாடும் அளவுக்கு நிகழ்ச்சி என்னத்த சாதிச்சு போட்டுது. அதச் சொல்லும் >>

<< சாதனைகளையும், விளைவுகளையும் இப்போது மதிப்பிட முடியாது. ஆனால் இது ஒரு ஆரம்பம். இது தொடரும், வளரும் என்ற நம்பிக்கை அவ்வளவு தான். சீரழிவுக்கலைகளுக்கு மத்தியில் இப்படி ஒரு மாற்றீடு இருக்கிறது, என்று நடைமுறையில் காட்டியது சந்தோசப்படக்கூடிய விடயம் தானே. >>

<< சீரழிவு நிகழ்ச்சிகளை இது தடுத்து நிறுத்தும் என்கிறீரா >>

<< நீ அவசரப்படுகிறாய். நான் முதல்ல சொன்னது போல் இது ஒரு ஆரம்பம் அவ்வளவு தான். தடுத்து நிறுத்துமோ, இல்லையோ அதற்கெதிரான போராட்டம் நடந்திருக்கிறது. நடக்க வேண்டும் என்பது தான் முக்கியம் >>

<< ஆனால் இண்டைக்கு பெரிய சக்தியாக இருக்கிற விடுதலை இயக்கமோ அல்லது ஏனைய அமைப்புகளோ இந்த சீரழிவு நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்திறபோது: இப்படியான முயற்சிகள் எம்மாத்திரம். >>

<< இப்பதான் நீ விசயத்துக்கே வந்திருக்கிறாய். இங்குதான் இந்த சீரழிவு நிகழ்ச்சிகளை நடத்துவதன் நோக்கம், இயக்கங்களின் தேசியவிடுதலைப் போராட்டம் குறித்த நிலைப்பாடுகள் எல்லாமே கேள்விக்குள்ளாகின்றது. இவை விரிவாக ஆராயப்பட வேண்டியவை. ஆனால் தேசிய கலை, கலாச்சாரங்களை வளர்த்தெடுப்பதில் இவற்றுக்கு கொஞ்சமேனும் அக்கறையில்லை என்பது தெளிவானது. இவை சாதாரணமாக விடுதலைப்பாடல் கெசற் ஒன்றை வெளியிடுவதற்குக் கூட தமிழ்நாட்டில் தங்கியிருக்க வேண்டிய நிலையில் இருக்கின்றன. இது ஒன்றே இவர்களது தேசிய கலை கலாச்சாரத்தை வளர்ப்பதற்கான முயற்சியை விளக்கப் போதுமானது. தேசிய விதலைப் போராட்டம் என்பது பண்பாட்டுத் தளத்திலும் நிகழ்த்தப்பட வேண்டியது என்பதை இவை மறந்து'விட்டன. அல்லது அவர்களால் இயலாமல் உள்ளது.>>

<< அப்படி ஒரேயடியாக சொல்லேலாது எண்பத்தைந்திலும் அதற்கு முன்னும் இப்படியான முயற்சிகள் நடந்திருக்கின்றனவே. அதையும் இந்த இயக்கங்கள் ஆதரித்தும் முன்னின்றும் நடத்தினவே. ஈழத்தில் அப்போது வில்லுப்பாட்டுகளும், நாடகங்களும் நடந்தனவே. நீர் ஒரேயடியாக மட்டந்தட்டப்பார்க்கிறீர்.>>

www.tamilarangam.net

கூத்தரை மடக்கிய திருப்தியில் நிமிர்ந்து உட்கா ர்ந்தேன்.

<< நீ பிரச்சனையை மேலோட்டமாக பார்க்கிறாய். இந்த நிலைமை பின்பு ஏன் இல்லாமல் போனது. என்ற கேள்வியைக் கேட்டுப்பார் புரியும். 85 இலும் அதற்கு முன்னும் சற்று ஆரோக்கியமான சூழல் நி லவியது எனபதை நான் மறுக்கவில்லை. இயக்கங்க ளுக்கிடையிலான போட்டியில் பல நிகழ்ச்சிகள் நட த்தப்பட்டன. அவை அநேகமாக தங்களைப்பற்றிய பிரச்சாரமாகவே காணப்பட்டன. அதை விடு அதல்ல இங்கு பிரச்சனை. இவற்றிற்கு புறம்பாக நீண்ட காலத்தில் ஈழவிடுதலைப் போராட்டத்திற்கு ஆரோ க்கியமான பங்களிப்பை வழங்கியிருக்கக்கூடிய த னித்துவமான கலைமுயற்சிகளும், அமைப்புகளும் முடமாக்கப்பட்டமை தான் கவலைக்குரியது. இதற்கு அடிப்படையான ஜனநாயகம் முற்றாக மறுக்கப்பட்ட நிலையில் இவை தேக்கமுற்றுவிட்டன. >>

<< அப்படியென்டால் சிங்கள நாடக மற்றும் கலை முயற்சிகள் தேசியத்தன்மையைப் பெற்று வளர்ந்த மைக்கும் தமிழ்ப்பகுதிகளில் தேக்கமுற்றமைக்கும் தமிழ் கலைஞர்களதும், படைப்பாளிகளதும் சமூகப் பிரஞ்ஞை, ஒற்றுமையின்மையும், சுயநலத்தன்மையு மே காரணம் என பேராசிரியர் மௌனகுரு குறிப் பிட்டுள்ளாரே கவனித்தீரா? >>

<< நானும் பார்த்தேன். அது உண்மையெனினும் கூட இது அடுத்த கட்டப் பிரச்சனை. அடிப்படையா னது நான் மேலே சொன்னது. மௌனகுரு பார்த்தி ருப்பது தேக்கத்திற்கான வேறு ஓர் கோணத்தை>>

<< ஆறு இண்டைக்கு ஐரோப்பாவில் இருக்கும் எத் தனையோ படைப்பாளிகளும், கலைஞர்களும் தங்க டை 'தனித்துவங்களைப்' பேணிக்கொண்டும், கூட்டு முயற்சியின் தார்பரியத்தை உணராமைக்கும் கார ணமாயிருப்பது மௌனகுரு மேலே சொன்னவை தானே.>>

<< ஐரோப்பாவில் வசதிகள் இருந்தும், ஜனநாயகச் சூழல் இருந்தும் ஆக்கபூர்வமான கலை முயற்சிகளி ல் இறங்காமைக்கு அதுவும் ஒரு காரணம் என்பதோ டு; இயந்திரமயமான இந்த ஐரோப்பிய வாழ்வில் அவர்களும் அடிபட்டுப் போகிறார்கள் என்பதையும் அனுதாபத்தோடு நோக்கவேண்டும். ஆனால் நமது மண்ணில் ஜனநாயகச் சூழல் தொடர்ந்து இருந்திரு க்குமானால் இதைவிட உத்வேகத்துடனும், ஆரோக் கியமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் எ ன்பதே உண்மை. என்றபடியால்தான் சொல்லுறன் படைப்பாளிகளதும், கலைஞர்களதும் இன்றைய கட மை அத்தகைய ஜனநாயகச் சூழலுக்காக போராட வேண்டியதே. அவர்களது உயிர்த்துடிப்புள்ள வாழ்வு க்கு இது அடிப்படையானது. >>

ஒரே விசயத்தை திரும்பத் திரும்ப கதைக்காமல் வேற ஏதாவது கதைப்பது எங்கள் உரையாடலுக்கு உற்சாகமாக இருக்கும், அறுவையாக இராது என் பதற்காக ஞானக்கூத்தருடன் சிண்டுமுடியும் வேலை யில் இறங்கினேன்.

<< கொஞ்ச நாளா ராஜீவின் கொலையைப் பற்றிய விவாதங்கள் நடக்குது கவனித்தீரோ >>

<< முன்பு காம்பில சில சனங்கள் உதைக்க வந்தது ஞாபகம் இருக்கும் என நினைக்கிறன். நீ என்ன விடமாட்டாய் போல >>

நான் விடவில்லை

<< பயங்கரவாதச் செயலைக் கண்டிக்கத்தானே வே ணும் பனிமலரில அனந்தன் கூட...... >>

<< நாரதன் என்ற பேருக்கேற்ற வேலையத்தான் செ ய்கிறாய். இதைப் பற்றி அடுத்த முறை வடிவாகக் கதைப்பம் இப்ப ஆள விடு >>

■ **நாரதன்** ■

---

அமெரிக்காவின் பெருமையை உலகம் முழுவதும் பறைசாற்றவும் அமெரிக்காவின் 'ஜனநாயகத்தை' 'மனிதாபிமானத்தை' கருத்தியல் ரீதியில் உலகமக்களின் மனப்பரப்புகளில் பதியவைக்கும் நோக்கிலும் அவசர அவசரமாக வளைகுடாபற்றி இரண்டு திரைப்படங்கள் வெளிவந்துவிட்டன. << பாலைவனப் புயல் >> << பாலைவனக் குழந்தை என்ற பெயர்களில். இந்த இரண்டு படங்களின் வீடியோ கசெட்டுகள் சுவிசில் ஜெர்மன் மொழிபேசும் பகுதிகளில் மட்டும் ஒருமாதத்துள் இருபதாயிரம் பிரதிகள் விற்பனையாகி இருக்கிறது.

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராஜீவ் கொலையை காரணமாக வைத்து தமிழக ஆட்சிக்கட்டில் ஏறிய முன்னாள் நடிகை ஜெயலலிதா ஈழப்போராளிகள் மீதும் ஈழ அகதிகள் மீதும் பல அடக்குமுறைகளை கட்டவிழ்த்துவிட்டுள்ளனர். இதுவரை காலமும் இலங்கையில் தமிழர்கள் மீதான இனப்படுகொலைகளை கண்டித்தும், எமது போராட்டத்தை தூக்கிப்பிடித்தும் அரசியல் பிழைப்பு நடத்திய " தமிழினக் காவலர் " களான கருணாநிதி வகையறுக்கள் பச்சோந்திகளாக மாறி தமக்கும் ஈழமக்களுக்கும் எதுவித தொடர்புமில்லையென்ற அளவிற்கு எம்மவர்களை கைகழுவி விட்டுள்ளனர். இந்நிலையில் தமிழகத்திலுள்ள புரட்சிகர அமைப்புக்கள் மற்றும் ஜனநாயக அமைப்புக்களே ஜெயலலிதாவின் இவ் அடக்குமுறைகளுக்கு எதிராக இன்றுவரை பல இடர்களுக்கும் மத்தியில் தொடர்ந்து போராடி வருகின்றனர். இவற்றை இங்கு வாழும் எம்மவர்களும் அறிந்து கொள்ளும்முகமாக மனிதத்தில் புதியஜனநாயகம் குழுவினரின் செயற்பாடுகளை அவர்களின் கடிதத்தில் இருந்து பிரசுரித்திருந்தோம். அதேபோல் புரட்சிகர அமைப்புக்களில் ஒன்றான கேடயம் குழுவினரின் செயற்பாடுகளை அவர்களின் கடிதத்திலிருந்து சுருக்கித்தருகின்றோம்.

தமிழகத்தில் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததிலிருந்தே இலங்கைத் தமிழருக்கு ஆதரவாகத் தமிழகத்தில் செயற்படும் சக்திகள் அனைத்தும் அச்சுறுத்தலுக்கும் அடக்குமுறைக்கும் உள்ளாகி வருகின்றன கடந்த ஐந்து மாதங்களாக இப்போக்கு தொடர்கிறது என்ற போதும் ஆவணி இறுதியிலிருந்து அரசின் இப்போக்கை எதிர்த்த உறுதியான எதிர்ப்பு இயக்கங்கள் உருவாகி வருகின்றன தமிழக அளவில் வலிமையுடன் உருவாகியுள்ள இந்த எதிர்ப்பு இயக்கங்கள் இலங்கைத் தமிழர் பிரச்சனை குறித்தும், தமிழகத்தில் நிலவும் அடக்குமுறைச் சூழல் குறித்தும் அகில இந்திய அளவில் விவாதத்தையும் உருவாக்கியுள்ளன. இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக ஆவணி 25லிருந்து எமது அமைப்பு மேற்கொண்ட தமிழகம் தழுவிய இருவாரப்பிரச்சார இயக்கம்தான் ஜெயலலிதா அரசுக்கு எதிரான இத்தகைய எதிர்ப்பு இயக்கங்களை விரிந்த அளவில் தோற்றுவிப்பதில் துவக்கப்புள்ளியாக அமைந்தது.

இருவாரப் பிரச்சார இயக்கத்தின் அரசியல் நோக்கங்களாகக் கீழ்க்கண்டவை வரையறுத்துக் கொள்ளப்பட்டன

1) ஈழ அகதிகள் மீதான அரசின் ஒடுக்குமுறையை எதிர்ப்பது

2) ஆயுதக்கலாச்சாரத்தை ஒழிப்பது என்ற பெயரில் மக்கள் மத்தியில் போராளிகள் பற்றிய ஒரு இழிவான பயங்கரமான பொய்ப்பிரச்சாரத்தை கட்டவிழ்த்துவிட்டு அதன் மூலம்தமிழகத்தில் இருக்கும் புரட்சிகர ஜனநாயக சக்திகளை மக்களிடமிருந்து தனிமைப் படுத்தி ஒடுக்கும் முயற்சிகளை முறியடிப்பது

3) ஈழப்போராளிகளுக்கு ஆயுதப்பயிற்சி அளித்து எல்லாவித உதவிகளையும் செய்த மத்திய மாநில அரசுகளே பின்னர் அவர்களைப் பிளவுபடுத்துவதும் ஒடுக்குவதும் இலங்கை மீதான தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்வதை நோக்கமாகக் கொண்டதே என்பதை அம்பலப்படுத்துவது.

4) தி.மு.க, அ.தி.மு.க போன்ற திராவிடக் கட்சிகளும் திரிபுவாதக் கட்சிகளும் ஈழப்பிரச்சினையில் மேற்கொண்டு வந்திருக்கும்அனைத்து நடவடிக்கைகளும் பிழைப்புவாத சந்தர்ப்பவாத நோக்கம் கொண்டவையே என்பதையும் இவர்கள் ஒரு போதும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் போருக்கு ஆதரவாக இருந்தவர்கள் அல்ல என்பதையும் அம்பலப் படுத்துவது.

5) பாசிசிட் ராஜீவின் பாசிச, ஊழல் மற்றும் விசுத்தரிப்புவாத நடவடிக்கைகளை எதிர்த்த பல்வேறு அரசியல்க் கட்சிகளும் அவர் கொலையுண்டதை

அடுத்து மிகப்பெரிய தலைவர்,உத்தமர்,மனிதாபிமானி எனப் புகழும் சந்தர்ப்பவாதத்தை அம்பலப் படுத்துவது.

இந்நோக்கங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட ஐந்து முழக்கங்கள் வடித்து முன்வைக்கப்பட்டன.

1)அகதிகளை வெளியேற்றாதே.

2)போராளிகளை இழிவுபடுத்தாதே.

3) ஈழத்தமிழ் மற்றும் போராளிகள் மீதான ஒடுக்குமுறையை உடனே நிறுத்து.

4) தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுவோம்.

5) இந்திய ஆட்சியாளர்களின் ஆதிக்க விசுத்தரிப்பு வாதத்தை முறியடிப்போம்.

இந்த அரசியல் உள்ளடக்கத்தை தெளிவு படுத்தும் வகையில் எட்டுப் பக்கத் துண்டுப்பிரசுரம் ஒன்றை தமிழ்நாடு அமைப்புக் கமிட்டி, இந்திய பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிய-லெனினிய) வெளியி

www.tamilarangam.net

ட்டது. வெகுஜன அமைப்புக்களான புரட்சிகர இளை ஞர் முன்னணி (R.Y.F),புரட்சிகர விவசாயிகள் மற் றும் விவசாயத் தொழிலாளர்முன்னணி (R.P,A.L.F) மக்கள் உரிமைக் கழகம் (O.C.D.R) மக்கள் கலாச் சாரக் கழகம் (P.C.A) ஆகியன இருவாரப் பிரச்சா ரத்தை தமிழகம் முழுவதும் பொதுக் கூட்டங்கள் கருத்தரங்குகள், மாநாடு, தெருமுனைக் கூட்டங்கள் வடிவில் எடுத்துச் செல்ல திட்டமிட்டுக் கொண்டன முழக்கங்களில் உடன்பாடுகொண்ட பிற புரட்சிகர, ஜனநாயக சக்திகளை இணைத்துக் கொள்ளவும் திட்டமிடப்பட்டது.

ராஜீவ் கொலைக்குப் பின் ஆட்சியாளர்களால் உரு வாக்கப்பட்ட பீதியூட்டும் அரசியல் சூழலில் தமிழ கத்தில் உள்ள சிலசந்தர்ப்பவாத,பிழைப்புவாத சக்தி கள் இலங்கைத் தமிழர் போராட்ட ஆதரவைக் கைக ழுவிய நிலையிலும் எமது அமைப்பும்,மற்றும் சில புரட்சிகர,ஜனநாயக அமைப்புகளும் தமது கருத்துக் களைத்தெளிவாக முன்வைத்து வந்தன. இலங்கைத் தமிழர் வெளியேற்றத்தைக் கண்டித்து யூலை மாதத் திலேயே எமது அமைப்பு பிரச்சார இயக்கத்தை நட த்தியது யூலை இறுதியில் கோவையில் இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக புரட்சிகர இளைஞர் முன் னணி நடத்தவிருந்த பொதுக்கூட்டம் தடைசெய்யப் பட்டது. இருப்பினும் தெருமுனைக் கூட்டமாக நிக ழ்ச்சியை தோழர்கள் நடத்தினர் நிகழ்ச்சியை நடத் திய பத்துத் தோழர்கள் கைதுசெய்யப்பட்டு கோவை மத்திய சிறையில் பூட்டப்பட்டனர்.

அடக்குமுறை நிலைமைகள் தொடர்ந்து நீடித்தபோ தும் அரசியல் சூழலைமாற்றுவதற்கான வலிமை மிக்க எதிர்ப்பு இயக்கத்தின் தேவையை உணர்ந்தே ஆவணி இறுதியில் தமிழகம் தழுவிய இருவாரப் பிரச்சார இயக்கத்திற்கு எமது அமைப்பு திட்டமிட் டது. சென்னையில் மாநாடு , தமிழகம் முழுவதும் 35க்கும் மேற்பட்ட பொதுக்கூட்டங்கள், 10க்கும் மேற்பட்டகருத்தரங்குகள், 100க்கும் மேற்பட்ட கிரா மக்கூட்டங்கள் தெருமுனைக் கூட்டங்கள், பல்வேறு கிராமங்களில் பிரச்சாரப் பேரணிகள், சைக்கிள்ப் பிரச்சாரப் பேரணிகள் எனஇருவாரப்பிரச்சார இயக் கத்திற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. துண்டறிக்கை, சுவரொட்டி,சுவரெழுத்து மூலம் விரிவான பிரச்சார த்தை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டிருந்தது.

மதுரைக் கருத்தரங்கு பற்றி அரசு ஆதரவுப் பத்தி ரிகை ஒன்று அவதூறுச் செய்தி வெளியிட்டுநடவடி க்கை எடுக்கக் கோரும் முன்பாக பல மாவட்டங்க ளில் இவ்வியக்கம் நடத்தப்பட்டது சிலமாவட்டங்க ளில் தடைசெய்யப்பட்டது. சென்னையில் நடைபெற இருந்த மாநாடும் நெல்லைக் கருத்தரங்கும் தடை செய்யப்பட்டு ஏறத்தாழ நூறு தோழர்கள் கைது செய்யப்பட்டனர் ஈரோடு, காரைக்குடிப் பொதுக்கூட் டங்கள் தடைசெய்யப்பட்டன பெரியார் மாவட்டத்தில் 5ம் ,சேலம், கோவை, நீலகிரி, திண்டுக்கல், அண்ணாமாவட்டங்களில் ஒவ்வொன்றுமாக ஒன்பது பொதுக் கூட்டங்களும் தி.மலை சம்புவரையர், பசும் பொன்,மதுரை மாவட்டங்களில் ஒவ்வொரு கருத்தர ங்கு என மூன்று கருத்தரங்குகளும் நடைபெற்றிருந் தன.

செப்டெம்பர் இரண்டாவது வாரத்துவக்கத்தில் மதுரைக் கருத்தரங்கு பற்றி அரசு ஆதரவுப்பத்தி ரிகை ஒன்று அவதூறு செய்தும் அரசு அடக்கு முறையைத்தூண்டி விடும் வகையிலும்செய்தி வெ ளியிட்டதைத் தொடர்ந்து எமது அமைப்பை புலி களுடன் தொடர்பு படுத்தி புலி ஆதரவாளர்கள் என வும், பிரிவினைவாதிகள் எனவும், தேசவிரோத சக் திகள் எனவும் சட்டசபையில் முதலமைச்சர் ஜெயலலிதா பொய்க் குற்றச்சாட்டுக்களை கட்டவிழ் த்துவிட்டார். மேலும் ஈழத்தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கும் அனைத்து சக்திகள் மீதும் தேசிய பாதுகாப்புச் சட்டம் பாயும் என அறிவித்து அடக்கு முறையை ஏவி விட்டார்.

இதையடுத்து தமிழகம் முழுவதும் நடக்கவிருந்த எமது அமைப்பின் அனைத்து நிகழ்ச்சிகளும் தடை செய்யப்பட்டன. தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் 124Aஇன் கீழ் 50தோழர்கள் உட்பட மேலும் 200 தோழர்கள் கைது செய்யப்பட்டும் பல்வேறு பிரிவுக ளின் கீழ் வழக்குகள் பதிவுசெய்யப்பட்டும் அடக்கு முறை கட்டவிழ்த்து விடப்பட்டது.

எமது நிலையை விளக்கி மக்கள் உரிமைக் கழகத் தின் சார்பில் நடக்கவிருந்த பத்திரிகையாளர் கூட் டத்தை தடைசெய்வதாக சட்டசபையில் முதலமைச் சர் அறிவித்ததைத்தொடர்ந்து மக்கள் உரிமைக் கழகத் தலைவர் பி.வி.பக்தவத்சலம் அவர்கள் கைது செய்யப்பட்டார். எமது கட்சிப்பிரசுரத்தையும் பத்திரிகைச் செய்தியையும் சுட்டிக்காட்டி தன்னை யும் வாழப்பாடி ராமமூர்த்தியையும் கொல்ல எமது அமைப்பு திட்டமிட்டிருப்பதாக சட்டசபையில் தமி ழக முதல்வர் அவதூறுப் பிரச்சாரத்தை நடத்தினார் ஜெயலலிதாவின் அறிவிப்புக்கு முன்பாகவே தமி ழக இளைஞர் பேரவை, தமிழக மாணவர் பேரவை அமைப்புக்கள் வேலூரில் நடத்தவிருந்த ஈழவிடுத லை அங்கீகரிப்பு மாநாடு தடை செய்யப்பட்டு எம து தோழர்கள் நால்வர் உட்பட 70க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்

ஜெயலலிதாவின் N S A அறிவிப்பைத் தொடர்ந்து எமது அமைப்பு மீது மட்டுமன்றி பிற புரட்சிகர, ஜனநாயக சக்திகள் மீதும் அடக்குமுறை விரிவு படுத்தப்பட்டது மக்கள் கலை இலக்கியக் கழகம், முற்போக்கு இளைஞர் அணி, மக்கள் ஜனநாயக இளைஞர் கழகம், தமிழக மாணவர் பேரவை, தமி ழக இளைஞர் பேரவை, உலகத் தமிழின முன்னேற் றக்கழகம், தமிழ் தேசப் பொதுவுடைமைக் கட்சி, இந்திய மக்கள் முன்னணி அமைப்புக்களைச் சார்ந்

www.tamilarangam.net

தவர்களும் மற்றும் மார்க்சியப் பெரியாரிய பொதுவு டமைக் கட்சி, திராவிடர் கழகம் ஆகியவற்றில் இலங்கைப் பிரச்சனைக்கு ஆதரவாக செயல்பட்ட ஒன்றிரண்டு பேரும் சில உள்ளூர் அமைப்புக்களைச் சார்ந்தவர்களுமாக ஏறத்தாழ 500க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர் ம.க.இ.க தோழர்கள் 4பேர் N.S.A யில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். மு.இ.அ யினர் நடத்தவிருந்த பல மாவட்ட மாநாடு களும் அரூரில் நடைபெற இருந்த மாநில மாநாடும் தடைசெய்யப்பட்டு பங்கேற்க வந்தவர்கள் கைதுசெய் யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர் அரூர் நிகழ் ச்சியையொட்டி மட்டும் 300பேர் கைது செய்யப்பட்ட னர் இந்நிகழ்ச்சியையொட்டி C.p.i (m-l) செங் கொடிஅமைப்பின் பொறுப்பாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

மக்கள் உரிமைக் கழகத் தலைவர் கைது செய்யப்ப ட்டதைக் கண்டித்து சென்னை உயர் நீதி மன்றம் கோவை, மதுரை, திருப்பத்தூர் வழக்கறிஞர் சங்க ங்கள் தீர்மானம் நிறைவேற்றின திருப்பூர் வழக்க றிஞர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணித்த னர்.

பத்திரிகையாளர் கூட்டம் தடை செய்யப்பட்டபின் தமிழில் ஒன்றும் ஆங்கிலத்தில் இரண்டுமாக மூன்று பத்திரிகைச் செய்திகள் வெளியிடப்பட்டன. அவை அனைத்தும் இந்திய அளவில் மனிதஉரிமை அமைப்புக்கள், சனநாயக சக்திகள், பத்திரிகைகளு க்கு அனுப்பப்பட்டன.தமிழகத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களிடம் இவ்வடக்குமுறை பற்றிய விபர ங்கள் எடுத்துச் சொல்லப்பட்டு சட்டமன்றத்தில் எழு ப்பக் கோரப்பட்டது. ஆனால் யாரும் ஜெயலலிதா அரசின் அடக்குமுறையை எதிர்க்கும் நிலையில் இல்லை. இது முதலாளிய அரசியல் கட்சிகளின் கையாலாகாத்தனத்தை மீண்டும் அம்பலப்படுத்தியுள் ளது.

டெல்லி மனித உரிமை அமைப்பின் சார்பில் கண் டன அறிக்கை வெளியிடப்பட்டு பல வடஇந்திய நாளிதழ்களில் பிரசுரமாகியது.பம்பாய்,டெல்லி,நாக் பூர் ஆகிய இடங்களில் உள்ள மனித உரிமை அமைப்புக்களும் பாண்டிச்சேரியில் உள்ள மனிதஉரி மை அமைப்பும் தமது கண்டனத்தை தெரிவித்துள்ள னர்.பல சனநாயக சக்திகளும் பல்வேறு வடிவங்களில் ஜெயலலிதா அரசுக்கு தமது கண்டனத்தை தெரிவி த்துள்ளனர்.

பாட்டாளி மக்கள் கட்சி, உலகத் தமிழின முன்னே ற்றக் கழகம்,அறிவியக்கப் பேரவை, மக்கள் கலை இலக்கியக்கழகம் ஆகிய அமைப்புகளும் இவ்வமைப் புகளின் பத்திரிகைகளும் எமது அமைப்பு மீதான அடக்குமுறையைக் கண்டித்துள்ளன.இத்தகைய கடும் எதிர்ப்புகளினால் அரசு தற்காலிகமாக தனது அடக் குமுறையைத் தளர்த்தியது.

எமது பிரச்சார இயக்கத்தைத் தொடர்ந்து ஈழ அகதிகளையும், போராளிகளையும் வேறுபடுத்தி அணுக வேண்டுமென சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் பேசியுள்ளார். ஈழ அகதிகளை அரசு வெளியேற்றாது என சட்டமன்றத்தில் நிதி அமைச்சர் அறிவித்தார். தமிழகம் வந்த இலங்கை அமைச்சர் ஒருவர் ஈழ அகதிகளை திருப்பி அனுப்பு வது மனிதாபிமானமற்ற செயல் என அறிக்கை வெ ளியிட்டார். இவையனைத்தும் ஈழத்தமிழ் மக்கள் மீதான கேள்வி கேட்பாரற்ற அடக்குமுறையை தமி ழக மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்ப தை ஆட்சியாளர்களுக்கு உணர்த்தியதன் வெளிப்பா டுகளேயாகும்.கடும் அடக்குமுறைச் சூழலிலும் தமிழ கம் முழுவதும் உள்ள பல்வேறு புரட்சிகர, சனநாயக சக்திகளையும் எமது அமைப்பு இம்முழக்கங்களுக்கா க ஒன்றிணைக்க முடிந்ததும், அதனைத் தொடர்ந்து ஜெயலலிதா அரசுக்கு எதிரான விமர்சனங்கள் தற் போது சர்வசாதாரணமாகியிருப்பதும் எமது அரசி யல் இயக்கத்துக்குக் கிடைத்த வெற்றிகளே.

அரசின் அடக்குமுறைகள் தற்காலிகமாகத் தளர்ந்த போதும் நவம்பர் மாதத்தில் மீண்டும் எமது அமைப் பைச் சேர்ந்த 100 க்கும் மேற்பட்ட தோழர்கள் தமி ழகம் முழுவதும் கைது செய்யப்பட்டு பொய்வழக்குக ளின் கீழ் சிறையில் பூட்டப்பட்டுள்ளனர். தற்போது ஜெயலலிதா தனது அரசியல் எதிரிகள் அனைவர் மீதும் கொடூரமான கறுப்புச் சட்டங்களை ஏவிவரு கிறார். NSA (தேசப் பாதுகாப்புச் சட்டம்), 124 A, TADA (பயங்கரவாதத் தடைச்சட்டம்), ராஜதுரோக தடுப்புச்சட்டம் போன்ற ஆள்தூக்கி கறுப்புச்சட்டங்க ளின் கீழ் ஏராளமானவர்கள் சிறையில் பூட்டப்பட்டு ள்ளனர். பஞ்சாப்,காசுமீர்,அசாம் மாநிலங்களின் வரி சையில் தமிழகமும் அரசு பயங்கரவாத ஆட்சியின் கீழ் தள்ளப்பட்டு வருகிறது.

ஆட்சியாளர்கள் ஏவும் அடக்குமுறைச் சாட்டைகள் ஒவ்வொன்றையும் புரட்சிகர இயக்கங்கள் தம்மை மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கும்,மக்கள் மத் தியில் மேலும் மேலும் ஆழமாக வேரூன்றிக் கொள் வதற்குமான வாய்ப்பாகவே பயன்படுத்திக் கொள்கி ன்றன. தமிழக மக்களும் ஒடுக்குமுறைக்குள்ளாகும் இயக்கங்களிடம் மேலதிக பரிவும் நம்பிக்கையும் வைத்து ஆதரவளித்து வருகின்றனர்.

இந்நிலைமைகள் தெளிவுடன் வலியுறுத்துவது ஒரே விசயத்தைத்தான். தவறான அரசியல் பாதையிலிரு ந்தும் அதன் தொடர்ச்சியான விளைவாகிய சனநாய க மறுப்புப் போக்குகளிலிருந்தும் ஈழத்தமிழர் போ ராட்டம் எவ்வளவு விரைவில் விடுபடுகிறதோ,அவ்வள வு விரைவில் தமிழகத்தில் அதற்கு மீண்டும் போரா தரவை உருவாக்கிட முடியும். இலங்கைத்தமிழரின் உரிமைப்போராட்டம் சொல்லொணா இடர்களைச் சந் தித்தபோதும்,புரட்சிகர அரசியல் பாதையைக்கண்டு தெளிந்து நண்பர்களையும் எதிரிகளையும் சரியாக

www.tamilarangam.net

இனம் கண்டு முன்னேறுவது ஒன்றே அதன் மீட்சிக்கு ஒரே வழி. ஈழப்போராட்டத்தின் தவறான அரசியல்,அணுகுமுறைகளின் விளைவாக இன்று உலகின் மூலைமுடுக்கெல்லாம் சிதறி எறியப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களில் புரட்சிகர,சனநாயக சிந்தனை போக்குள்ள சக்திகளிடமிருந்து இதற்கான முன்முயற்சிகள் தோன்றுமென்றே நம்புகின்றோம். தமிழகத்தைப் பொறுத்தவரை பிழைப்புவாத,சந்தர்ப்பவாத சக்திகளின் ஈழ ஆதரவு வேடங்கள் அம்பலமாகியுள்ள அதே வேளையில் இங்குள்ள புரட்சிகர,சனநாயக சக்திகளே இக்கட்டான சூழலிலும் இலங்கைத் தமிழரின் உரிமைப் போராட்டத்தை உயர்த்திப்பிடிப்பதிலும் உதவிகளை அளிப்பதிலும்,அகதிகள் வெளியேற்றத்தைத் தடுப்பதிலும் முன்கையெடுத்தும் மிக உறுதியாகவும் செயல்படுகின்றன என்ற உண்மையும் வெட்டவெளிச்சமாகியிருக்கிறது.

## சிரிப்பு !!

இந்தியாவிற்கு புதியதொரு சர்வதேச மன்னிப்புச்சபை தேவைப்படுகிறது. இதுவரை உலகம் முழுவதும் வியாபித்திருக்கும் சர்வதேசமன்னிப்புச்சபையானது ( A.I ), இந்திய அரசின் காசுமீர் பஞ்சாப் படுகொலைகளை புள்ளிவிபரங்களுடன் வெளியுலகிற்கு காட்டியதை இந்தியரசு விமர்சித்திருந்தது தெரிந்ததே.

## நினைவுகள்

அப்போதெல்லாம்
இரவு நிலவில்
இளஞ்சூட்டு மணலிலிருந்து
அம்மா பாயிழைப்பாள்
அந்த மணலில்
புரண்டெழுந்து
ஓடிவிளையாட
இனிமையாயிருக்கும்

பக்கத்து வீட்டில்
களவாய் மாங்காய் பறித்து
கல்லில் குத்தி
உப்போடு தின்றால் ......
நினைக்க
இப்போது கூட
வாயில் எச்சில் ஊறும்

விடிகாலை
புல்லின் நுனியில்
பனியில்
கால்கள் குளிர
பள்ளிக்கூடம் போக
ஆசையாயிருக்கும்

இப்போதெல்லாம்
இரவு நிலவு
குருதியில் முகம் புதைத்து
கொடூரமாய் தெரியும்

மரங்கள் அற்று
புட்கள் கருகி
சோகமாய் விரியும்
கிராமம்

எங்கும்
சுடலைக் குருவியின் ஆட்சி

நினைவுகள் மறந்து
உணர்வுகள் அற்று
வெறுமையாய்
சிதைக்கப்பட்ட எமது விழிகள்
பதுங்குகுழிகளைத் தேடும்

ஆனந்தி

www.tamilarangam.net

# எல்லைகள் தாண்டியும் தொல்லைகள் தீராதோ!


இலங்கையில் நிகழும் வன் முறைகளாலும் தொடர்ச்சியான யுத்த நிலைமைகளினாலும் மக்கள் தனித்தனியாகவும், குடும்பங்களாகவும் வெளியேறி வருகின்றமை குறிப்பிடத் தக்கது. பொதுவாக நாட்டில் எல்லாவிதமான ஜனநாயக உரிமையும் பறிக்கப்பட்ட நிலையிலேயே மக்களின் இடப் பெயர்வும் நாட்டை விட்டு வெளியேறும் அபாயகரமான நிலையும் தோன்றியுள்ளது. அகிம்சை, சமாதானம், வறுமை ஒழிப்பு, சம அந்தஸ்து, சம உரிமை என்று அரசாங்கத்தாலும் அதன் எடுபிடிகளாலும் பிரச்சாரம் மேற்கொள்ளும் நிலையிலும் வடக்கு, கிழக்கில் மொழிரீதியாகவும் இனரீதியாகவும் சகல விதத்திலும் தமிழ் மக்கள் நசுக்கப்படுகிறார்கள். மறுபுறம் இனத்துள் இனம் பழிவாங்கும் கொடுமைகளும் மிகப் பயங்கரமாகவே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

இன்று தமிழ் மக்கள் வெளியேற்றம் சர்வதேச அந்தஸ்திற்கு வந்துவிட்டது. சர்வதேச அகதிகள் அந்தஸ்தினைப் பெற்று ஐரோப்பிய நாடுகள் உட்பட உலகின் பல்வேறு நாடுகளிலும் குடியேறியுள்ளனர். சில நாடுகளில் நிரந்தர குடியுரிமையை (கனடா, பாரிஸ், லண்டன்) பெற்று வசதியான வாழ்க்கை வாழ்வதாகவும் தங்களுக்குள் எண்ணுகின்றனர். இந்நாடுகட்கு பெருமளவு மக்கள் அகதியாக செல்வதற்கு காரணம் நிரந்தர குடியிருப்பை தேடிக் கொள்ளும் நோக்கமாகும். யுத்த ஆரம்ப காலங்களில் அகதிகளாக வெளியேறுவோரின் அளவு மிகக் குறைவாகவே இருந்து வந்துள்ளது. நாட்டின் அரசியல் வறுமை காரணமாகவும், தொடர்ச்சியான ராணுவ- புலிகள் மோதலினாலும் நிர்க்கதியாகிவிட்ட மக்கள் இருப்பது உயிர் மட்டுமே என்று கருதி வேகமாக வெளியேறி வருகின்றனர். சகலவித ஜனநாயக உரிமைகளற்ற அநாதை மக்களாகி உயிருக்கே உத்தரவாதமற்ற நிலையில் கொஞ்சக் காலம் வெளிநாடுகளில் இருந்துவிட்டு பின்பு வருவோம் என்ற எண்ணப்பாட்டுடன் பெரும்பாலானோர் வெளியேறுகின்றனர். புத்திஜீவிகள் உட்பட பல்வேறு தரத்திலுள்ளோரும் சராசரி வெளியேறும் நிலை தொடர்கிறது. பரம்பரை பரம்பரையாகவே வீட்டைவிட்டு, கிராமத்தை விட்டு வெளியேறாதவர்கள் கூட எல்லாவற்றையும் உதறி எறிந்து விட்டு வரத் தயாராகி இருக்கிறார்கள். ஆரம்ப காலங்களில் இளைஞர்கட்கே பாதுகாப்பே இல்லாத நிலைமை இருந்தது. இக் கால கட்டத்தில் இளைஞர் கூட்டமே வெளியேறி உலக நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரி நின்றனர். தற்போது நாடு மொத்தத்தால் ஆயுத்தால் சூழப்பட்ட நிலையில் வயது வேறுபாடின்றி சகல தரப்பினரும் சொத்துக்களையும் குடும்ப இணைப்புக்களையும், சகோதர பிணைப்புக்களையும், சமூகக் கட்டமைப்பையும் உடைத்துக் கொண்டு வெளியேறும் துர்பாக்கிய நிலையில் நாடு மூழ்கியுள்ளது.

வடக்கிலிருந்து வெளியேறுவோர் கட்டாயமாக பணமாகவோ, நகையாகவோ புலிகளிடம் கொடுத்தால் தான் அவர்கள் வவுனியாவைத் தாண்ட முடியும். குடும்பமாக வெளியேறுவோர் சொந்த வீட்டை எழுதிக் கொடுத்துத்தான் வரவேண்டியுள்ளது. அவதியுறும் மக்கள் எதைக் குடுத்தாவது வெளியில் வந்துவிட

www.tamilarangam.net

வேண்டும் என்றே நினைக்கிறார்கள். எவ்வளவோ சிரமத்தின் மத்தியில் ஏஜென்சி மூலமாக இங்கு வர முயற்சிக்கிறார்கள். ஏஜென்சிக்காரன் கூட எவ்வளவோ பொய் திருட்டுத்தனங்கள் ஊடாக இங்கு அனுப்பி வைப்பதாக கூறி அண்டை நாடுகளிலும் ஆபிரிக்க நாடுகளிலும் இடைநடுவிலுமாக விட்டு விடுகிறார்கள். ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் இடைநடுவில் கைவிடப்பட்டு பல்வேறு இன்னல்களை எதிர் நோக்குகின்றனர். அண்மையில் இங்கு வர



இரவில் எரிக்கப்பட்ட அகதிகள் முகாம்

இருந்த ஒருவர் ஆபிரிக்க நாட்டில் நீண்ட காலம் காத்திருந்து காலநிலை ஒத்து வராத படியால் மரணத்தை தழுவிக் கொண்டார். அண்டை நாடுகளிலிருந்து இங்கு வரும் மட்டும் அவர்கள் அநுபவிக்கும் கஸ்டங்கள் நாட்டிலேயே இருந்திருக்கலாம் என்ற எண்ணத்தை தூண்டுகிறது. போதிய பணமோ, உதவிகளோ, மொழிகளோ தெரியாத நிலையில் வேறு நபர்களின் உதவியை நாடுகின்ற அவசியம் எழுகின்றது. அகதி அந்தஸ்து கோரும் எவரும் குறிப்பிட்ட நாட்டில் நேரடியாக போய் இறங்க முடியாது. எந்த ஒரு நாடும் அப்படி அகதிகளை ஏற்பதில்லை. எனவேதான் சட்டத்திற்கு புறம்பாக நாட்டு எல்லைகளை கடந்து வர வேண்டியுள்ளது. சட்டத்திற்கு புறம்பாக எல்லைகளைக் கடந்து வருவது பிழையாக இருந்தாலும் அகதி அந்தஸ்து கோரி வருவோரைப் பொறுத்த மட்டில் இதுவே சரியான மார்க்கமாகவும் உள்ளது. அகதிகளாகி ஐரோப்பிய நாடுகளுக்கு வருபவர்களுக்கு ஐரோப்பிய சூழல், காலநிலை மாற்றங்கள் தெரியாதுள்ளது. இங்கு வந்த பின்புதான் சூழலுக்கும் காலநிலை மாற்றங்களுக்கும் முகம் கொடுக்கிறார்கள். அகதிகளாக வருவோர் குளிர்காலநிலையை சமாளிக்க கூடிய உடுப்புக்களோ சப்பாத்துக்களோ இல்லாமல் சாதாரண உடுப்புகளுடனும்-சப்பாத்துகளுடனும் வருகின்றனர்.

கடந்த இரண்டு மாதத்திற்கு முன்பு யூகோஸ்சிலாவியாவிலிருந்து இத்தாலிக்கு அகதிகளாக வரும்போது 2 குழந்தைகள் உட்பட நான்கு தமிழ்மக்கள் குளிர் தாங்க முடியாமல் இறந்துள்ள சம்பவம் வேதனை தருகின்ற விடயமாகும். பொதுவாக இந்நாடுகள் பற்றி உலக அரங்கில் மிகையான கணிப்பு உள்ளது. சில தமிழ் பத்திரிகைகள் 'சொர்க்கபுரி சுவீட்சலாந்து' என்று கூட வர்ணிக்கின்றனர். அகதிகளாக இங்கு வந்தவர்களுக்கு இக்கருத்து ஏற்புடையதல்ல. உலகின் பலநாடுகளிலிருந்தும் பெருமளவு

www.tamilarangam.net

அகதிகள் இங்கு வந்து கொண்டிருக்கின்றனர். இங்கு வரும் அகதிகள் நன்கு பராமரிக்கப்படுகிறார்கள் என்று வெளிஉலகிற்கு காட்டிக் கொண்டாலும் பல குறைபாடுகளை அகதிகள் எதிர் நோக்குகின்றனர். சர்வதேச நடைமுறைக்கு இணங்க ஒரு அகதியொருவருக்கு வழங்கப்பட வேண்டிய உதவிகள், சலுகைகள் முழு அளவில் கிட்டுவதில்லை. வரும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரிப்புக்கேற்ப அவர்கள் தங்கி வாழ்வதற்கான இருப்பிட வசதிகள் கவனத்தில் எடுக்கப்படுவதில்லை. கடந்தகாலங்களில் அகதிகளாக வருவோர் எண்ணிக்கை குறைவால் போதிய இடவசதிகளை செய்து கொடுத்தனர். ஆனால் இன்று நிலைமை முற்றிலும் வேறுபட்டதாகவே உள்ளது. இங்குள்ள வாழ்நிலையுடன் ஒப்பிடும் போது ஒருவர் மட்டுமே தங்கக் கூடிய ஓர் அறையில் ஆறு பேர் தங்கி வாழ்கின்றனர். அடுத்து அகதிமுகாம்கள் அமைந்துள்ள பெரும்பாலான இடங்கள் சனநடமாட்டமற்ற குடிசனமற்ற மலைப்பிரதேசங்களாகவே தேர்ந்தெடுக்கப்படுகின்றன. யுத்த காலங்களில் பாதுகாப்புக்கு ஒளிந்து கொள்ளும் நிலவறைகள் கூட அகதிகளுக்கு கொடுக்கப்படுகின்றன. இந்நடவடிக்கைகளினால் அகதிகளுக்கும் இந்நாட்டு மக்களுக்கும் உள்ள இடைவெளி இன்னும் விரிவுபடுத்தப் படுவதுடன் தொடர்புகளும் அந்நியப்பட்டுப் போகின்றன. இந்நிலைமைகளால் இந்நாட்டு மக்கள் அகதிகள் சம்பந்தமான சரியான விபரம் தெரியாமல் பலரும் பலவிதமாக புரிந்து வைத்திருக்கிறார்கள். இங்குள்ள தொடர்பு சாதனங்கள்கூட இந்த விடயத்தில் மௌனம் சாதிக்கின்றன. இதனால் இந்நாட்டு மக்களுக்கும் அகதிகளாக வருவோருக்கும் இடையில் நல்லுறவு ஏற்பட தடையாக இருக்கிறது. குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய இந்நாட்டு மக்களும், சில அகதிகட்கான உதவிகளை மேற்கொள்ளும் நிறுவனங்களும்தான் எங்கள் நாட்டுப் பிரச்சனையை தெரிந்து வைத்திருக்கின்றன. Rotes Kreuz, Caritas போன்ற நிறுவனங்கள் குறிப்பிடத்தக்கது. சில அகதிகள் முகாம்கள் சுகாதாரத்திற்கு ஒவ்வாத இடங்களில் கூட அமைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக Luzern மாவட்டத்தில் குதிரைத்தொழுவத்திற்கு மேல் ஏறத்தாள நூற்றிநாற்பது அகதிகளைக் கொண்ட முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அடுத்து நாசிகளின் நேரடி மறைமுக தாக்குதல்களுக்கும் அகதிகள் உள்ளாகின்றனர். குறிப்பிட்ட சில காலத்திற்குள் பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. Zug மாவட்டத்தில் அகதியொருவர் தாக்கப்பட்டதும், Chur மாவட்டத்தில் வீடு ஒன்று தீவைத்துக் கொளுத்தியதில் 4பேர் இறந்த சம்பவமும், Zurch மாவட்டத்தில் அகதி ஒருவர் தாக்கப்பட்டு இறந்தமையும், Adorf என்னும் இடத்தில் அகதிமுகாம் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியமையும் குறிப்பிடத்தக்க சம்பவங்களாகும். இதுவரை 24 அகதிகள்முகாம்கள் நாசிகளால் எரிக்கப்பட்டுள்ளன. இத்தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் தப்பித்துக் கொள்ள அரசு இயந்திரங்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ நழுவல் காரணங்களை முன்வைத்து செல்கின்றன.

அடுத்து அகதிகள் மொழிப்பிரச்சனையை எதிர் நோக்குகின்றனர். அகதிகளுக்கான வகுப்புகள் (டொச்,பிரான்ஸ், இத்தாலி மொழிகளில்) Rsetaurant வேலை செய்வதற்கான ஆரம்ப கட்டப் படிப்பாகவே இருக்கின்றன. சில அகதிகள் முகாம்களில்

www.tamilarangam.net

இவ் வகுப்புகள்கூட நடப்பதே இல்லை. வேலை எடுக்க முடியாமல் இருப்பதற்கு மொழிப்பிரச்சனையும் ஒர் காரணமாகும். மொழிபெயர்ப்பாளர்களால் கூட அகதிகள் சில பிரச்சனைகளை எதிர் நோக்குகின்றனர். ஒவ்வொரு அகதிகளையும் தனிப்பட்ட முறையில்; அவர்கள் அரசியல் தஞ்சம் கோருவதற்கான காரணங்களை அறிவதற்காக இங்குள்ள வெளிநாட்டு பொலிஸ் அதிகாரிகள் ஊடாக விசாரணை நடத்துவது வழக்கம். எந்தவகையில் அகதி ஒருவர் பாதிக்கப்பட்டார் என்பதினை அறியும் நோக்கத்திற்காக மொழிபெயர்பாளர் ஊடாக விசாரணைகள் நடைபெறுகின்றன. விசாரணைகள் நடைபெறும் போது அதிகாரிகள் கேட்கும் கேள்விகளைவிட சில மொழிபெயர்பாளர்கள் கேள்விகளை மிகைப்படுத்தியும் ஆத்திர உணர்வோடும் கேள்விகளை கேட்கின்றனர். வேதனை என்னவென்றால் அகதிகளாக வந்து மொழிபெயர்பாளர்களாக மாறியிருப்போர் கூட இப்படி நடந்து கொள்வதுதான். இச் சந்தர்ப்பத்தில் சில மொழிபெயர்பாளர்கள் தன்னை ஓர் நேர்மையாளனாக விசாரணையாளர் முன் காட்டிக் கொள்வதோடு சில சலுகைகளையும் தனிப்பட்ட முறையில் எதிர்பார்த்து நிற்பதே இதற்கு காரணமாகும். பொதுவாக இன்றுவரும் அகதிகள் 3 மாதங்களுக்கு மட்டுமே முகாம்களில் வைத்துப் பராமரிக்கப்படுகிறார்கள். அதன்பின்பே வேலை செய்யும் அனுமதி கிடைக்கிறது. இன்று பெருமளவு அகதிகள் வந்து கொண்டிருப்பதால் வேலையில்லாப் பிரச்சனையும் தலை தூக்கியுள்ளது. பல அகதிகள் காலக்கெடு முடிந்ததும் வேலையில்லாமல் பலமாதங்கள் இருக்கிறார்கள். வேலைகள் கூட இந்நாட்டுக்காரன் எந்த வேலைகளை செய்யத் தயாராக இல்லையோ அப்படியான வேலைகளே அகதிகளுக்குக் காத்துக் கிடக்கின்றன. கிடைக்கும் வேலைகளில் சில இங்குள்ள வெளிநாட்டுத் தொழிலாளர்களை பாதிக்க கூடிய வேலைகளாகவும் உள்ளன. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் தூசுகள், துகள்கள், தீயவாயுக்கள் போன்றவற்றால் தாக்கப்படுகிறார்கள்.

பெரும்பாலானோர் அகதிகளாக உழைக்கத்தான் வந்தார்கள் என்ற கருத்து சில காலத்திற்கு முன்பு சரியானதுதான். ஆனால் தற்போதுள்ள சூழ்நிலையில் உழைக்கத்தான் வருகிறார்கள் என்று கூறிவிடமுடியாது. நாட்டின் தொடர்ச்சியான யுத்தங்களுக்கு முகம் கொடுக்க முடியாமல்தான் பெரும்பாலானோர் இங்கு வருகின்றார்கள். பணம் இல்லாத நிலையிலும் வீட்டையோ, காணியையோ அடமானமாகவோ அல்லது விற்பது மூலமாகவோதான் வெளிநா டு வரமுடிகிறது. வசதிகள் வாய்ப்புக்கள் இருந்தும் வாழமுடியாது என்று தீர்மானிக்கும் பிரிவினரும் வெளிநாட்டு வாழ்க்கையைப் பற்றி சிந்திக்கிறார்கள். நிலைமைகள் இப்படியிருக்க இந்நாட்டு அரசாங்கம் இவர்கள் வசதியான வாழ்க்கை வாழவும் உழைக்கவும் தான் வருகிறார்கள் என்று இப்பவும் கூறிவருகிறது. எங்கள் சமூகத்தில் குடும்பம் ஒருவரின் உழைப்பில் தங்கி வாழும் பண்புகள் தொடர்ந்தும் இருந்து வருகின்றன. எனவே குடும்பத்தில் ஒருவர் வெளிநாட்டில் என்றால் இயல்பாகவே குடும்பப் பொறுப்புகள், சுமைகள் அவர்மேல் சுமத்தப்படுகின்றது. எனவேதான் வெளிநாட்டிலுள்ள பெரும்பாலானோர் தங்களது உழைப்பின் பெரும்பகுதியை தங்கியிருப்போருக்கு அனுப்ப வேண்டியிருக்கிறது. இங்கு

www.tamilarangam.net

தனிமைப்பட்டு வாழ்வதாலும், இங்குள்ள சமூகத்துடன் பரஸ்பர உறவு அற்றநிலையில் ஒருவித விரக்திப் போக்கும் உளரீதியான பாதிப்புக்கும் உள்ளாகின்றனர். அண்மைக்காலங்களில் அகதிகளில் படையெடுப்பைக் கட்டுப்படுத்துவதற்காக அகதிகளுக்காக கையாளும் சட்டங்களை கடினமாக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மாநிலங்களுக்குரிய தனித்துவமான சில சட்டங்களை முடிவுக்கு கொண்டு வந்து அச் சட்டங்களை மத்திய நிர்வாகமே பொறுப்பேற்கவுள்ளது. சட்டங்களை மத்திய நிர்வாகங்கள் கையில் எடுப்பதன் மூலம் விசாரணைகளை துரிதப்படுத்தி குறுகிய காலப்பகுதிக்குள் (6மாதம்) அகதிகள் தஞ்சக் கோரிக்கை சம்பந்தமான இறுதி முடிவுக்கு வரவும் தீர்மானித்திருக்கின்றனர். எதிர்காலத்தில் இந்நாடுகள் பொருளாதார ஏற்றத் தாழ்வுகட்கு முகம் கொடுக்கும் சாத்தியங்களும் தென்படுகின்றன. இச் சந்தர்ப்பங்களில் அகதிகளை பராமரிக்க முடியாமல் திருப்பி அனுப்புவதற்கான மிக உயர்த்தப்பட்ட திருத்தங்கள் கொண்டு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. பல ஐரோப்பிய நாடுகள் இணைந்து பெருகிவரும் அகதிகளைக் கட்டுப்படுத்தவும் ஏற்கனவே புகலிடம் கோரியோரை அப்புறப்படுத்துவது சம்பந்தமாகவும் ஆராய்ந்து வருகின்றனர். ஜேர்மனி, சுவீஸ், இங்கிவாந்து போன்ற நாடுகள் அடிக்கடி அகதிகளை திருப்பி அனுப்பப் போவதாக அறிவிக்கின்றனர். இத்தகைய அறிவிப்புகள் சொந்த நாட்டுப் பிரச்சனைகளிலிருந்து தப்பிவிட்டோம் இனி என்ன என்று தற்காலிக நிம்மதியடையும் மக்களுக்கு ஏமாற்றத்தையே தருகின்றது. தற்காலிக புகலிடம் மீதும் அடி விழுந்தவுடன் தான் மக்கள் கூறுகின்றனர் " என்ன இருந்தாலும் எங்கட நாடு நாடுதான்" என்று

**• நந்தகுமார்**

## சாதனை

சேர்மனியில் அகதிகள், வெளிநாட்டவர் மீது 91 இல் மட்டும் 2368 தாக்குதல் சம்பவங்கள் புதிய நாஜிகளால் நடத்தப்பட்டுள்ளது. அதேவேளை 90 உடன் ஒப்பிடும் போது 91 ஆம் ஆண்டில் அகதிகளின் வருகை 10 மடங்கிற்கு மேல் அதிகரித்துள்ளதாக தகவல்கள் அறிவிக்கின்றன. சுவீசிலும் சென்ற வருடம அரசியல் தஞ்சம் கோரியவர்களின் எண்ணிக்கை 41629 என்று செய்திகள் கூறுகின்றன.

பேர்னிலுள்ள அகதிமுகாம் ஒன்றின் மீது கடந்த நத்தார் இரவு நடந்த தாக்குதலுடன் சுவிசில் 91ல் 70க்கும் மேலான அகதி முகாம்கள் பெற்றோல் குண்டு வீச்சுக்களுக்கும் , துப்பாக்கிச்சூடுகளுக்கும் இலக்காகியுள்ளன தொடரும் இந்த தாக்குதல்கள் பற்றி சரியான காரணத்தை பொலிசார் இன்னும் அறிவிக்கவில்லை.

தாக்குதல்களை கண்டித்தும் இனவாதத்திற்கெதிராகவும் 200க்கும் அதிகமானோர் கலந்து கொண்ட ஊர்வலமொன்று டிசம்பர் 27ம்திகதி பேர்னில் நடந்தது ஊர்வலமானது நகரத்திற்கூடாக சென்று தாக்குதல் நடந்த முகாமுடன் முற்றுப்பெற்றது.

அதே போன்று மேற்கு சுவிசில் ( பிரான்சு மொழி பேசும் பகுதியில்) Mont Slesson என்னும் இடத்திலுள்ள அகதிமுகாமிலும் தை. 24,25 ஆகிய இரு தினங்களிலும் 14 துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

மேற்படி தாக்குதல்களை கண்டித்தும் 1000 - 1500 பேர் கலந்து கொண்ட ஊர்வலம் நடந்தது.

இந்த இனவாதத்திற்கெதிரான நடவடிக்கைகளானது எங்கு ஓர் இனவாத சம்பவம் நடக்கிறதோ அந்த இடத்தில் குறிப்பிட்ட நாட்களுக்குள் ஊர்வலம் நடத்தப்பட வேண்டும். என்ற இனவாதத்திற்கெதிரான அமைப்புகளின் தீர்மானத்தின்படி நடந்தேறின.

புதிய நாஜிகளால் நிகழ்த்தப்படும் இந்த தாக்குதல்களுக்கு, தமது நாட்டு பொருளாதார நலிவடைவுக்கும், சமூக கலாச்சார சீரழிவுக்கும் அகதிகளும் வெளிநாட்டவருமே காரணமாம் என்பது புதிய நாஜிகளின் கருத்து. ஆயினும், இனவாதத்திற்கெதிரான அமைப்புகளும், மதநிறுவனங்களும் சுவீசு முழுவதும் இந்த இனவாதத்திற்கெதிரான செயற்பாடுகளை வேண்டி நிற்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை:

# ஜீவனம்

கிழக்கிலிருந்து சூரியனின் செங்கதிர்கள் மெல்ல மெல்ல பூமியை ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டன. பறவைகளும் கூண்டை விட்டு வெளியில் வந்து அமைதியைக் குலைக்கத் தொடங்கிவிட்டன.

<<"ஓ........ விடிஞ்சிட்டுது ; எழும்பு தம்பி நாதன் ; வெளியிலை ஒருக்கால் போய்ப்பார்">>எனக் கூறிய படி யோகம் சுறுசுறுப்பானாள். எல்லோரும் விழித் துக் கொண்டனர். பாம்பு புற்றிலிருந்து வெளியே தலையை நீட்டிப் பார்ப்பது போல் நாதனும் பங்கரு க்கு வெளியே மெல்ல தன்பார்வையை சுழலவிட்டான்

<<"ஒண்டையும் காணயில்லை, சத்தமும் கேட்கயில் லை">>என்றபடி நாதன் அவதானமாக வெளியே வந் தான். மற்றவர்களும் அவனைப் பின்தொடர்ந்து வெளியே வந்தனர்.

<<"என்ன தம்பி, இண்டைக்கு வகுப்பொண்டும் இல்லையோ?">>

<<"இல்லை அம்மா....... நான் முகம் கழுவியிட்டு வாறன்.">>

இன்றைய பொழுதை எப்படி கழிக்கப்போகிறோம் என்ற யோசனையோடு யோகம் குசினிக்குள்ளிருந் து கத்தினாள்.

<<"எல்லாரும் ஒரேவாக வாங்க. தனித்தனிய தேத் தண்ணி போட சீனியும் இல்லை, தேயிலையும் இல்லை.">>

<<"அப்பா! தேத்தண்ணி குடிக்க வரட்டாம்">>

<<"மாலினி,எல்லோரையும் கூட்டிக்கொண்டு வா">> கத்தினான் நாதன்.

<<"ஏன் இப்பிடிக் கத்துறாய்">> ஏசியபடி வந்தார் கந்தசாமி.

<<"இந்தா சுசி, உனக்கு சீனி போட்ட தேத்தண் ணி">> யோகம் டம்ளரை நீட்டினாள். மற்றவர்கள் உள்ளங்கையில் சிறிது சீனியை எடுத்துக் கொண் டனர்.

<<"நான் உந்தச் சந்தி வரைக்கும் போட்டு வாறன். ராத்திரி என்ன நடந்துதோ தெரியாது; விசாரிச்சுப் பார்ப்பம். அப்பிடியே இண்டைய சாப்பாட்டுக்கும் ஏதாவது வழிபண்ணிக் கொண்டு வாறன்.">>

துவாயை உதறியபடி கந்தசாமி நடந்தார்.

யோகம் சட்டி பானைகளுடன் கிணற்றடிக்கு சென்ற வள், ஏதோ சோர்வாக...."சித்திரா இங்கை வா பிள் ளை; எனக்கு தலையைச் சுத்திற மாதிரி இருக்கு. நீ இதுகளைக் கழுவிக் கொண்டு வா. நான் கொஞ் சநேரம் படுத்திருக்கிறன்.">> என்றவாறு திரும்பி வந்தாள்.

<<"பித்தம் தலைக்கேறி தலையைச் சுத்துமாப் போலை...">> என்று முனகியபடி திண்ணையில் சாய்ந்து கொண்டாள்.

யோகத்துக்குத் தெரியும் பித்தத்தால் தலை சுற்றவில்லை என்பது ! பிரச்சினை தொடங்கிய நாளிலிருந்து ஒழுங்காக சாப்பாடு இல்லை. நேற்றும் சாப்பிடவில்லை. அதுதான் தலையை சுற்றுகிறது. அவள் தனக்குள் சொல்லிக் கொண்டாள்.அவள் சற்று ஓய்வாக திண்ணையில் 'சரிந்து' சற்று நேரம் கூட ஆகவில்லை. 'கேற்' அருகில் யாரோ கூப்பிடும் சத் தம் கேட்டு விழித்தாள்.

<<"கந்தசாமி நிற்கிறாரோ?">>

உரத்தகுரல் கேட்டு ஒடிந்து போனாள். நல்லையாவும், 'பெடியள்' சிலரும் யோகத்திடம் வந்தனர்.

<<"அவர் வெளியிலை போயிட்டார்.">>

<<"நாங்கள் 2 பவுண் அல்லது காசு தரச்சொல்லி கேட்டனாங்கள்; கனநாளாச்சு தாற யோசினை இல் லையோ.">> குரல் கம்பீரமாக பேசியது.

<<"தம்பி, உந்தச் சண்டை தொடங்கினதுக்குப் பிறகு சாப்பாட்டுக்கே கஷ்டப்படுறம் எங்களிட்டை எங்கை தம்பி பவுண் இருக்கு">>

அவளின் விம்மல் எதையும் சாதிக்க முடியாமல் கண்ணீராய் வழிந்தது.

<<"உந்தக் கதை எல்லாம் எங்களுக்குத் தேவையி ல்லை. இண்டைக்குப் பின்னேரம் 3 மணிக்கு பள்ளி க்கூடத்தடியிலை வந்து கந்தசாமியரை சந்திக்கச் சொல்லுங்க. அங்கை அவரோடை கதைக்கிறம்">> அவர்கள் போய்விட்டார்கள்.

<<"கடவுளே! நீயும் இல்லைப்போலை. நாங்கள் ஒரு வேளை சாப்பாட்டுக்கே கஷ்டப்படுறம்.இவங்கள் வந்து பவுண் தா, பவுண் தா எண்டால் நாங்கள் எங்கை போறது. கடவுளே! கண்திறக்க மாட்டியோ.........">>

மீண்டும் 'கேற்' அருகில் கூப்பிடும் சத்தம் கேட்கி றது. "திரும்பவும் பெடியள்தானோ?" என்ற ஏக்கத்து டன் நிமிர்ந்த அவளுக்கு,இல்லை அது தபால்காரன் என்றதும் சற்று அமைதி அடைந்தாள். இந்த சலன ங்களை எல்லாம் மீறி அந்த "எயார் மெயில்" கடித த்தின் செய்தியை அறியும் ஆவல் அவளை உசாரா க்கியது.

<<"அண்ணைக்கு இன்னும் வேலை கிடைக்கவில் லையாம்">> என்ற முக்கிய செய்தியை வாசு கூறவும்,கந்தசாமி அங்கு வரவும் சரியாக இருந்தது.

<<"எங்களுக்கு கடவுள் கண்திறக்கமாட்டார் போல கிடக்கு. அவன் அங்கை என்ன கஷ்டப்படுகிறானோ தெரியாது">> ஒரு ஏக்கப்பெருமூச்சுடன் யோகம் கந்தசாமியின் பக்கம் திரும்பி சாப்பாட்டுக்கு என் ன கொண்டு வந்திருப்பார் என்று பார்வையை சுழல விட்டாள்.

<<"இந்தா இதிலை கொஞ்சம் அரிசி கிடக்கு கஞ்சியைக் காச்சு ராத்திரியும் சாப்பிடவில்லை. மத்தியானமாவது கஞ்சியைக் குடிப்பம்">>என்று சொல்லிக் கொண்டு சாக்குக் கட்டிலில் சாய்ந்தார் கந்தசாமி. பொழுது ஏறவும் மனதின் சலனங்கள் ஓய்ந்தபாடில்லை.

<<"இந்தாங்கோ,நேரம் போச்சு எழும்பி முகத்தை கழுவிப்போட்டு வந்து சாப்பிடுங்கோ">> என்று கந்தசாமியை உசுப்பி விட்டாள் யோகம்.

முகம் கழுவ கிணற்றடிக்கு சென்ற கந்தசாமிக்கு சித்திராவின் செய்கை கவனத்தை ஈர்த்தது.

வேடிக்கை போல் பார்த்துக் கொண்டு நின்றார் கந்தசாமியார்.

<<"சித்திரா இப்ப பனங்களியால் தோய்க்கிறியள் பனங்காய்க் காலம் முடிஞ்சுதென்டால் என்னத்தால

www.tamilarangam.net

தோய்ப்பியள்">> என்று பதிலில்லாத கேள்வியாக நினைத்தபடி கேட்டார்.
<<"சாம்பலாலை தோய்ப்பம்.">> என்று விடுக்கென பதிலளித்தாள் சித்திரா.
<<"என்ன விடுப்பு பார்த்துக் கொண்டு நிக்கிறியள் பள்ளிக்கூடத்துக்கெல்லே போகவேணும். வாங்கோ. வந்து சாப்பிடுங்கோ.">> யோகத்தின் குரல் கந்த சாமியை குசினிக்கு அழைத்தது.
<<"இந்தச் சண்டை தொடங்கினதுக்குப் பிறகு நாங்கள் கொஞ்சம் முன்னேறியிருக்கிறம் போல">> கந்தசாமி கொடுப்புக்குள் சிரித்தபடி சொல்லிக் கொண்டு போனார்.
<<"சித்திரா, உதுகளை பிறகு தோய்க்கலாம். மற்றுக்களையும் கூட்டிக்கொண்டு வா. நேரத்தோடை சாப்பிடட்டும்.">> தாயின் அழைப்பை விட பசி அவர்களை குசினிக்குள் ஓட வைத்தது. தூக்கம் கலைந்து சோம்பலுடன் வந்த சுசி கஞ்சியைக் கண்டதும் <<"என்னம்மா.... இண்டைக்கும் கஞ்சிதானே, ஒவ்வொரு நாளும் கஞ்சி.... அல்லது கூழ்" என சிணுங்கினான். அந்தப் பிஞ்சு முகத்தைப் பார்த்து தாயுள்ளம் வெதும்பியது. சுசியை மடியில் இருத்திக்கொண்டாள்.
<<"நீதானேடா.. என்ரை பிள்ளை.நீ அழாதையப்பன். நாளைக்கு உனக்கு சோறும்கறியும் சமைச்சுத்தாறன் இண்டைக்கு மட்டும் இதைக் குடி ராசா">>
<<"ஓ... ஒவ்வொரு நாளும் இதைத்தானே சொல்லிறுய்.... இண்டைக்கு மட்டும்தான் கஞ்சி குடிப்பன்.... ஓ.....">> சொல்லிக் கொண்டே கஞ்சியை குடிக்க தொடங்கினான்.
ஒரு மாதிரி எல்லோரும் சாப்பிட்டு முடித்துவிட்டார்கள்.மீதியாகக் கிடந்த கஞ்சியை குடிக்கும் போதே யோகத்திற்கு யோசனையும் எழுந்து விட்டது. இனி அடுத்த நேரப் 'போராட்டத்திற்கு'( சாப்பாட்டிற்கு ) தயாராக வேண்டும். இப்பொழுதுதான் ஒரு 'போராட்டம்' முடிந்தது. அடுத்த 'போராட்டத்தை' நினைக்கவே யோகத்திற்கு உள்ளம் நடுங்கியது.
<<"ஏன் தான் இந்தக் கடவுள் ஒரு சாண் வயிற்றை படைத்தானோ. ஒவ்வொரு நாளும் இந்த வயிற்றுக் காண்டி என்ன பாடுபட வேண்டி இருக்கு. நாங்களாவது பசியைத் தாங்கினாலும்..... இந்தப் பிள்ளையள் என்னபாவம் செய்ததுகள்.இந்த வயதிலை இப்பிடி"> கந்தசாமியின் குரல் அவளின் நினைவுகளை குலைத்தது.
<<"நான் பள்ளிக்கூடத்தடிக்கு போட்டு வாறன் என்ன நாசமறுப்போ...... என்னவோ!" வார்த்தைகள் முணுமுணுப்போடு அடங்கின.கந்தசாமியின் இதயம் அடித்துக் கொள்ள தொடங்கியது.
<<"ஓமோம்... வரயிக்கை இரவுக்கு ஏதாவது வாங்கிக்கொண்டு வாங்கோ.">>
<<"என்னட்டை ஒரு சதம் காசும் இல்லை. கடன்காரன் கழுத்தைநெரிக்கிறுன்.நீ என்னடா எண்டால்">
<<"அப்ப இரவைக்கு என்ன செய்யிறது..... ஏதாவது பார்த்து வாங்கிக் கொண்டு வாங்கோ. ">>
<<"சரி. சரி. பார்ப்பம்.ஏதாவது வழி பண்ணுவம்">>

கந்தசாமியின் மனம் ஒரு நிலையில் இன்றி அலைக்கழிந்தது.கால்கள் நடக்கத் தொடங்கின.
<<"யோகம்!கந்தசாமி எங்கை போட்டான்?">>என்று கேட்டபடி கந்தையர் உள்ளே வந்தார்.
<<"அவரை பள்ளிக்கூடத்தடிக்கு ' பெடியள் ' வரச் சொல்லி.... இப்பதான் கொஞ்சம் முதல் வெளிக்கிட்டவர்.">>
<<"அது சரி, உங்களுக்கு.... வாங்கின காசு தாற யோசினை இல்லையோ. வட்டியே நாற்பதுக்கு மேலை வந்திட்டுது. நீங்கள் வட்டியைத் தராட்டி, முதலையாவது தரலாம் தானே.">>
<<"அண்ணை... எப்பிடியும் மூண்டு மாசத்துக்கை தந்திடுறம். அதுமட்டும் கொஞ்சம் அவகாசம் தாங்கோ.">>
<<"காசு வாங்கயிக்கை என்ன சொல்லி வாங்கினியள். வாசு சுவிசுக்கு போய் இரண்டு மூண்டு மாசத்துக்கை அனுப்பியிடுவான் எண்டியள். அவன் போய் இவ்வளவு நாளும் என்ன செய்யிறான். இந்த.. சண்முகத்தின்ரை பெடி யேர்மனிக்குப் போய் ஆறுமாதம் ஆகயில்லை...... உங்களிட்ட தந்திட்டு நான் படுற பாடு போதும் எண்டு போய்ச்சு. எனக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும்......">> மூச்சு விடாமல் பொரிந்து தள்ளினார் கந்தையர்.
<<"அண்ணை வாசுவின்ரை கடிதம் இண்டைக்குத் தான் வந்தது. அவனுக்கு அங்கை இன்னமும் வேலை கிடைக்க இல்லையாம். அவனிருக்கிற 'காம்பிலை' ஒரு வருசம் ஒண்டரை வருசமாய் வேலையில்லாமல் கனபெடியள் இருந்து கசுரப்படுகுதுகளாம். இவனும் யாரோ சினேகிதப்பெடியளிட்டையும் சொல்லி வைச்சிருக்கானாம். இன்னும் 2 , 3 மாதத்துக்குள்ளை வேலை எடுத்துடுவானாம் எண்டு எழுதியிருக்கிறுன். எப்பிடியெண்டாலும் நாங்கள் உங்கடை காசை ஒரு நாலுமாதத்துக்குள்ளை திருப்பி தந்திடுவம்.">>
நிச்சயமற்றபதிலும் அவளின் இயலாமையும் அவளை துவண்டு போகச்செய்தது.கண்ணீர் விட்டு அழுதாள்.
<<"இதை உன்னோடை கதைச்சு பிரயோசனமில்லை கந்தசாமியோடைதான் கதைக்கோணும். எதுக்கும் வாறகிழமை நான் வாறன். காசு தாறியளோ... அல்லது இந்தக் காணித்துண்டை என்ரை பெயருக்கு எழுதி வைக்கிறியளோ..... எண்டு யோசியுங்கோ" கந்தையர் ஏதோ உணர்ச்சிவசப்பட்டவர்போல் விறுக்கென புறப்பட்டார்.

அழுது தீர்ப்பதற்கு குறிப்பான ஒரு பிரச்சனை மட்டும் யோகத்துக்கு இருக்கவில்லை. அவளது மெலிந்து போன உடலும், எதையோ பறிகொடுத்து விட்டது போன்று இறுகிப்போன முகமும் சித்திராவை கவலை கொள்ள வைத்தது. யுத்தகால நிலைமைக்கு பிச்சையாக வீசப்பட்ட தங்களது வாழ்வும், யுத்தநிலைமையில் உயிர்பெற்று வாழும் பல நிகழ்வுகளும் மனதை புகைமூட்டியது.சீரணிக்கமுடியாமல் இருந்தது. யார் முன்னிலையிலாவது கொட்டித்தீர்க்க வேண்டும் போல் இருந்தது.

www.tamilarangam.net

அன்பின் அண்ணாவிற்கு........

இங்கு நிலைமைகள் மோசமாக உள்ளது. இந்த நிலைமைக்கேற்ற மாதிரியே நாங்கள் வாழப்பழகி விட்டோம். நாங்கள் இரண்டு நேரம் தான் சாப்பிடு வோம். அதுவும் நிச்சயமற்றது. எங்களால் இவற்றை சமாளிக்க முடிகிறது. ஆனால் தம்பி சுசி எந்நேரமு ம் பசி.. பசி.. என்று அழுவான். அவனைச் சமாளிப் பதே பெரும்பாடாகிவிடும்.இங்கு எந்நேரமும் பொம் பர் அடித்தவண்ணம் இருக்கும். இன்று சிறிது ஓய் வாக உள்ளது.(யுத்த நிறுத்தமோ என எண்ணத் தோன்றுகிறது.)அநேகமாக 2 / 3 பங்கு பொழுது பங்கருள் கழிந்துவிடும்.

இங்கு பொருட்களின் விலை அதிகம்.ஆனால் மனிதர்களின் விலை மிக மலிவு.இங்கு முன்பு போ ல் தெருவில் திரிய முடியாது. தெருவில் அல்லது சந்திகளில் நின்று கதைத்தால்.... அதை 'ஈழ இரா ணுவம்' அல்லது சிற்றூரவை தலைவர் (நல்லையா) கண்டால் போதும். அவர்கள் 'கைதுசெய்யப்பட்டு' வேலை (பங்கர் வெட்டுதல் போன்ற) செய்விக்கப்படு வார்கள். இதில் ஆண்,பெண் என்ற வேறுபாடில்லை. அதுமட்டுமில்லை. இவர்களால் 'தடை செய்யப்பட்ட' இயக்க ஆதரவாளர்கள், இயக்கத்தை விட்டு வெளி யேறியவர்கள் ஆயிரக்கணக்கானோர் கைதுசெய்யப் பட்டார்கள்.அவர்களைப் பற்றிய தகவல் எதுவும் சன த்துக்கு தெரியவருவதில்லை. சிற்றூரவை தலைவர் கள் இந்தக் கைதுகளுக்கான விபரங்களை, தகவல்க ளை சேகரித்து இயக்கத்திடம் கொடுப்பதில் முன் நிற்பவர்கள்.

இவர்களுடன் அல்லது சிற்றூரவை உறுப்பின ர்களுடன் யாராவது எதிர்த்துக் கதைத்தால் அல்லது அவதூறாக கதைத்தால்..... அதைப்பற்றி அவர்கள் கேள்விப்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் கைதுசெய்யப்ப ட்டு பல நாட்கள் வேலை வாங்கப்பட்டபின்பு எச்சரி க்கை செய்யப்பட்டு விடப்படுவர். சிலர் விடப்படுவ தில்லை. அவர்களுக்கு என்ன நடந்திருக்கும் என அனுமானித்துக் கொள்ளவும். இங்கு இதை விட எழுதமுடியாத பல விடயங்கள் உள்ளன.........

<<'கேற்' திறந்து சத்தம் கேட்குது.அது யாரெண்டு பார் நாதன்.>>

<<"அப்பா தான் வாறார்.">>

சித்திரா எழுதியதை நிறுத்திவிட்டு அப்பாவிடம் ஓடி வருகிறாள்.

<<"இந்தா யோகம், இதிலை கொஞ்சக் கிழங்கு இருக்கு. அவி!இதுதான் இண்டைக்கு இரவுச்சாப் பாடு">>என சொல்லிக்கொண்டு வந்தார் கந்தசாமி.

<<"அது இருக்கட்டும்! 'பெடியள்' என்னவாம்">>

<<"இரண்டு பவுண் தரட்டாம்....அல்லது பிள்ளையளி லை ஒண்டை தங்களோடை விடட்டாம். என்னையும் வந்து வேலை செய்யட்டாம்.">>

<<"ஓ...நல்லையா மூண்டு பெடியளையும் கனடாவுக்கு அனுப்பிப்போட்டு.....தானும் மனிசியும் போறதுக்கு இப்ப ஆயுத்தப்படுத்துகினம். அவையளும் அவையளி ன்ரை குடும்பமும் நல்லாயிருக்கோணும்;மற்றவையள் கசுரப்பட வேணுமோ. நல்லையா தன்ரை பிள்ளையி லை ஒண்டை கூப்பிட்டு விடட்டும் பார்ப்பம்.">> தன்னை மறந்து கத்தினாள் யோகம்.

<<"இங்கை இதுகளை கத்திக் கதையாதை">>

<<"கந்தையா அண்ணையும் வந்திட்டுப்போறார்.காசு தாறியளோ அல்லது காணியை எழுதித்தாறியளோ எண்டு கேட்டிட்டுப் போறார்.">>

<<"சரிசரி உதுகளைப் பிறகு பார்ப்பம்.இப்ப போய் கிழங்கை அவி.அவங்கள் எந்த நேரம் வந்து குண்டு போடுவாங்களோ தெரியாது.">>

<<"கந்தையா அண்ணை வாறகிழமை வாறாராம்.நீங் கள்தான் கதையுங்கோ.">>யோகம் கிழங்குடன் குசி னிக்குள் நுழைந்தாள்.

<<"அம்மா! என்ன சாப்பாடு">> என்று கேட்டுக்கொ ண்டு மாலினி வந்தாள்.

<<"கிழங்கு அவிக்கிறன்.அதுசரி நீ எங்கை இவ்வ ளவு நேரமும் போனனி?">>

<<"நான் பக்கத்துவீட்டு ஆனந்தி அக்காட்டை கேட் டுப் படிச்சுக்கொண்டிருந்தனான்.">>

<<"நீங்கள் இனி எங்கை படிக்கப் போறியள். ஒரு வருசத்துக்கு மேலை பள்ளிக்கூடமும் பூட்டிக்கிடக்கு இனி நீங்கள் சமைச்சுப் பழகுங்கோ..... அதுதான் நல்லது.">>

<<"எதையம்மா சமைச்சுப் பழகிறது? கூழையும் கஞ் சியையுமோ?">>சொல்லிச் சிரித்தாள் மாலினி.

<<"சரிசரி..... உந்தச் சிரிப்பை விட்டிட்டு.... சுசி பசிக்குதெண்டவன்..எல்லாரையும் கூப்பிடு.இண்டைக் கு நிலவும் இல்லை.இருளமுன்னம் சாப்பிடட்டும்">>

<<"அப்பா! சாப்பிடயில்லையோ">>

<<"வந்திட்டன். என்ரை பிள்ளையோடை இருந்து சாப்பிடுவம் ">>. சுசி ஓடிக் கொண்டான்.

<<"நாதன்! இந்தா.....">> யோகம் எல்லோருக்கும் பரிமாறிக்கொண்டிருந்தாள்.

<<"இவளவும் போதும், அம்மா">>

திடீரென சித்திரா கத்தினாள்.

<<"நாதன்! ஏதோ சத்தம் கேக்குது; என்னெண்டு பார்.">>

<<"ஒண்டுமில்லை அக்கா. உனக்கு பிரமைதான்">>

<<"இல்லை நாதன், ஏதோ சத்தம் கேக்குதுதான்">> என்றாள் யோகம்.எல்லோரினது வாய்களும் சாப்பிடு வதை நிறுத்தின. காதைக் கூர்மைப்படுத்தியபடி..... விழிகள் இமைவெட்ட மறுத்தபடி........ திடீரென குண்டு வெடிப்புச் சத்தமும் பொம்பரின் உறுமலும் பயங்கரமாய்க் கேட்டது. சாப்பாடு கோப்பைகளில் அநாதரவாக...... எல்லோரும் விழுந்தடித்து பங்கருக் குள் ஓடுகிறார்கள் .உடல் பலவீனமும் மனப்பயமும் யோகத்தை இடறி விழுத்தின. நாரி அடிபட விழுந்து.......எழுந்து கைகளை ஊன்றி தவழ்ந்து...... ஒருவாறு பங்கருக்குள் வந்துசேர்ந் தாள்.

<<"இந்தக் கோதாரி விழுவாங்கள்.........">>

● கண்ணதாசன்

www.tamilarangam.net

# "மரண வீடு" இரு விளக்கங்கள்

அது ஒரு மரண வீடு மரண வீட்டின் அடையாளங்கள் இன்னும் மாறவில்லை. சவம் எடுத்து ஏழாம் நாள் அங்கு ஒரு சடங்கு நடைபெறுகிறது.

சடங்கில் - அதாவது கிருத்தியங்களில் இறந்தவர் விரும்பி உண்ணும் உணவுப் பொருட்கள், குடிக்கும் பானங்கள் அனைத்தும் வைக்கப்படுகின்றன. இரவு நேரம் - உணவுப் பொருட்கள் அனைத்தையும் இறந்தவர் பாவித்த அறைக்குள் வைத்து கதவை மூடிவிட்டு வெளியே வந்து உற்றார், உறவினர், நண்பர்கள் எதையோ எதிர்பார்த்தபடி இருக்கின்றனர். பூரண நிசப்தம். சூழல் அமைதியில் மூழ்கி இருக்கிறது. தூரத்தில் ஒருவர் இன்னொருவரிடம் மெதுவாகச் சொல்வது கேட்கிறது.

"கணபதிப்பிள்ளையின் (இறந்தவர்) ஆத்துமா இப்ப வந்து சாப்பிடும்"

பல்லி சப்தமிடுவது கேட்கிறது. ஒருவர் கூறுகிறார் "ஆ" ஆத்மா சாப்பிட்டுவிட்டுச் சென்று விட்டது" வெளியில் இருந்தவர்கள் நிசப்தத்தைக் குலைக்கிறார்கள். கசமுசவென்று கதைகள் சிறிது நேரத்தில் சாப்பாட்டுக்கு படையலில் வைத்த பொருட்களும், வேறு உணவு வகைகளும் வந்திருந்தோருக்கு பரிமாறப்படுகிறது.

"ஏன் இப்படிப் படைகிறார்கள்": அங்கு நின்று காரிய மாற்றிய ஒரு படித்த முதியவரைக் கேட்டேன். அவர் பின்வருமாறு விளக்கமளித்தார்.

"மனிதன் இறந்து சில நாட்களுக்கு அவனுடைய ஆத்மா சாந்தி பெறாமல் ஆசை காரணமாக வீட்டைச் சுற்றி அலையும். சாப்பாட்டு ஆசை பெரும் ஆசை. எனவே இறந்தவர் சாப்பிட்ட, சாப்பிட விரும்பிய பொருட்களை எல்லாம் அறைக்குள் படைத்தால் அது சாப்பிட்டு ஆசை தீர்ந்து பின் நிம்மதியுடன் சென்று விடும். அப்படி வைக்கா விட்டால் செல்லும் இடத்திற்குச் செல்லாமல் சுற்றிச் சுற்றி அலையும், இக்கிரியைகள் - சடங்குகள் அன்றி விருந்து இன்று வரை மரபு மரபாகச் செய்யப்படுகின்றன. இது தான் எங்கள் கலாசாரத் தனித்துவம்" அவர் கூற்றிலிருந்து மூன்று விடயங்கள் தெளிவாகின. இந்த கிரியைகளை— சடங்குகளை ஏன் இவர்கள் செய்கிறார்கள் என்பதனை அவை எனக்குத் தந்தன. அவர்கள் இவற்றைச் செய்யக் காரணம்: ஒன்று பயம். ஆத்மா தம்மை விட்டுச் செல்லாது அல்லது சாந்தி பெறாது என்ற பயம். இரண்டு மரபு: முன்னோர் செய்தபடியினால் நாமும் அதனைச் செய்ய வேண்டும் என்ற பாரம்பரியம் பேணும் எண்ணம்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூன்று தனித்துவம் பேணல். எல்லோரும் அதனைச் செய்கையில் தாம் செய்யாமல் விட்டால் சமூகம் தன்னை விலக்கி வைக்கும் என்ற நினைப்பில் அதைக் கலாசாரத் தனித்துவமாக எண்ணிச் செய்தல்.

சமூகவியலாளர்கள் ஒரு கிரியை - சடங்கினைச் சமூகம் செய்வதற்கான காரணங்களாக மேற்சொன்ன மூன்று காரணங்களையும் குறிப்பிடுவர்.

மானிடவியலாளர் இதற்கு அளித்த விளக்கம் வித்தியாசமானதாக இருந்தது. மானிடவியல் என்பது பூர்வீக குடிகளையும், புராதன சரித்திரத்தையும் விஞ்ஞான ரீதியாக ஆராயும் ஒரு துறை.

"செத்தவர் வீட்டுக்குள் அவர் விரும்பிய சாமான்களை வைத்து சடங்கு நடத்தும் வடிவம் இன்று நாம் காணும் வடிவம்- இவ் வடிவம் பரிணாம வளர்ச்சியில் காலம் காலமாக மாறிவந்த ஒன்று. இன்று அப்படி வைத்த உணவினை உறவினர், நண்பர், அயலவர் அனைவரும் சாப்பிடுகின்றனர். இதற்கு முந்திய வடிவம் இப்படியில்லை. இறந்தோருக்குப் படைத்த உணவினை இரத்த உரித்துடையோர் மாத்திரம் சடங்கு போல சாப்பிட்டு முடிப்பர். அதற்கும் முந்திய வடிவம் இதை விட வேறு பாடானது அவர், "ஒரு மனித உருவை நிலத்தில் கீறி அதனைச் சோற்றாலும் கறியாலும் நிரப்பி அதனைப் பின்னர் சாப்பிடுவர்- அதற்கும் முந்திய அதன் உருவம் என்னவெனில் இறந்த மனிதனின் ஒரிரு அவயங்களை அக்குடும்பத்தைச் சேர்ந்தோர் சடங்கு முறையிற் புசித்தமை. அதற்கும் முந்திய அதன் வடிவம் ஒரு குழுவில் இறந்த ஒருவரை எனையவர் புசித்த கனிபலிஸம் எனப்படும் நரமாமிசம் புசித்தமை இறந்த ஒருவரின் இறைச்சியை - முக்கிய உறுப்புகளை உண்ணுவதன் மூலம் இறந்தவரின் திறன்களை எனையோரும் பெறலாம் என்ற குழந்தைச் சிந்தனையின் விளைவு அது" என்றார் நரமாமிசம் புசித்த அச் செயல். நாகரிக வளர்ச்சி காரணமாக மெல்ல மெல்ல மாற்றமடைந்து இன்றைய நாகரிக 7 அம் நாள் சடங்கு நிலைக்கு பரிமாணம் பெற்றது. அதற்கு மதம் அளித்த விளக்கமே ஆத்மா வந்து சாப்பிடுகிறது என்ற வியாக்கியானம்.

சடங்குகள், கிரியைகள், விழாக்கள், கரணங்கள், சம்பிரதாயங்கள் யாவும் மனித வரலாற்று வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட குழுவினரிடம் அத்தியாவசியமாகத் தோன்றியவை பின்னால் அவை வேறு உருவங்களும், புது விளக்கங்களும் பெற்றன என்பது மானிடவியலாளர் வாதம்.

இன்றைய சடங்குகளின் — கிரியைகளின் உண்மையான தன்மையினையும் அதன் மூல

www.tamilarangam.net

வடிவினையும் ஆராய வேண்டு மெனில் நாகரிகம் சிறிதும் புகாமல் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் பூர்வீக குடி களை ஆராய வேண்டும் அவர்களிடம் தான் பகட்டு, மிறுக்கு மாற்றம் இல்லாத உண்மைக் கிரியைகளைக் காண முடியும் என்பர் மானிட வியலாளர்.

ஒரு காலத்தில் அவசியமாகச் செய்யப்பட்ட சில கிரியை கள் - சடங்குகள் அதன் அவ சியம் குறைந்த காலத்தில் ஒரு குறியீடாக்கப்பட்டு விடும். நமது பொங்கலை எடுத்துக் கொண்டு இதனைப் பார்க்க லாம். உழவர்களாக அனை வரும் வாழ்ந்த போது மரக் குற்றி நாட்டி, காட்டு இலைக ளாலும், வாழைகளாலும் அலங்கரித்த சூரியனுக்கு நன்றி செலுத்தி - புது நெல்லை பொங்கி அதை உண்டாக்கிய உழவர் அனைவரும் பகிர்ந்து பொங்கலை உண்ட விழாவே பொங்கல் விழா இன்று உழ வர் அல்லாதோரும் பொங்கு கின்றனர் காட்டு இலைகளுக் குப் பதிலாக ஒரு சில மாவிலைத் தோரணம், இரண் டொரு வாழை அனைவரும் இருந்து சாப்பிட்டதற்குப் பதி லாக; அனைத்து வீடுகளுக் கும் பொங்கல் பரிமாறுதல்- இன்றைய அடுக்குமாடி வீட் டில் வாழ்வோர் எலெக்ரிக் குக்கரில் பொங்குவதையும், வாசலில் பிளாஸ்டிக் மாவிலை தொங்க விடுவதை யும் காண்கிறோம். எதற் காகவோ ஆரம்பிக்கப்பட்ட ஒரு சடங்கு வளர்ச்சிப் போக் கில் ஏதோ ஒன்றாக மாறிவிடு கிறது. சடங்குகளினதும் கிரி யைகளினதும் மூலவேர்களை ஆராய முனைவது மானிடவி யல், சமூகவியல், சமூக விஞ் ஞானத் துறைகள்.

நமக்கு மத்தியில் நடை பெறும் அத்தனை சடங்குக ளுக்கும் பூர்வீக அர்த்தங்கள் உண்டு அவற்றுக்கு விஞ்ஞான ரீதியாக அல்லாமல் சமயரீதி யாக தம் கற்பனைக்கு ஏற்ப புதுப்புது விளக்கங்கள் தரு வோரும் உளர். கண்ணதாசன் இந்து மதத்திற்கு அளித்த விளக்கங்கள் அவற்றைச் சார் ந்தனவே.

நம் மத்தியிலே செத்தவீடு, கல்யாணவீடு, சாமத்தியவீடு, குழந்தை பிறப்பு வீடுகளில் சடங்குகள் பல நடைபெறுகின் றன. இவற்றை இதுவரை யாரும் தொகுத்து வகுத்துத் தரவில்லை. அவற்றைப் பற்றி தமிழில் இதுவரை விஞ்ஞான பூர்வமான ஆய்வுகளும், வர வில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தூரத்து வெளிச்சம்

**சொ**ந்த மண்ணில்
சுயதொழில்
செய்ய முடியாமல்
வெதும்பும்
சீவல் தொழிலாளிக்கு
விடியலின் வெளிச்சம்
எப்பதான் கிட்டும்
தோட்டத் தொழிலுமில்லை
தொலைதூர பயணமுமில்லை
வாட்டமுடனே
வடிக்கின்றுன் கண்ணீர்
ஆருகவோட !
பக்குவமாய்ப் பாளையிடுக்கி
பாண்புடனே கள்ளிறக்க
இரைச்சலுடன்
குண்டு மழை பொழிந்து
தாளப் பறந்து
பனையோலையை முட்டி
செல்கின்றது கெலி
சங்கமுமில்லை
சங்கமியங்க கள்ளுமில்லை
வீட்டில் உலையும்தான் ஏறவில்லை
தூர வானத்து வெளிச்சம்
இவர்கள் குடிசையின்
முற்றத்தைத் தொடாதா ?

< திடலூர் ஞானி >

## மரணவீடு......

இச் சடங்குகள் பற்றிய விஞ்ஞானபூர்வமான ஆய்வுகள் ஏன் நம்மத்தியில் இல்லை என்பதைக் கேட்டுப் பார்க்க வேண்டும்.

இதனை ஆராய்வதற்குரிய மானிடவியல், சமூகவியல் துறைகள் நம் மத்தியில் வளரவில்லை இன்னமும் நாம் மரபு பேணும் சமூகமாக இருப்பதனால் மரபு சார் நிகழ்ச்சிகளை ஆராய்ச்சிக்கு உட்படுத்தும் மனோபாங்கு எமக்கு ஏற்படவில்லை. எமது இளம்தலைமுறையையும், டாக்டர், என்ஜினியர் என்று தொழில்சார் துறைகளில் ஈடுபடுத்துகிறோமே ஒழிய அறிவுசார் துறைகளான மானிடவியல், சமூகவியல் போன்ற சமூக விஞ்ஞானத் துறைகளில் ஈடுபடுத்துவதில்லை: நமது சமூகத்தில் ஏற்படும் அறிவு வளர்ச்சிதான் இந்த ஆய்வுகளையும் வளர்க்கும்

சி. மௌனகுரு
நன்றி: வீரகேசரி

POST FACH 12..
3000 BERN 11
SWITZERLAND

www.tamilarangam.net



ஈ·ரவித்த மண்ணில்
ஆழப் பதிந்த என் சோகத்தின் சுவடுகள்
என் வரலாற்றை மறுபதிப்புச் செய்துகொள்ளும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்